
திருவாளர் சபா குகதாசனின் மணிவிழா மலர்

# குகப்பேழை

60



வெளியீடு:-

மணிவிழாக்குழு

2011


# திருவாளர் சபா. குகதாசன் அவர்களின்

ஓய்வு நிலை பிரதி அதிபர்

யா/ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலயம்

# மணிவிழா மலர்

# குகப்பேழை



வெளியீடு:

**மணிவிழா மலர்க்குழு**

**28.05.2011**

| | | |
|---|---|---|
| நூல் | : | மணிவிழாமலர் "குகப்பேழை" |
| வெளியீட்டுத்திகதி | : | 28.05.2011. |
| நூலின் அளவு | : | $B_5$ |
| தாளின் தன்மை | : | 70g |
| எழுத்தின் அளவு | : | 12 |
| பக்கங்கள் | : | 117+xix |
| வர்ணப்பக்கங்கள் | : | 04 |
| பிரதிகள் | : | 500 |
| அச்சுப்பதிப்பு | : | ஷாம்பவி பதிப்பகம், இல.276, கஸ்தூரியார் வீதி கன்னாதிட்டி, யாழ்ப்பாணம். 021 2224143 |
| வெளியீடு | : | மணிவிழா மலர்க்குழு |

# பொருளடக்கம்


| | |
|---|---|
| 01. ஆசியுரை. | i |
| 02. வாழ்த்துச் செய்திகள். | ii |
| 03. இதழாசிரியர் பேனாவிலிருந்து. | xvii |
| 04. குருவாய் வந்த குகனே வாழீ | 01 |
| 05. எமது கல்விநிறுவனத்தின் இயக்குனராய் | 02. |
| 06. பார் முழுதும் ஆர்ப்பரிக்கும். | 03 |
| 07. அகவைப்படிகளில். | 04 |
| 08. சேவை தொடரட்டும். | 07 |
| 09. மணிவிழா நாயகனுக்கு கவித்துளி | 09 |
| 10. ஒழுக்கம். | 11 |
| 11. கனவு மெய்ப்பட வேண்டும். | 16 |
| 12. கிராமங்களில் | 21 |
| 13. மெல்லத் தமிழ் இனிச்சாகும். | 24 |
| 14. Friendship. | 31 |
| 15. மரத்துப் போன வாழ்வு. | 32 |
| 16. நாட்டார் பாடல்களில் தொழிற்பாடல்களின்..... | 33 |
| 17. கல்விக் கட்டுமானத்தில்........ | 41 |
| 18. பெருகிவரும் விவாகரத்திற்கான........ | 50 |
| 19. பரதநாட்டியத்தில் தமிழிசைப் பாடல்கள் | 56 |
| 20. யாழ்ப்பாணத்து உணவுப் பழக்கவழக்கங்கள் | 60 |
| 21. திட்டமிடல் ஓர் அறிமுகம். | 65 |
| 22. காலநிலை மாற்றம். | 70 |
| 23. உலகளாவிய ரீதியில் திண்மக் கழிவகற்றல் | 86 |
| 24. தர்க்கப் படலைகள். | 91 |
| 25. கிறிஸ்தத்வைதம். | 102 |
| 26. சீக்கியமும் குருகிரந்த சாகிப்தும் | 107 |
| 27. The Imortance of Mastering English. | 112 |
| 28. Let's learn about internet. | 115 |
| 29. நன்றிகள். | 117 |

எங்கள் மணி விழா நாயகன்



திரு. சபாபதி குகதாசன் Sp. Social Studies Trd., SLTS-1.

**ஆவரங்கால் நடராஜா இராமலிங்கம் தேவஸ்தானம்**
**பிரதம குரு**
**"பிரதிஷ்டாவித்தகர்" பிரமஸ்ரீ வே.நடராசக் குருக்கள் அவர்கள்**
வழங்கிய

# அருள் ஆசி உரை



இலங்கையின் வடபால் அமைந்த யாழ்ப்பாணக் குடாநாட்டின் மத்தியாக ஆவரங்கால் சிறந்த கல்விமான்கள், தர்மசீலர்கள், புராணவித்தகர்கள், கல்விச்சாலைகள், வழிபாட்டுத்தலங்கள், நிறைந்து விளங்கும் கிராமமாகும். இக்கிராமத்தில் சிறந்த நடராஜ இராமலிங்க வித்தியாலயம் அமைந்துள்ளது. அவ் வித்தியாலயத்தில் பல அசிரியர்கள் கடமையாற்றி கல்வியை புகட்டினார்கள். அவர்களில் நெடுங்காலமாக முத்துக்குமாரசாமி ஆசிரியர் அதிபராகக் கடமையாற்றினார். அவருடன் இணைந்து திரு.ச.குகதாசன் ஆசிரியராகவும்,கல்வியை மாணவர்களுக்கு புகட்டினார். பின்பு உப அதிபராகவும் கடமையாற்றி மாணவர்களுக்கு கல்வியைப் புகட்டி பலவருடங்கள் சேவையாற்றி ஓய்வுபெறும் அன்னாருக்கு மாணவர்களும் அசிரியர்களும் ஊர்மக்களும் அவரின் சேவையை பாராட்டி விழா எடுத்துள்ளார்கள். பாராட்டுவிழா நாயகராம் திருவாளர் குகதாசன் அவர்களுக்கு பர்வதாம்பிகா சமேத நடராஜா இராமலிங்கபெருமானின் அருளாட்சி கிடைக்க வேண்டுமென இறைவனை பூஜித்துவணங்கி பிரார்த்தனை செய்து நல்லாசி கூறி வாழ்த்துகிறேன்.

"சுபம்"

பிரமஸ்ரீ வே. நடராசக் குருக்கள்

**வடமாகாண கல்வி பண்பாட்டலுவல்கள்**
**விளையாட்டுத்துறை அமைச்சு,**
**பிரதிச் செயலாளர்**
**திரு.வே.தி. செல்வரத்தினம்**

வழங்கிய

## *வாழ்த்துச்செய்தி*



திரு. குகன் ஆசிரியர் தான் கற்பிக்கும் பாடசாலையின் முகாமைக்கு வலது கரமாக நின்று செயற்படுபவர். பாடசாலையில் தானே முன்வந்து பல செயற்பாடுகளையும் ஆற்றுபவர். யா/ ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலயத்தின் சாதனைகளிற் குகன் ஆசிரியரின் பங்கு அளப்பரியது. தனது சகோதர ஆசிரியர்களுடன் நல்ல உறவைப் பேணுவதுடன், தனது நெகிழ்ச்சித்தனமான ஆளுமையால் ஆசிரியர்களிடையே எவ்வித முரண்பாடும் ஏற்படாது பாதுகாத்து ஆசிரியர்கள் சகலரும், ஒருவருடன் ஒருவர் அன்பாகவும், பரிவாகவும் நடக்க உதவுபவர். பாடசாலை மாணவர்களிடையே ஒழுக்கமும், கட்டுப்பாடும் இருப்பதை உறுதிசெய்பவர் குகன் ஆசிரியர் அவர்கள். தான் கற்பிக்கும் பாடத்தில் புலமையுள்ள திரு.குகன் ஆசிரியர் தனது உத்திகளால் அப்பாடத்தில் உயர்பெறுபேறுகளைப் பெற உழைப்பவர். கிராமப்புறப் பாடசாலையை ஒரு வலுவுள்ள பாடசாலையாக மாற்றுவதில் அவரது ஆளுமை பெரும்பங்காற்றியுள்ளது. திரு.குகன் ஆசிரியர் அவர்கள் தனது அறுபதாவது வயதில் ஓய்வு பெற்றாலும் தான் கற்பித்த பாடசாலைக்குத் தனது பங்களிப்பினைத் தொடர்ந்து வழங்கி வலுவுடையதாக்க வேண்டும் என்பது எனது வேண்டுகோள். தனது ஓய்வுக்காலத்தில் சகல செல்வங்களையும் பெற்று வாழ எனது வாழ்த்துக்கள்.

திரு. வே. தி. செல்வரத்தினம்

**யாழ் .கல்வி வலய கல்விப்பணிப்பாளர்**
**திருமதி அருளேஸ்வரி வேதநாயகம்**

வழங்கிய

## *வாழ்த்துச்செய்தி*



யாழ்கல்விவலயத்தில் கோப்பாய் கோட்டத்தில் புகழ் பூத்த பாடசாலையாம் வகை II ஐச் சேர்ந்த யாழ் /நடராஜ இராமலிங்க வித்தியாலயம். அப்பாடசாலை என்றால் பயிற்சி ஆசிரியர்கள் விரும்புவது அதிகம். அப்படிப்பட்ட பாடசாலையின் பிரதி அதிபராக கடமையாற்றி ஓய்வு நிலையில் உள்ளவரே குகன் மாஸ்ரர் அவர்கள்.

அவர்கள் பாடப்புலத்தில் மிகவும் சிறந்த அறிவைக் கொண்டவர். எந்த நேரத்திலும் யார் எதைக் கேட்டாலும் தயங்காது பதிலளிக்கக் கூடியவர். எனது அயல் ஊரைச் சேர்ந்த குகன் மாஸ்ரர் அவர்கள் 40 வருட காலமாக கல்விச்சேவையை ஆற்றி வருவதை நான் நன்கு அறிவேன். வயதோ 60. தோற்றமோ 45. சிறந்த நிர்வாகத்ததிறமை கொண்ட குகன் மாஸ்ரர் அவர்கள் எங்கே சென்றும் எப்பிரச்சினைகளையும் வெல்லக்கூடியவர். அவரால் பயனடைந்த மாணவர்கள் இன்று பல்துறை தொழில்நுட்பத்தில் சிறந்து விளங்குகின்றனர். ஆசிரியர்களாக, பொறியியலாளர்களாக, வைத்தியர்களாக விளங்குவோர் இவருடைய உறுதியான அத்திவாரத்தை ஒரு போதும் மறக்கமாட்டார்கள். எனவே இவர் நோய் நொடி அற்ற நீண்ட ஆயுளைப் பெற்று கல்விச்சேவையில் ஈடுபட வேண்டும் என எல்லாம் வல்ல உலவிக் குலப் பிள்ளையாரை வேண்டி வாழ்த்துகிறேன்.

திருமதி. அ. வேதநாயகம்

## வலிகாமம் கல்வி வலய
## வலயக் கல்விப் பணிப்பாளர்
## திரு.ஆ. ராஜேந்திரன்
வழங்கிய
# வாழ்த்துச் செய்தி



1980ஆம் ஆண்டு காலப்பகுதி. நாம் கோப்பாய் ஆசிரிய கலாசாலையில் அனுமதி பெற்றிருந்தவேளை. ஆசிரியமாணவர்கள் தம்மை அறிமுகஞ்செய்யும் நிகழ்வு. ஒவ்வொருவரும் மேடையேறி தமது எண்ணங்கள், சிந்தனைகள், பொழுது போக்குகள் மற்றும் எதிர்கால இலட்சியம் பற்றி எடுத்துக்கூறினர். அந்த வரிசையில் ஒரு இளைஞன் மேடையில் கம்பீரமாக நின்று "என் பெயர் குகதாசன். என்னைக் குகன் என்றே பலரும் அழைப்பர்' என்ற அறிமுகத்துடன் தொடர்ந்து சில வார்த்தைகளைக் கூறினார். அவர் அன்று கூறிய அந்த வார்த்தைகள் இன்றும் என் மனதில் பசுமையாக நிறைந்துள்ளன. அன்றிலிருந்து மூன்று தசாப்தகாலமாக இந்த "குகன்" என்ற நிறுவனத்தை குகன் என்ற நல்ல மனிதனை நான் அவதானித்து வருகின்றேன். அன்பு பாராட்டி வருகின்றேன்.

எடுப்பான தோற்றம்: என்றுமே நேர்த்தியான உடையலங்காரம்: நேரிய சிந்தனைகள்: தன்னைச் சிறப்புடன் வைத்திருப்பதுபோல் தான் சார்ந்த நிறுவனத்தையும் சிறப்பாக வைத்திருக்கும் தன்மை: தான் பணிசெய்யும் பாடசாலை - நிர்வகிக்கும் குகன் நிறுவனம் இரண்டையும் சமநோக்குடன் பார்க்கும் தன்மை: மாணவர்கள் - குறிப்பாக தான் வாழ்ந்த, தான் வாழும் கிராமப்புற மாணவர்கள் கல்வியிற் சிறக்க வேண்டுமென்ற வேணவா: அதற்காக தனது நிறுவனத்தின் விதிமுறைகளை, மாணவரின் வருமான இயலளவுக்கேற்ப தளர்த்திய பெருந்தன்மை: மாணவரின் கல்வி வாழ்வில் மட்டுமல்ல, அவர் தம் புறவாழ்விலும் காட்டும் அக்கறை என பல நல்ல அகப்புறப் பண்புகளை நான் குகனிடம் அவதானித்துள்ளேன்

வசிட்டர் வாயால் 'மகரிஷி' பட்டம் பெற்றதைப் போல், பல அதிபர்கள், அதிகாரிகளால் பராட்டப்பட்டவர் திரு.குகன் அவர்கள். குகனை அவரது கல்வி மற்றும் தனிப்பட்ட வாழ்வைப் பல்லாண்டு காலமாக மதிப்பீடு செய்து அவருக்கு இவ்வுயரிய விழாவை எடுக்க முன்வந்துள்ளீர்கள். தங்களால் முன்னெடுக்கப்படும் இவ் விழா சாலப்பொருத்தமானது. இன்று நடைபெறும் விழா இவரது கடந்தகால சேவைக்கான கைதட்டலாக அமைவதுடன், அவரது வாழ்நாட் கல்விச் சேவைக்கான சக்தியாகவும் அமையவேண்டும். இன்றைய தினம் இந்த நல்ல குகனை வாழ்த்தும் பல நல்ல உள்ளங்களுடன் நானும் இணைந்து கொள்கின்றேன். வளர்க தங்கள் பணி.

**திரு. ஆ. ராஜேந்திரன்**

**யாழ் கல்வி வலய**
**பிரதிக் கல்விப் பணிப்பாளர்**
**திரு.யோ. ரவீந்திரன்**
வழங்கிய

## *வாழ்த்துச் செய்தி*



இன்று மணிவிழாக் காணும் சபா.குகதாசன் ஆசிரியரை வாழ்த்துவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன். எனது வலயத்தைச் சேர்ந்த ஆசிரியர் என்ற காரணத்தால் அவருடைய கற்பித்தல் நடவடிக்கைகளை நான் நன்கு அறிவேன். சமூகவிஞ்ஞான, வரலாற்றுப் பாடங்களில் சிறப்புத்தேர்ச்சி பெற்ற இவர் பல போட்டிகளில் பல சாதனைகளை நிலை நாட்டியுள்ளார். ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலயத்தின் சிறந்த நிர்வாகியாக திகழ்ந்த இவர் தனக்கு கொடுக்கப்பட்ட கடமையையே கண்ணாக கொண்டு செயற்படுபவர். பாடசாலைத் தேவைகளை உடனுக்குடன் எமக்கு அறிவித்து அதில் பூரண வெற்றியும் அடைந்துள்ளார். அவர் ஒரு தனியார் கல்வி நிறுவனத்தை நடத்தினாலும் அதைவிட பாடசாலையையே மேலான சொத்தாக கருதி செயற்பட்டார். கல்வித்துறையில் மேலும் மேலும் சேவைகளை ஆற்ற வேண்டுமென சந்நிதி முருகனை வேண்டி நிற்கின்றேன்.

திரு. யோ. ரவீந்திரன்

**யாழ் பல்கலைக்கழக வணிகபீட**
**முகாமைத்துவ கற்கைகள்**
**கணக்கியல் துறை தலைவர்**
**பேராசிரியர் கலாநிதி தி.வேல்நம்பி**

வழங்கிய

## *வாழ்த்துச் செய்தி.*



ஆசிரியரை மாணவனும் மாணவனை ஆசிரியரும் ஏற்றுக்கொள்ளும் ஓர் நிலையில்தான் ஆசிரியர் மேன்மை அடைகின்றார்.இதற்கமைய நீண்டதொரு மாணவ சமூகத்தினால் ஏற்றுக் கொள்ளப்பட்ட தரமான ஆசிரியராக திரு.சபாபதி.குகதாசன் அவர்கள் விளங்கி வருகிறார் என்பது எல்லோருக்கும் தெரிந்த உண்மை. கையிலே எத்தகைய பாடக்குறிப்புக்களும் இன்றி சமூகவியல் வரலாறு தொடர்பான அனைத்து விடயங்களையும் தன்மனதிலே பதித்து வைத்து அவற்றை சரளமாகவும் சுவையாகவும் சொல்லி கற்பிக்கும் ஆற்றல் படைத்தவர். இத்தகைய இயலளவும் ஆற்றலும் திரு.ச.குகதாசன் போன்ற ஒரு சில ஆசிரியர்களுக்கே உரித்தான கொடை.

கடைமாணாக்கரையும் கவரக்கூடிய வகையில் கல்வி போதிப்பதில் வல்லவர். இதனால்தான் அவரது பாடத்தில் மாணவர்கள் சிறப்புச்சித்தி பெறுவதுண்டு. சுருங்கச் சொல்லின் ஆசிரியவாண்மை அவரிடம் நன்கு விருத்தியடைந்துள்ளது. "ஒரு ஆசிரியர் எப்படி இருக்கவேண்டும்" என்பதற்கு இலக்கணமாக திகழ்வதுடன் மற்றையவர்களுக்கு முன்னோடியாகவும் விளங்குகின்றவர். எப்போதும் சுத்தமான ஆடையுடன் செந்தளிப்பாகவும் கம்பீரமாகவும் தென்படும் இவர் அனைவராலும் விரும்பப்படும் பண்பையும் தோற்றத்தையும் கொண்டவர். அகவை அறுபதாயினும் அவர் நாற்பது வயது தோற்றத்தினுடனேயே காட்சியளிப்பது அவரது தூய சிந்தனையையும் பிறர்க்கு உதவும் மனப்பாங்கினையும் காட்டுகின்றது. அனைவரையும் வசீகரிக்கும் வார்த்தைப் பிரயோகமுள்ள இவர் சிறந்ததோர் சமூக சேவையாளர். 'குகன் கல்வி' நிறுவனம் என்றதோர் கல்விநிலையத்தினூடாக மாணவர்களுக்கு குறைந்த கட்டணத்திலுலும் வறிய நிலையில் இருப்போர்களுக்கு இலவசமாகவும் கல்வி போதித்து வருகின்றமை போற்றுதற்குரியது. இத்தகைய ஒருவரிடம் கல்வி பெறக்கூடிய வாய்ப்பும் வாழ்த்தும் எனக்கு கிடைத்தமையே என் வளர்ச்சிக்கு காரணம் என்பதையும் மகிழ்வுடன் குறிப்பிடுகிறேன். இத்தகைய சால்புடையாளன் இன்னும் பல்லாண்டு காலம் வாழ்ந்து சமூகத்திற்கு மென்மேலும் சேவையாற்ற வேண்டுமென வாழ்த்துவதுடன் அவரின் நீண்ட சுகநல ஆயுளுக்காக இறைவனை வேண்டிப் பிராத்திக்கின்றேன்.

*அன்பு மாணவன்*
*பேராசிரியர் கலாநிதி தி.வேல்நம்பி*

**யாழ் . பல்கலைக்கழக கல்வியற்துறை**
**சிரேஸ்ட விரிவுரையாளர்**
**கலாநிதி.த.கலாமணி**
வழங்கிய

## வாழ்த்துச் செய்தி.



மதிப்பிற்குரிய திரு. குகன் ஆசிரியர் மணிவிழா காணுகின்றார் என்ற செய்தி மகிழ்ச்சி தருகிறது. எனது நீண்ட கால நண்பர் அவர். நான் பாடசாலை ஆசிரியராகக் கடமையாற்றிய காலங்களிலேயே நான் மதித்துப் போற்றிய ஆசிரியர்களுள் அவரும் ஒருவர்.

ஆசிரியம் இன்று வாண்மையாக, அதாவது ஓர் உயர்தொழிலாக (profession)மதிக்கப்படுகிறது. ஆசிரியத்தின் பணி போதனை மாத்திரம் அன்று. தனது வாடிக்கையாளர்களான மாணவர்களின் நலன்களைக் கருத்திற்கொண்டு அவர்களின் முன்னேற்றத்திற்காக, அறிவார்ந்த நிலையில் அர்ப்பணிப்புடன் ஆசிரியர் ஒருவர் சேவையாற்ற வேண்டுமென எதிர்பார்க்கப்படும் நிலையில் இந்த எதிர்பார்ப்பை நிறைவேற்றுபவரே வாண்மையாளராகக் கணிக்கப்படுவார். திரு.குகன் அவர்கள் ஆசிரியத்தின் தத்துவார்த்துவப் பின்னணியை அறிந்தவராய் என்றும் வாண்மையாளராகவே செயற்பட்டு வருபவர்.

மாணவர்களிடையே கட்டுப்பாட்டையும், ஒழுங்கையும் நிலவச் செய்வதே ஆசிரியரின் பணி என்ற சிந்தனையே நெடுங்காலமாக நிலைத்து வந்துள்ளது. ஆனால் இன்று இவற்றுக்கும் அப்பால் மானிடப் பரிமாணங்களை (Humanistic Dimensions) வெளிப்படுத்தி மாணவரின் ஆற்றலை மதித்து, தமது அறிவைத் தாமே கட்டி எழுப்பக் கூடியவராய் அவர்களை உருமாற்றம் (transformation)செய்யும் ஒரு வளவாளராய் (Resource Person)ஆசிரியர் விளங்கவேண்டும் என்ற வகிபாகமே (role) ஆசிரியரிடமிருந்து பெரிதும் எதிர்பார்க்கப்படுவது. திரு.குகன் அவர்களை, மானிடப்பரிமாணங்களை வெளிப்படுத்தி நிற்கும் ஒரு வளவாளராகவே நான் காண்கின்றேன்.

ஓய்வு பெறும் நிலையிலும் திரு. குகன் அவர்களின் பணி தொடர வேண்டும். அவருக்கு நீடிய ஆயுளையும், நிறைவான சுக நலத்தையும் இறைவன் அருள வேண்டும் என பிரார்த்திக்கிறேன்.

*கலாநிதி. த. கலாமணி*

## வடமாகாண கல்வித்திணைக்கள
## பிரதிக்கல்விப் பணிப்பாளர்
### திரு.த.கிருபாகரன்
வழங்கிய
*வாழ்த்துச்செய்தி*



ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலய பிரதி அதிபர் சபா.குகதாசன் அவர்களினுடைய மணிவிழாவிற்கு வாழ்த்துச் செய்தியை வழங்குவதில் பெரு மகிழ்ச்சி அடைகின்றேன். வயது அறுபதை அடைந்தாலும் இளமைத்துடிப்புடன் செயற்படும் மணிவிழா நாயகன் கல்வித்துறையின் ஒரு சிகரம் என்றே கருதுகின்றேன். எனவே அவர் எதுவித நோய் நொடியுமின்றி தொடர்ந்து பல வழிகளில் கல்விப்பணிக்கு சேவையாற்றுவாரென இடைக்காடு புவனேஸ்வரி அம்பாளை வேண்டுகின்றேன். கடமை, கட்டுப்பாடு ஆகிய இரண்டையும் குறிக்கோளாகக் கொண்டு செயற்படும் இவர் சமூக விஞ்ஞான வரலாற்றுப் பாடங்களில் சிறப்புத் தேர்ச்சி பெற்றிருப்பதை நான் அறிந்து மகிழ்ச்சி அடைகின்றேன்

"கற்கை நன்றே கற்கை நன்றே
பிச்சை புகினும் கற்கை நன்றே"

திரு. த. கிருபாகரன்



## பிரதேச செயலர் அவர்களின்
## *வாழ்த்துச் செய்தி*

சிறுப்பிட்டியூர் புகழ்பூத்த ஆசிரியர் திரு. சபாபதி குகதாசன் அவர்களின் மணிவிழா நூலிற்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

யா/ ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலயத்தில் ஆசிரியராக பின்னர் பதவி உயர்வுடன் பிரதி அதிபராகக் கடமையாற்றி தனது கற்பித்தல் திறமையினாலும், நிர்வாகத்திறமையினாலும் கோப்பாய் பிரதேசத்தில் பெருமளவு மாணவர்களை உயர் பெறுபேறு அடைய வழிசமைத்த மணிவிழா நாயகன் திரு. சபாபதி குகதாசன் என்றும் பாராட்டுக்குரியவர்.

மாணவர்களை தனது கற்பித்தல் திறனூடாக கவர்ந்திழுத்து அவர்களை சமூகக்கல்விப் பாடத்தில் உயர்ந்த பெறுபேறுகளை பெற்றுக் கொள்வதற்கு தன்னாலான சேவையை ஆற்றியமை பாராட்டுக்குரியது. தான் கற்பித்த பாடசாலையிலே மாணவர்களை சீரான நிர்வாகக் கட்டுக்கோப்பிற்குள் கொண்டு வருவதற்கு பிரதி அதிபராக கடமையாற்றி தனது பணியினை செவ்வனே ஆற்றியிருந்தார்.

இவ்வாறு அரும் பணியாற்றி தொடர்ந்து ஆசிரியத் தொழில் மூலம் நல்மாணாக்கரை உருவாக்கும் மணிவிழா நாயகன் தேக ஆரோக்கியத்துடனும், நீண்ட ஆயுளுடனும், குடும்பத்தாருடன் வாழ எல்லாம் வல்ல இறையருளை வேண்டி நிற்கின்றேன்.

திரு.ம. பிரதீபன்
பிரதேச செயலர்,
பிரதேச செயலகம்,
வலிகாமம் கிழக்கு.

# வலிகாமம் வடக்கு, பிரதேச செயலாளரின் அவர்களின்
## வாழ்த்துச் செய்தி

மதிப்பிற்குரிய சபாபதி குகதாசன் அவர்களின் மணிவிழாவுக்கு வாழ்த்துச்செய்தி வழங்குவதில் அவருடைய மாணவன் என்ற ரீதியில் நான் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

ஆசிரியராக பணிபுரிய ஆரம்பித்த முதல் இன்று யா/ ஆவரங்கால் நடராஜ இராமலிங்கம் வித்தியாலய உபஅதிபர் பதவி வரைக்குமான அவரது பணி மிக்க மகோன்னதமானது.

மாணவர்களின் கல்வி நடவடிக்கைகளில் மிகுந்த கரிசனை கொண்ட அவர் பாடசாலையில் மாத்திரம் அவர்களது கல்வி மேம்பாட்டில் அக்கறை காட்டாது பாடசாலைக்கு அப்பாலும் தனது கல்விப் பணி தொடர்ந்தவர்.

தனியார் கல்வி நிறுவனங்களுக்கு முன்மாதிரியாக அவரது குகன் கல்வி நிறுவனம் செயற்பட்டதை இங்கு மகிழ்வுடன் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

சமூகக்கல்வி என்னும் பாடத்தினை மாணவர்கள் ஆர்வத்துடன் கற்பதற்கு அதிவார்ந்த சபாபதி குகதாசன் அவர்கள் மேற்கொண்ட கல்விபுகட்டல் பாணி மிகவும் சிறப்பானது. அது காரணமாகவே மாணவர்கள் அந்தப் பாடத்தில் அதிக அக்கறை காட்டினார்கள்.

என்னுடைய ஆரம்ப காலத்து ஆசான்களில் அறிவுப்புலமைமிக்க சபாபதி குகதாசன் அவர்கள் முதன்மையானவர். அந்தவகையில் அவருடைய மணி விழா சிறப்பாக நடக்க எனது வேண்டுதல்களை தெரிவித்துக் கொள்கின்றேன்.

திரு. த. முரளிதரன்
பிரதேச செயலாளர்,
வலிகாமம் வடக்கு,
தெல்லிப்பளை.

## தீவகம் வடக்கு ஊர்காவற்துறை
## உதவி அரசாங்க அதிபர்
### திரு.க.ஸ்ரீமோகனன்
வழங்கிய
# *வாழ்த்துச்செய்தி*



அன்னை, பிதா, குரு, தெய்வம் என்ற வரிசையில் தெய்வத்துக்கு முன்னிலையாக ஆசிரியர் விளங்குகின்றார். அவ்வகையில் எமது மண்ணில் ஆரம்பகாலந்தொட்டு இற்றைவரை தனது கல்விப்பணியினை சிறப்பாக மேற்கொண்டுவரும் திரு.சபாபதி குகதாசன் (குகன் ஆசிரியர்) அவர்களது பணி போற்றுதற்குரியது.

இன்று தனது அறுபதாவது வயதில் மணிவிழாக்காணும் ஆசிரிய நாயகன் ஆசிரியராக, உப அதிபராக, பிரதி அதிபராக கடமையாற்றி இன்று ஒய்வுபெற்றுச் செல்லும் இவர் யாழ்ப்பாண மண்ணில் ஆவரங்கால் நடராஜா இராமலிங்கம் வித்தியாலயத்தில் சமூகக்கல்வி ஆசிரியராகவும் பிரதி அதிபராகவும் கடமையாற்றி கல்விவாழ்க்கையில் சமூகக்கல்வியில் தனக்கென தனிமுத்திரையினை பதித்துக் கொண்டவர்.

இன்றைய நாளில் இம்மணிவிழாக் காணும் விழா நாயகன் திரு.சபாபாதி.குகதாசன் அவர்கட்கு இவ்விழாவினையொட்டி வெளியிடப்படவிருக்கும் சிறப்பு மலருக்கு எனது வாழ்த்துச் செய்தியை வழங்குவதில் அவரது பழைய மாணவர்களில் ஒருவன் என்ற வகையில் பெரும்மகழ்ச்சியடைவதுடன் அவரது ஓய்வுகாலம் சீரும் சிறப்புமாக அமைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்தித்து நிறகின்றேன்

**திரு. க. ஸ்ரீமோகனன்**

**சட்டத்தரணி திரு. சி. சிவனேசன்**

வழங்கிய

## *வாழ்த்துச்செய்தி*



திரு.சபாபதி குகதாசன். கல்வித்துறை சமூகத்தில் தெரியாதவர்கள் மிகக்குறைவு என்றே கூறலாம். ஒரு காலத்தில் எனது மாணவனாக இருந்தவர். என்னைப் பொறுத்தளவில் ஒரு சிலருக்குத்தான் நான் ஆசிரியனாக இருந்துள்ளேன். ஆனால் திரு.குகதாசன் அவர்கள் பல்லாயிரக்கணக்கான மாணவர்களுக்கு ஆசிரியராக இருந்தும் இருந்து கொண்டும் இருக்கிறார் என்பது எல்லோருக்கும் தெரிந்த விடயம். அவரிடம் நாம் கண்ட சிறப்புஅம்சங்கள் எல்லோரிடத்திலும் மிகவும் அன்பாகவும், பண்பாகவும், அடக்கமாகவும் பழகி எல்லோரையும் மதித்து நல்வழிப்படுத்திய ஆசிரியராக என்றும் பெருமைகொள்ளுமளவிற்கு திகழ்ந்து கொண்டிருக்கிறார்.

"குகன்" தனியார் கல்வி நிறுவனத்தை வடமாகாணத்தில் தெரியாதவர் குறைவென்றே கூறலாம். இந்தக்கல்விநிறுவனத்திலே நான் கண்ட சிறப்பான அம்சம் தனது கல்விநிறுவனத்திற்கு வருகின்ற பிள்ளைகளுக்கு கல்வி கற்றுக் கொடுப்பது மட்டும் தனது கடமையாக கருதாமல் நற்பழக்கங்களையும், ஒழுக்கங்களையும் கற்றுக்கொடுப்பதோடு கற்றல் செயற்பாடுகள் முடிவடைந்து வெளியேறும் மாணவ, மாணவிகளுக்கு வீதியில் எந்த ஆபத்தும் ஏற்படாமல் தானே "யாழ் பருத்தித்துறை வீதியில் நின்று எல்லா மாணவர்களையும் வீட்டிற்கு அனுப்பி வைக்கும் 'குகன் ஆசிரியர்' அவர்களின் கடமை உணர்ச்சி என்னையும் மிகவும் கவர்ந்த ஒன்றாகும்.

இவரது கல்வி நிறுவனத்தில் உயர்தரம் வரை கல்விகற்று பல்கலைக்கழகத்திற்குள் பிரவேசித்த எத்தனையோ மாணவர்கள் இன்று எமது சமூகத்தில் உயர்ந்த அந்தஸ்தில் எல்லோருக்கும் பல்தரப்பட்ட சேவைகளை ஆற்றிக்கொண்டிருக்கும் பெருமையும் இவரையே சாரும்.

எனவே தனது 61வது அகவையில் பிரவேசிக்கின்ற சிறந்த கல்விமானான "குகன்" ஆசிரியர் அவர்களின் சேவை எமது மாணவ சமுதாயத்திற்கு தொடர்ந்தும் இருக்க இறைவனை வேண்டுவதோடு இவரது சேவையை பாராட்டும் நிகழ்வு மிகவும் சந்தோசப்பட வேண்டியதொன்றாகும் என்பதனை வாழ்த்துகிறேன்.

*திரு. சி. சிவனேசன்*

**கோப்பாய் கல்விக்கோட்ட**
**கோட்டக் கல்விப் பணிப்பாளர்**
**திரு. வே. பாலசுப்பிரமணியம்**
வழங்கிய

# வாழ்த்துச் செய்தி



ஒருவருடைய புகழைப் பறைசாற்றி நிற்பது அவர்கள் செய்கின்ற நற்காரியங்களே. திரு.சபாபதி குகதாசன் அவர்கள் ஆற்றிய சேவையை நயந்து அவர்களது மாணவர்களாலும், சமூகத்தினாலும் எடுக்கப்படும் மணிவிழாவின் மலருக்கு வாழ்த்து செய்தி ஒன்று வழங்க வாய்ப்புக் கிடைத்ததையிட்டு மட்டில்லா மகிழ்ச்சி அடைகின்றேன். திரு.சபாபதி குகதாசன் அவர்கள் பல்துறை ஆளுமை மிக்க ஓர் நல்லாசிரியர். ஓர்நல்ல சமூகசேவையாளர். ஆசிரிய பணியில் அவர் காட்டிய ஆளுமை வியந்து பாராட்டத்தக்கது. மாணவர்களின் இயல்புகளை அறிந்து அவர்களின் இயல்புகளுக்கேற்ப புதியபுதிய உத்திகளைக் பயன்படுத்தி கற்பிப்பதில் வல்ல ஒரு ஆசான். தன்னுடைய பாடங்களை மட்டுமன்றி ஏனைய பாடங்களையும் மாணவர்கள் கற்பதற்கு வழிகாட்டியவர். பொருளாதார ரீதியில் பின்தங்கிய மாணவர்களுக்கு பல்வேறு உதவிகளையும் புரிந்து கல்விக்கு ஊக்கம் அளித்தவர். இதனால் "குகன் சேர்" என மாணவர்களால் வாஞ்சையோடு அழைக்கப்படுபவர். மாணவர்கள் ஒழுக்கம் நிறைந்தவராக வாழவேண்டும் என்ற அசையாத நம்பிக்கை உடையவர். குகன்சேரிடம் தங்கள் பிள்ளைகளை அனுப்பினால் அவர்கள் நல்ல கல்வியை பெறுவார்கள் என்ற நம்பிக்கை பெற்றோர்கள் மனதில் ஆழப்பதிந்துள்ளது. பெற்றோர்கள் மத்தியிலும் அவருக்கென்று ஒரு தனியான இடம் உண்டு.

பொதுச்சேவை என்றால் ஆர்வத்தோடு உதவுகின்ற ஒரு கொடையாளன். மாணவர்களுக்கோ அல்லது சமூகத்திற்கோ அத்தியாவசிய தேவை என இணங்காணுகின்ற சந்தர்ப்பத்தில் தாராளமாக அள்ளிவழங்கும் பெரும்குணம் உடையவர். ஒழுக்கம், கட்டுப்பாடு, கலாச்சாரம், சமயம் ஆகிய விடையங்களில் கட்டுக்கோப்புடன் தனக்கென ஒரு பாணியை வளர்த்து கொண்டு செயல்பட்ட ஒருசெயல் வீரன். கலகலப்பான சுபாவம், எல்லோரிடத்திலும் அன்பாக பழகும் இயல்பு அவரது ஆழுமையை மேலும் மெருகூட்டப்படுபவை. சேவையில் தன்நிறைவு கண்டு மணிவிழாக்காணும் திரு.சபாபதி.குகதாசன் அவர்கள் மேலும் மேலும்சேவையாற்றி சிறப்போடும் புகழோடும் வாழ எல்லாம் வல்ல இறைவனின் ஆசிவேண்டி வாழ்த்துகிறேன்.

"பெருமைக்கும் ஏனைச் சிறுமைக்கும் தத்தம்
கருமமே கட்டளை கல்"

*திரு. வே. பாலசுப்பிரமணியம்*

## யா/புத்தூர் சோமஸ்கந்தக்கல்லூரி முன்னைநாள்அதிபர்
## சிவசக்தி மணிமண்டப ஆலோசனைசபை தலைவர்
### திரு. வ. ஆறுமுகம்

வழங்கிய

# வாழ்த்துச்செய்தி



திரு.சபா.குகதாசன் அவர்களது மணிவிழா இன்று கொண்டாடப்படும் வேளையில் அவருக்கு ஒரு வாழ்த்துச்செய்தியை அனுப்புவதில் பெருமையடைகின்றேன். பிறந்த இடம் சிறுப்பிட்டி. புகுந்தஇடம் இடைக்காடு. ஆனால் கால 6.00 மணியில் இருந்து பி.ப.7.00 மணிவரை அவருடைய தரிப்பிடமோ ஆவரங்கால். பாடத்தில் தேர்ச்சி பெற்றவரும் நிர்வாகத்திறமை கொண்டவருமான ஆவரங்கால் குகன் மாஸ்ரர் காலை 6.45 இற்கு பாடசாலைக்குள் நுழைந்து விட்டால் அவருடைய சத்தமோ அயல்வீடுகளை அதிரச்செய்யும். பாடசாலையில் நடைபெறும் பரிசுத்தினம், விளையாட்டுப்போட்டி போன்ற நிகழ்வுகளில் அவருடைய பணியை நான் நன்கறிவேன். பெருமை இல்லாது செயற்படும் அவருடைய குணம் ஆவரங்கால் மக்களால் பெரிதும் விரும்பப்படுவது. கண்ணும் கருத்துமாக செயற்படும் குகன் மாஸ்ரர் வயது அறுபதை அடைந்தாலும் தோற்றத்தில் இளமையுடன் காட்சியளிப்பார். ஆகவே அவர் நோய்நொடியின்றி, அவர் தம் கல்விப்பணி தொடர, எல்லாம்வல்ல நடராஜப்பெருமானை வேண்டி நிற்கின்றேன்.

திரு. வ. ஆறுமுகம்

## யா/ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலய அதிபர்
## திரு. அ. அருணந்திசிவம்

வழங்கிய

# வாழ்த்துச் செய்தி



34 வருடங்கள் ஆசிரியப் பணியாற்றி தனது அறுபதாவது வயதில் ஓய்வு பெற்ற மதிப்பிற்குரிய எமது உதவிஅதிபர் திரு.ச.குகதாசன் அவர்கள் 20 வருடங்கள் எமது பாடசாலயில் பணியாற்றியவர்.

சமூக விஞ்ஞான பாடத்தில் பயிற்சி பெற்ற இவர் வரலாறு, புவியியல், குடியுரிமைக்கல்வி ஆகிய பாடங்களை கற்பிப்பதில் மிகவும் பாண்டித்தியம் பெற்றவர். பாடத்துறை சார்ந்து யார் என்ன சந்தேகங்களைக் கேட்டாலும் உடனுக்குடன் போதிய விளக்கத்தை வழங்கும் ஆற்றல் கொண்ட இவரை "நடமாடும் நூலகம்' என்று சொன்னால் அது மிகையாகாது. நகைச்சுவையாய் மாணவர் மனதில் பதியும் வண்ணம் கற்பிக்கும் ஆற்றல் கொண்ட இவர் மாணவர் ஒழுக்கத்தில் மிகவும் கண்டிப்பானவர்.

2006ம் ஆண்டிலிருந்து உதவி அதிபராக கடமைபுரிந்து நிர்வாகப் பணிகளில் சமூக ஒருங்கிணைப்புடன் திறம்பட உழைத்து, பாடசாலைக்கு பெருமை சேர்த்தவர். பாடசாலை அபிவிருத்திக்கும், மாணவர்கள் செயற்பாட்டிற்கும் பல அன்பளிப்புக்களை முழுமனதுடன் தயங்காமல் வழங்குபவர்.

இடைக்காட்டில் வசித்தபோதும் ஆவரங்காலில் தனது கல்விச் சேவையை வழங்கி " ஆவரங்கால் குகன் மாஸ்ரர் " என்ற முத்திரையை பதித்தவர். இவரிடம் கல்வி கற்ற மாணவர்கள் பல துறைகளில் உயர் பதவிகளில் கடமை புரிவது இவரது சிறப்பான கற்பித்தலுக்கு சான்றாகும்.

இவர் தொடர்ந்தும் கல்விப்பணி ஆற்றவும், எல்லா சுகங்களையும் பெற்று நீண்ட ஆயுளுடன் குடும்பத்தினரும், மகிழ்ச்சியாக வாழவும் எல்லாம் வல்ல இறைவன் அருள் புரிவாராக என வேண்டி வாழ்த்துகிறேன்.

திரு. அ. அருணந்திசிவம்

**மணிவிழாக்குழுத் தலைவர்**

**திரு.சி.திரிகரன்**

வழங்கிய

## *வாழ்த்துச்செய்தி*



ஆசிரியர் திரு.குகன் அவர்களது கல்விப்புலச்சேவையைப் பாராட்டி வெளியிடப்படும் மணிவிழா சிறப்பு மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகிறேன்.

"தக்கார் தகவிலர் என்பது அவரவர்
எச்சத்தால் காணப்படும்."

நல்லாசியரியனுடைய எச்சங்கள் என்பது அவன் உருவாக்கிய மாணவர்களே!

இன்று பல்துறைகளிலும் வியாபித்து இருக்கும் அவருடைய மாணவர்கள் அவரது கல்விப்பணியின் நற்சாட்சிகளாக விளக்குகின்றார்கள்.

அவர்களுடைய மாணவர்களில் நானும் ஒருவன். அவருடன் ஒரே பாடசாலையில் கல்வி கற்பிக்கும் பேறு பெற்றவன். அவருடன் கடமையாற்றிய காலங்களில் அவருடைய பல்துறைசார்ந்த ஆற்றல்களையும் ஆளுமைகளையும் கண்டு வியந்திருக்கின்றேன். கடமையுணர்வும், கண்டிப்பும், விட்டுக் கொடுக்கும் மனப்பாங்கும், பாடப்புலமையும், நிர்வாகத்திறனும் அவரது மாணவர்களிடத்திலும் சக ஆசிரியர்களிடத்திலும் அவர்மீதான மரியாதை எப்பொழுதும் மேன்மைப்படுத்துவன.

அவர் மணிவிழாக் காணும் இச்சந்தர்ப்பத்தில் அவருக்கு எல்லா நிறைவுகளும் கிட்ட இறைவனைப் பிரார்த்திப்பதோடு ஒரு மாணவனாக எனது நன்றியறிதலையும் வணக்கத்தையும் தெரிவித்துக் கொள்வதில் மனநிறைவடைகின்றேன்.

*திரு. சி. திரிகரன்*

## யா/ ஆவரங்கால் இராமலிங்கம் நடராஜா வித்தியாலய பழைய மாணவர் சங்க செயலாளர்

### திரு. அ. குமாரசிவம்

வழங்கிய

## *வாழ்த்துச் செய்திகள்.*



எங்கள் பாடசாலையில் 20 வருடங்களாக சிறந்த ஆசிரியராக விளங்கி பின் பகுதித் தலைவராக, பிரதிஅதிபராக பணியாற்றி ஓய்வு பெறுகின்றார், இவர் மாணவர்கள் மீது கண்டிப்பாக இருந்து ஒழுக்கத்தைப் பேணுவதிலும், சமூகவியல் பாடத்தை நுட்பமாகவும் ஆர்வத்துடன் கற்ப்பித்த ஆசானாவார். எந்த ஒரு பொறுப்பையும் ஏற்று அதனை பூரணமாக நிறைவேற்றும் வல்லமை உள்ளவர். பழைய மாணவர்கள், வெளிநாடுகளில் இருந்து வரும் பழைய மாணவர்களை இன்முகத்துடன் வரவேற்று பாடசாலை வளர்ச்சி சம்பந்தமாக தனக்கான பாணியில் உரையாடிக் கொள்வார். 20 வருடகால சேவையில் பழையமாணவர்சங்கத்தினருடன், வெளிநாட்டில் வாழும் பழையமாணவர்சங்க உறுப்பினருடன் தொடர்புகளைக் கொண்டு பாடசாலையின் வளர்ச்சியில் பெரிதும் அக்கறை கொண்டு துடிப்புடன் தனது கடமைகளை திறம்படச் செய்தவர். அர்ப்பணிப்பு மிக்க இவரது சேவையை என்றும் பழையமாணவர்கள் வெளிநாடுகளில் வாழும் பழைய மாணவர்கள் போற்றிய வண்ணமுள்ளனர். இவரது சேவையை நடராஜா இராமலிங்க வித்தியாலய பழையமாணவர் சங்கம் என்றும் நன்றியோடு வாழ்த்துவடன் இவரது ஓய்வுக்காலம் உடல், உளநலம் மிக்கதாகவும் அமைய வேண்டுமென எல்லாம் வல்ல நடராஜாப் பெருமானை வேண்டுகின்றோம்.

*திரு . அ. குமாரசிவம்*

# A Tribute to My Guru.



I have the greatest pleasure in sending this message of felicitation on the occasion of the Diamond Jubilee celebrations of my guru and my father's close associate 'Guhan' with whom I have had close interactions for over thirty years.

Guhan Master is a genius in history – his love for History is contagious. His depth and breadth of historical knowledge is amazing.

He recognizes the worth of each individual and honours the knowledge and expertise of others. He reveals his intellectual emotions, humanism and personality as a teacher.

He has retired from state service recently. I think it would be apt to say 'Thank you ever so much!' to Guhan Master for his significant role in the development of teaching of history. As a teacher of history, he exhibites his expertise in the subject and is a valued resource person.

Guhan Master has been the source of inspiration for thousands of students incredibly generous in sharing his ideas and resources with colleagues. I was one among them in the late 1980's, but now I have been fortunate in working as a teacher of English in his private institute, besides being a government school teacher.

I have always been impressed by his virtues and valued my association with him at various levels.

It is my hope and prayer that Guhan Master's period of retirement be long and it be spent in useful pursuit of service in education for our community.

**B.Sasikumar**

Teacher of English

J/ Analaitivu Vadaloor G.T.M Vidyalaya.

# இதழாசிரியர் பேனாவிலிருந்து..................



வாழ்க்கைப் பயணத்தின் எண்ணக்கனவுகளில்.....
வண்ணப்படிகளாய் மானுடத்தின் வயதுகள். அவை
வெள்ளி விழாக்களாய்...........முத்துவிழாக்களாய்...........
மாணிக்கவிழாக்களாய்...........பொன்விழாக்களாய்...........
மணிவிழாக்களாய்...........மானிட வானிலே
மத்தாப்பாய் விரிகின்றன.....


இவ்வகையில் சபா.குகதாசன் அவர்களது மணிவிழா மலருக்கு இதழாசிரியராய் இருப்பதையிட்டு பெருமகிழ்ச்சி கொள்கின்றேன்....

சபா.குகதாசன்..... எல்லோராலும் 'குகன் மாஸ்ரர்' என்று அன்போடு அழைக்கப்பெறும் சான்றோன். வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்ததால் மணிவிழா முடிதரிக்கும் உத்தமன். குகன் கல்வி நிறுவனத்தை உருவாக்கி...... எண்ணற்ற மாணவ விளக்குகளை ஏற்றிய கல்விச் சூரியன். ஏகலைவர்கள் சிகரத்தில் ஏந்தி நிற்கும் துரோணர்.

விழுதுகளும் வேர்களும் ஆலமரத்திற்கு அணிசெய்ய எடுத்தவிழா. ஒப்பற்ற மணிவிழா. காலம் உலகுக்கு வழிகாட்ட ஒளிகாட்டும் கைவிளக்குகளாய் அவ்வப்போது பிறப்போருக்கு சமூகம் கொடுக்கும் கௌரவ விழா

இவ்விழாவின் முத்தாரமாய் ஓர் "புதுநூல்" பிரசவம். அவசரங்களின் பிரசவமாய் மணிவிழா மலர். கவனிப்பீர். பிழை பொறுப்பீர். மழலைகள்தான் இதழ்கள் தந்தன. இதழ்கள் யாவும் பொலிந்து கலந்தன. அவசர உலகின் தேவைக்கேற்ப படைத்தோர் வாழ்க.. பலகோடி நன்றிகள் உரித்தாகுக. கவிதையும், கட்டுரையும், வாழ்த்தும், ஆசியுரையும் வரைந்த யாவர்க்கும்
நன்றிகள்................ நன்றிகள்................ பல்லாயிரம்
நன்றிகள்................

திரு. இரா . அகிலன்
இணைப்பாளர்
தொழிற்பயிற்சி அதிகார சபை
யாழ் . மாவட்டம்



மணிவிழா நாயகனின் பெற்றோர் திரு. திருமதி. சபாபதி அவர்கள்

# குருவாய் வந்த குகனே வாழி !

மலர்க்குழு சார்பில்
**கே.எஸ்.ரமணன்.**

குருவடிவாகி குவலயத்தே வந்த பலருள் சபா. குகதாசன் தனித்துவமுடையவர்.

"உயர்ந்த நிலையில் கழிந்த ஒரு மனித வாழ்வு
சிறந்த அளவால் மதிக்கப்படுகின்றது. அந்த
அளவு வயதால் அன்று. செயல்களாலே யாம்'

என்ற அறிஞர் செரிடரின் கருத்து நிலையில் குகன் ஆசிரியரின் உயர்ந்த நிலைக்கு அவரது செயல்களே முதன்மைக் காரணங்களாயின. இருப்பினும் இன்று அவர் அறுபதுவயதில் மணிவிழாக்காணும் நன்மணி நாயகன். அவரது வாழ்வியலை சுருக்கமாக எழுத்துருவில் வடித்துவிட முடியாது. அவரது வாழ்வியலின் மூச்சு கல்விக்கானது.

"நான் வாழ்வதற்கு என் தந்தைக்கு கடமைப்பட்டிருக்கிறேன்
முறையாக வாழ்வதற்கு என் ஆசிரியருக்கு கடமைப்பட்டிருக்கிறேன்."

என்றான் மாவீரன் அலெக்சாண்டர். இக்கருத்து நிலை மாணவருக்கு முறையாக வாழ வழிகாட்டுபவர்களே ஆசிரியர்கள் என்பதனை அறிய துணைபுரிகிறது. நல்லாசிரியன் யார்? அவருக்குரிய இயல்புகள் என்ன? என்ற கேள்விகளுக்குரிய விடையினை ஆசிரியர் குகதாசனிடம் கண்டுணர முடியும்.

அவரது கல்விச் சாலையிலே ஊன்றப்பட்ட மாணவ வித்துக்கள் விருட்சங்களாகி பலருக்கும் நிழல் கொடுக்கும் மரங்களாக யாழ்.மண்ணில் நிலைபெற்றிருக்கின்றன. அந்த விருட்சங்களின் இயல்புகளும் உயரிய வாழ்வின் உருக்குலையாத கட்டமைப்புக்களும் குகன் ஆசிரியரின் ஆளுமையின் வெளியுருவங்கள். நடமாடும் சாட்சியங்கள். நற்சாசனங்கள்.

இவ்வாறு குருவடிவாகி குவலயத்தே வந்து குருபணிசெய்து அறுபது வயதில் மணிவிழாக்காணும் ஆசிரியரின் கல்விப் பயணம் இன்னும் தொடர வேணடும் .தலைமகனுக்கு மணிவிழா வருடத்தில் இவரது கல்விச் சேவையையும் உயரிய வாழ்வின் மகத்துவத்தையும் போற்றுமுகமாக "மணிவிழா மலர்" ஒன்று பிரசவம் பெறுகிறது.

ஆசிரியராக உபஅதிபராக கல்விநிறுவன இயக்குனராக இருந்து கல்விக்கு ஆற்றிய வரலாற்று நிகழ்வுகளை யாவரும் அறிய வேண்டும் எனும் நோக்கில் இம் மணிவிழா மலர் வெளிவருவது அகமகிழ்வுக்குரியதேயாகும். இவரது வாழ்வியலையும் செயற்பாடுகளையும் ஒரு நன்னாளில் நூலுருப்பெறச் செய்யவேண்டும் என்ற நன்னோக்கில் இவ் அழகிய மலர் எம்மால் பிரசவிக்கப்படுகிறது.

கல்வியிலே தடம் பதித்த நாயகனே வாழி
சொல்லிலே செயல்புரியும் நாயகனே வாழி
மூச்சே கல்வியென வாழும் பெருந்தகையே வாழி-தம்
பேச்சிலே ஆளுமைதவழும் மணிவிழா நாயகரே வாழி! வாழி!

# எமது கல்வி நிறுவனத்தின் இயக்குனராய்...............

**ஆசிரியர்கள்**
**ஆளணியினர்கள்**
குகன் கல்வி நிறுவனம்

'கற்பித்தலைக் கசடறக் கற்பித்து கற்றவழி நிற்கும் நல்லதொரு நாளைய சந்ததியை உருவாக்கும் உன்னது கைங்கரியத்தை மேற்கொள்ளும் ஆசிரியப்பணிக்கு நிகர் எதுவுமில்லை." இத்தகைய மேலான சேவையில் 27 வருடங்களாக குகன் கல்விநிறுவனத்தில் தன்னை இணைத்து கல்விசார் சகலதுறைகளிலும் குறைவான கட்டணத்தை பெற்று மிகுதியான சேவையை வழங்குகிறது குகன் கல்வி நிறுவனம்.

நல்ல பயன் தரக்கூடிய மரத்தை அறிந்து தண்ணீர் ஊற்றுவதைப் போல வறுமையுள்ள கற்கக்கூடிய மாணவர்களுக்கு இலவசமாக சேவையாற்றி, இன்று அவர்கள் பொறியியலாளர், வைத்தியர், ஆசிரியர் என பல உயர்பதவிகளில் இருக்கின்றனர். குடும்பத்தைவிட கல்வியை நேசிக்கும் இவர் ஓர்ஆசிரியர் வராவிட்டால் அன்று அவர் கடுமையாகவே தொழிற்படுவர். பாடசாலையில் கடமையாற்றும் போது 1 நிமிடம் கூட எங்கள் கல்விநிறுவனத்தில் நின்றதில்லை. எமக்கு கூறுவார் நீங்கள் எடுக்கும் முடிவுதான் முடிவு என்றே கூறுவார். எல்லோரையும் சமமமாக மதிக்கும் இவர் தண்டனை வழங்குவதிலும் பாரபட்சம் காட்டுவதில்லை.

நேரம் என்றால் குகன்சேர், குகன்சேர் என்றால் நேரம் என்ற மொழிக்கு இணங்க தொழிற்படும் அவர் சிறந்த கல்விச் சேவையாளராவார். எங்கள் கல்விநிறுவனத்தின் இயக்குனரான எமது ஆசான் திருவாளர் சபா.குகதாசன் அவர்கள் இன்று 60 வயதை அடைந்து மணிவிழா நாயகனாக திகழ்கிறார்.

அவர்களை செல்வச்சந்நிதியானின் அருட்பார்வை பெற்று இன்னும் பல வருடங்கள் தனது கல்வச் சேவையை கல்விச் சமூகத்திற்கு வழங்கி நீடூழி வாழ குகன் கல்வி நிறுவன ஆசிரியர்கள் ,ஆளணியினர்கள் வாழ்த்தி நிற்கின்றோம்.

# பார் முழுதும் ஆர்ப்பரிக்கும் உந்தன் புகழ்

ர.இளமதி
தரம் -11

கடமை என்பதே எம்
உடைமை என்று - அதை
கட்டி முடிக்க எமக்கு
தட்டிக் கொடுத்தவர் நீர்

பிரம்படிகள் நீர் தந்தபோது - உமை
இரும்படிக்கும் கொல்லனென்றோம்
சிலம்படிகள் நீர் தந்தெமக்கு
சிறக்க வைத்தீர் அவனியிலே

ஏர் கொண்ட எம்மூரில்
பார் போற்ற வந்தவர் நீர்
போர் நடந்த வேளையிலும்
சீர் கல்வி தந்தவர் நீர்

யார் என்ன சொன்னாலும்
நீர் எங்கள் தெய்வமையா
பார் முழுதும் உந்தன் புகழ்
ஆர்ப்பரித்து முழங்குதையா

# அகவைப்படிகளில்...............

**செ.செந்தூரன்**

*செயலாளர் மணிவிழாக் குழு*

சி.வை.தாமோதரம்பிள்ளை அவர்கள் பிறந்த சிவபூமியாம் சிறுப்பிட்டியில் ஆசிரியராக விளங்கிய பண்டிதர் சபாபதி அவர்களுக்கும், அவர்தம் பாரியார் சோதிப்பிள்ளை அவர்களுக்கும் சிரேஸ்ட புத்திரனாக 29.04.1951 அன்று பிறந்த குகதாசன் அவர்கள் சிறுவயதில் விவசாயத்தில் நல்ல ஈடுபாடுகொண்டவர். ஆரம்பக் கல்வியை சிறுப்பிட்டி இந்துதமிழ்க் கலவன் பாடசாலையிலும், இடைநிலைக் கல்வியை புத்தூர் ஸ்ரீசோமஸ்கந்தாக் கல்லாரியிலும்கற்றார். அவர் கற்கும் காலத்தில் அவருடைய குலதெய்வ மாகிய சிறுப்பிட்டி பூதவராயர் கோயிலில் நல்ல நம்பிக்கை வைத்து வழிபட்டு வந்தார்.

இவர் முதல் முறை தோற்றிய க.பொ.த.சா.தரப்பரீட்சையில் தேற வில்லை. அந்த சமயத்தில் இவருடைய தந்தையார் நுவரெலியாவில் கற்பித்ததுக் கொண்டிருந்தமையே இதற்குக் காரணம். எனினும் தனது மூத்த மகனுடைய நலனைக் கருத்திற்கொண்டு அடுத்த வருடம் பரீட்சையில் தோற்றும் போது தந்தையார் இடமாற்றம் பெற்று அச்சுவேலி சரஸ்வதி வித்தியாசலையில் கற்பித்துக் கொண்டிருந்தார். மகனின் கல்வியில் தீவிர அக்கறை கொண்ட தந்தையார் இவருக்கு கவனக்குறைவு ஏற்பட்டபோதெல்லாம் தண்டிக்கத் தயங்கவில்லை. இத் தண்டனை வழங்கலே தான் இரண்டாம் முறை பரீட்சையில் நல்ல பெறுபேறு பெறுவதற்கு காரணம் எனக் குகதாசன் ஆசிரியர் கூறிக்கொள்வார். குகதாசன் ஆசிரியர் அவர்கள் க.பொ.த.சாதாரணப் பரீட்சையில் சிறந்த சித்தியைப்பெற்றதும் சரியான வழி காட்டுதலை வழங்கிப் பொருத்தமான பாடத்தெரிவை மேற்கொள்ள வழி சமைத்தவர் அப்போதைய ஸ்ரீ சோமஸ் கந்தா கல்லூரியின் அதிபராக இருந்த அதிபர் அமரர் சு.குமாரசுவாமி அவர்களாவர். உயர்தரத்தில் நான் கணித, விஞ்ஞானதுறையை விரும்பிய போது அதிபர் சு.குமாரசுவாமி அவர்கள் எனக்குக் கூறியதாவது நான் உன்னை தரம் 6 இலிருந்து தரம்11 வரை அவதானித்து வருகிறேன். நீ கணித, விஞ்ஞானத்துறையை தெரிவு செய்தால் உனது எதிர்காலம் பூச்சியமாகவே அமையும் என்று கூறி உயர்தரத்தில் கலைப்பிரிவில் கற்குமாறு தூண்டி கலைப் பிரிவிற்கு சிறந்த கல்லூரி அத்தியார் இந்துக்கல்லூரியே எனவும் கூறிய அவர் அப்பாடசாலையின் அப்போதைய அதிபராக இருந்த சுவாமிநாதசர்மாவிற்கும் என்னை சிபார்சு செய்து ஒரு கடிதத்தைத் தந்துவிட்டார். இவ்வாறு எனக்குப் பொருத்தமான பாடம் புவியியல்,வரலாறு என்பவையே என்பதனை சரியாகப்புரிந்து கொண்டு வழிகாட்டிய அவரை இன்றும் நான் என் தெய்வமாகவே போற்றுகின்றேன் என்று தன் வாழ்வை வளம் நோக்கி வழிப்படுத்திய ஆசிரியரை மனம்கொள் கிறார் ஆசிரியர் குகதாசன் அவர்கள்.

க.பொ.த. உயர்தரத்தில் வரலாறு, புவியியல், தமிழ், அரசாங்கம் ஆகிய பாடங்களைத் தெரிவு செய்து

பெற்றோர், ஆசிரியர்களின் நல் ஒத்துழைப்போடு 1974ம் ஆண்டு நடைபெற்ற க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் சிறந்த பெறுபேறு பெற்று சட்டக் கல்லூரிக்கு தெரிவுசெய்யப்பட்டார். புகழ்பெற்ற சட்ட ஆலோசகர் சிவநேசன் ஐயா அவர்களுடன் சேர்ந்து ஒரே வகுப்பில் சட்டம் பயின்று கொண்டிருந்த வேளை இடம்பெற்ற ஆசிரியர்களுக்கான போட்டிப் பரீட்சையில் தோற்றி நல்ல புள்ளிகளைப் பெற்று நேர்முகத் தெரிவில் பங்குபற்றி ஆசிரிய நியமனம் பெற்றுக்கொண்டார். சட்டக்கல்லூரியில் கல்விபயின்ற அதிகமானோர் குகதாசன் ஆசிரியரின் முடிவையே எடுத்தனர்.

ஆசிரிய நியமனம் பெற்ற குகன் ஆசிரியரவர்கள் முதலில் நுவெரெலியா ரம்பொடை தமிழ் மகாவித்தியாலயத்தில் 4 வருடங்கள் கடமையாற்றிய பின்னர் கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியின் சமூக விஞ்ஞானப்பிரிவுக்கு தெரிவுசெய்யப்பட்டு 3 வருட பயிற்சியை முடித்துக்கொண்ட பின்பு நடத்தப்பட்ட பரீட்சையில் 4 பாடங்களிலும் மிகத் திறமையான சித்தியைப்பெற்றார். பயிற்சிக் கல்லூரியில் இருந்து வெளியேறிய குகன் ஆசிரியர் அவர்கள் முல்லைத்தீவு உடையார்கட்டு தமிழ் மகாவித்தியாலயத்தில் 2 வருடகாலம் சேவையாற்றி அதன்பின்பு யா/ சரஸ்வதி வித்தியாசாலைக்கு நியமனம் பெற்றார். 01.02.1991 தொடக்கம் 2006 வரை யா/ஆவரங்கால் நடராஜா இராமலிங்க வித்தியாலயத்திலே ஆசிரியத் தொழிலை புனிதமாகச் செய்து வந்தார்.2006லிருந்து இப்பாடசாலையயின் உபஅதிராக சேவைபுரிந்து பாடசாலையின் சாதனைப் பயணத்திற்கு வழி சமைத்தார். 34 வருடகால ஆசிரியச் சேவையில் ஒரு வருடம் மாத்திரம் 15 நாட்கள் லீவு எடுத்துக்கொண்டார். ஏனைய காலங்களில் 5 நாட்களுக்கு மேல் அவர் லீவு எடுக்கவில்லை. ஆசிரியச் சேவையின் போது அதிபர்களாக இருந்து தன்னை நெறிப்படுத்திய திரு. முத்துக்குமாரசுவாமி அதிபர் அவர் களையும் திரு.வே. பாலசுப்பிரமணியம் அதிபர் அவர்களையும் என்றும் மறக்க மாட்டேன் என அவர்களுடனான தம்முடைய சேவையின் நினைவுகளை எம்மோடு பகிர்ந்து கொண்டார். இவர்களுடன் சேர்ந்து கடமையாற்றக் கிடைத்த சந்தர்ப்பமே நிர்வாகம், கற்பித்தல் முதலியவற்றில் என்னை இன்றும் சிங்கம்போல் செயற்படத் தூண்டியது என மீண்டும் மீண்டும் அவர்கள் பற்றிய நினைவுகளை பதிவு செய்கிறார்.

ஆசிரியர் திரு. குகதாசன் அவர்கள் தாம்பிறந்த பூமியாம் சிறுப் பிட்டிக்கும் புகுந்த பூமியாம் இடைக் காட்டிற்கும் இடையே ஆவரங்காலைத் தெரிவு செய்து குகன் கல்வி நிறுவனத்தை அமைத்து தன்னுடைய முழுநேரக் கல்விப்பணியை ஆற்றி வருகிறார். பசிபாராது, கண் துஞ்சாது கடமையை உடைமையாகக் கொண்டு அவர் ஆற்றிவரும் கல்விப்பணியானது அளப்பரியது.ஆலமரமாகிய குகதாசன் ஆசிரியர் அவர்களின் கல்வி நிலையத்திலிருந்து பல மாணவ விழுதுகள் தோன்றி இன்று நல்ல நிலையில் இருக்கின்றார்கள். இவ் வகையில் ஊரெழு கணேச வித்தியாசாலையின் அதிபர் திரு.சி. திரிகரன் ஆசிரியர் அவர்கள், பிரதேசச்செயலாளராக இருக்கின்ற திரு.முரளிதரன் அவர்கள், உதவி அரசாங்க அதிபாராக இருக்கின்ற திரு.த.ஸ்ரீமோகன் அவர்கள் முதலியோரைக் குறிப்பிடலாம். இவர்

ஆற்றிவரும் சேவையின் மகத்துவத்தை இவரின் பிரிவுபசார விழாவின் போது மக்களும்,மாணவர்களும், கல்விச் சமூகமும் செயற்பட்ட விதத்திலிருந்து நன்குணர முடியும்.

குகன் ஆசிரியரிடம் கற்பித் தலிலும் ஒழுக்கத்தைப் பேண வைப்பதிலும் இவ்வளவு திறமை யுடையவர்களாக இருக்கிறீர்களே அதற்குரிய காரணத்தைக் கூறமுடியுமா? எனக்கேட்டபோது அவர் கூறிய பதில் எமக்கும் உற்சாகத்தைத் தந்தது. "நான் கல்வித் திணைக்களத்தால் நடைபெறும் எந்தக்கருத்தரங்குகளையும் தவற விடுவதில்லை. கருத்தரங்கின் முன் மேசையில் அமர்ந்து கொண்டு கல்வித் திணைக்கள அதிகாரிகளும் ஆசிரிய ஆலோசகர்களும் மெச்சும் அளவிற்கு பாடம் சம்பந்தமான விடயங்களைக் கதைப்பேன். மேலும் எனது கற்பித்தல் முறை சிறப்படைவதற்கு காரணம் எனது கல்விநிலையத்தில் பல பாடசாலை களையும் சேர்ந்த பிள்ளைகளுக்கு கற்பித்தமையேயாகும். ஒவ்வொரு மாணவர்களும் வெவ்வேறுவிதமாக பாடம்சம்பந்தமான விடயங்களை கேட்பதனால் அவை தொடர்பான விடயங்களை சேகரிப்பதற்காக பல்வகையான புத்தகங்களை நான் படித்து சேமிக்க வேண்டியதாயிற்று. என்று குறிப்பிடுகிறார்.

"ஊரார் பிள்ளையை ஊட்டி வளர்த்தால் தன்பிள்ளை தானே வளரும்" என்பதற்கு அமைவாக குறைந்த கட்டணத்திலே ஊர்ப் பிள்ளைகளுக்கு கல்வி கற்பித்தமை மூலமாக அவரது பிள்ளைகளும் நல்ல நிலையை அடைந்தார்கள்.

இவரது குடும்பத்தினரின் பெருந் தன்மையான விடயம் ஆசிரியரின் முகபாவனையைப் புரிந்துகொண்டே செயலாற்றுவது ஆகும். சிறந்த மனைவி, நன்மக்கள் முதலியோர் இவருக்கு கிடைத்தமையால் வாழ்வில் இவர் ஏற்றம் கண்டார்.

'நிர்மலா குகதாசன் அவர்களைத் திருமணம் செய்துகொண்ட பின்பே தான் புகழ், பெருமை, செல்வம் என சகலவற்றையும் பெற்றேன்.' என தன் குடும்பத்தாரைப்பற்றி பெருமைப் பட்டுக் கொள்கின்றார் ஆசிரியர் அவர்கள்.

மூன்று பிள்ளைகளைத் தன் வாழ்வின் பயனாகக் கண்ட இவர் மூன்று பிள்ளைகளுக்கும் நல்வாழ்வை அமைத்துக் கொடுத்துள்ளார். மூத்த மகள் விஜயலதாவை பொறியிய லாளரான நவரட்ணராஜா அவர்களுக்கு திருமணம் செய்துகொடுத்து தன் வாழ்வின் உன்னத செல்வமான அபிராமி எனும் பேரக்குழந்தையைக் கண்டு மகிழ்ந்தார். குகதாசன் விநோதினி அவர்கள் திருக்குடும்பக் கன்னியர் மடத் தின் ஆசிரியை. இளையமகன் வசந்தன் நீர்ப்பாசனத் திணைக்களத்தின் தொழில் நுட்ப உத்தியோகத்தராக கடமையாற்று கிறார். இவரைப் பற்றி அகவைப்படிகளில் சேர்க்கப்படாத சுவாரஸ்யம் நிறைந்த கருத்துக்களும் குறிப்புக்களும் உண்டு. எனினும் இமயத்தின் பெருமைகளை முழுவதுமாக சிறுகல்லால் செப்ப முடியாது. காலப்பொருத்தமும் தேவை நோக்கமும் கொண்டு சிறுவிடயங்கள் தவிர்க்கப்பட்டுள்ளன. சென்ற இடமெல்லாம் தனித்துவமான சிறப்பைப் பெற்றவர் புகழ் இன்னமும் நீடுழி வாழ்க! சுகதேகியாக குடும்பத்தாருடன் சுகமாக வாழ இணைவனைப் பிரார்த்திப்போமாக.



மணிவிழா நாயகன்
திருவாளர் திரு. திருமதி. சபா குகதாசன் தம்பதிகள்



மணிவிழா நாயகன் குடும்பத்தினர்

# சேவை தொடரட்டும்

வே.கிருஸ்ணவி
*தரம் 11*

பூமியில் பிறந்தவர் யாவரும்
புனிதம் அடைய வேண்டுமெனில்
நாவிலுறையும் நாமகளின்
நற்கல்விதனைப் பெறவேண்டும்

பாடசாலைகள் பற்பல
தனியார் கல்விநிலையங்கள் சிற்சில
புனிதம் நிறைந்த கல்விதனை
போதிக்க முனைந்து நிற்கும்

சிறுப்பிட்டியில் அவதரித்து
சின்னஞ் சிட்டுக்களின் கல்விக்காய்
இரவிரவாய் சேவைபுரிந்து
இதயத்தில் குடி கொண்டார்- எங்கள் குகன் ஆசான்

எப்படியும் கற்கலாம் என்ற நிலை மாற்றி
இப்படிக் கற்றால் எடுக்கலாம் புள்ளி- என்று
எம் கல்விக்காய் உழைத்து வாழ்ந்த உத்தமத்தார்
எங்கள் குகன் ஆசான்

புத்தகத்தில் உள்ளவற்றை
புரிய வைத்தார் கச்சிதமாய்
புவியியல், வரலாறு, குடியியல் பாடங்கள்
புகட்டும் அவர் உத்தியோ நுட்பம்! நுட்பம்!

புனிதம் நிறைந்த அவர் சேவை
நிறைவு பெறும் நாளிதாம்
அறுபதுகளில் ஓய்வு பெறல்
அரசாங்கச் சட்டமாம்

அரசாங்க சேவையில்
அவர் சேவை நிறைவுநாள்
தனியான சேவையில்
அவர் சேவை தொடரும் நாள்

எங்களை வழிப் படுத்த
எங்கள் ஆசான் துணை வேண்டும்
அன்போடு அவர் சேவை
அகிலத்தில் தொடரவேண்டும்

மணிவிழா கண்டு நிற்கும் மாமேதையே
உ ம் பணி சிறந்து நிற்க
வாழ்த்துகிறோம் -இந்நாளில்
வாழ்க பல்லாண்டு! வாழ்க வாழ்கவே!

தோல்வியின் அடையாளம் தயக்கம்யூ
வெற்றியின் அடையாளம் துணிச்சல்யூ
துணிந்தவர் தோற்றதில்லையுயூ
தயங்கியவர் வென்றதில்லையுயூ

அரிய சாதனைகள் அனைத்தும் வலிமையினால்
செய்யப்பட்டவை அல்ல
விடாமுயற்சியினால் தான்.

படிப்பதற்காக எல்லா சந்தர்ப்பங்களையும்
இணைக்கத் தயாராக இருங்கள்.
எந்த சந்தர்ப்பத்திற்காகவும் படிப்பை
இழக்கத் தயாராகி விடாதீர்கள்யூ
எனில்
நீங்கள் எங்கிருந்து வந்தாலும்
எங்கு வேண்டுமானாலும் போகலாம்

# மணிவிழா நாயகனுக்கு கவித்துளி

**ஆ.ஷாளினி**
ஆரம்பப்பிரிவு 2ம் வருடம்
தேசியகல்வியியல்கல்லூரி
யாழ்ப்பாணம்.

தேனும் பாலும் தெவிட்டாமல்
ஓடும் ஆவரங்காலில்
வந்துதித்ததே குகன் கல்வி நிலையம்
கல்விக் கோபுரத்தில் ஆவரங்காலை
உயர்த்திவிட்டதே இந்தக் கோயில்தான்
ஆலயத்தின் அதிபதியை
சொல்லத்தான் வேண்டுமா?
அன்பும் பண்பும் கனிவான பேச்சும்
அவருக்கு மட்டுமே
உரித்தானவை............

சின்னஞ்சிறு வயதில்
தத்தி நடைபழகி
கல்வி நிலையம் வந்து சேர்ந்தோம்
மூன்று மணி என்றால்
பயம் கொண்டு இதயம்
இடம் மாறும்
வாசலிலே குகன்சேரின்
உருவம் முப்பரிமாணத்
தோற்றம் எடுக்கும்.............

உங்கள் கண்டிப்பு
இன்று என்னை இனம்காட்டியது
இந்த மண்ணுக்கு நீங்கள்
வாழவேண்டும் வையகமுள்ளவரை
பட்டாக பறந்த
பறவைகள் நாம்
சிட்டாக சிறகடித்து
மொட்டாக இன்று
வாசம் கமழ
இந்த ஆணிவேர்தான்
ஆரம்பம் மறக்குமா?
எந்தன் உள்ளம்................

பலபேரை இனம் காட்டி
படித்தவர்கள் என்று
பார்போற்றி வாழ்வில்
ஒளியேற்றிய - கல்விநிலைய
மன்னவா?
மண்ணும் விண்ணும்
உள்ளவரை
நூறாண்டு வாழ்வு
உங்களுக்கே.......

**காலம்!! விலைக்குக் கிட்டாது!**
**விரும்பியும் திரும்பாது!**

*வாழ்க்கை என்பது*
*ஒரு சந்தர்ப்பம் – நழுவ விடாதிருங்கள்*
*ஒரு கடமை – நிறைவேற்றுங்கள்*
*ஒரு இலட்சியம் – சாதியுங்கள்*
*ஒரு சோகம் – தாங்கிக்கொள்ளுங்கள்*
*ஒரு போராட்டம் – வென்றுகாட்டுங்கள்*
*ஒரு பயணம் – நடத்தி முடியுங்கள்*

# ஒழுக்கம்

**பத்மரதி**

க.பொ.த. உயர்தரம் *(2010)*

மக்களின் வாழ்க்கையில் ஒழுக்கம் என்பது மிகவும் இன்றியமையாத ஒன்றாக விளங்குகின்றது. ஒழுக்கம் என்பதை பல்வேறுபட்டவர்கள் பல்வேறு வகையில் வரைவிலக்கணப்படுத்தியுள்ளார்கள். இவ்வகையில் ஒழுக்கம் என்றால் "மக்களின் வாழ்க்கை சிறப்பாக விளங்குவதற்கு வகுத்துக்கொண்ட ஒழுங்கான வழிவகை களைக் குறிக்கும்." இவற்றை மக்கள் தொடர்ந்து தமது வாழ்க்கையில் ஒரு சட்டமாக மதித்து வருகின்றனர். இவ்வகையில் ஒழுக்கம் என்பதற்கு இந்து மதமானது பல்வேறு பெயர்களைக் கொண்டு அழைக்கின்றது. அவ்வகையில் கடமை, நியதி, அறம், தர்மம் என்பன அவற்றுள் சிலவாகும். இவ்வகையில் மானிடர்களிடையிலான ஒழுக்கங்களை பின்வருமாறு வகைப்படுத்தலாம்.அவை:

1. தனிமனிதனின் ஒழுக்கம்
2. குடும்ப ஒழுக்கம்
3. அரசியல் ஒழுக்கம்
4. துறவின் ஒழுக்கம்
5. ஆச்சிரம ஒழுக்கம் என்பன ஆகும்.

ஒழுக்கத்தினைப் பற்றி பல்வேறு நூல்கள் சிறப்பாகப் பேசுகின்றன. அவற்றுள் இலகுவாக திருக்குறள், பாரதியார் பாடல்கள், ஔவையாரின் பாடல்கள் என்பனவற்றைக் குறிப்பிடலாம். அந்த வகையில் திருக்குறளில் ஒழுக்கமுடைமை எனும் அதிகாரம் முழுமையாக ஒழுக்கத்தை பற்றி கூறி நிற்கின்றது. அதுமட்டுமன்றி அறத்துப்பாலில் இல்லறவியல், துறவியலில் ஒழுக்கங்களையும் பொருட்பாலில் அரசியல் ஒழுக்கங்களையும் சிறப்பாகப் பேசிநிற்கின்றது.

சமஸ்கிருத மொழியில் மதம் அல்லது சமயம் என்பதற்கு "தரும்" என்று பெயர். " நம்மையெல்லாம் உறுதியாக இணைக்கும் ஒரு கொள்கை" என்று இதற்குப் பொருள் கொள்ளலாம். வேறு விதத்தில் பார்த்தால் " ஒரு பொருளிடம் அமைந்த நற்குணம்" என்றும் இதற்கு நுணுக்கமான பொருள் கொள்ளலாம். அதாவது நெருப்பில் உஷ்ணம் சில சந்தர்ப்பங்களில் வெளிப்படாமல் இருந்தாலும் மொத்தத்தில் நெருப்பிற்குரிய முக்கிய குணம் உஷ்ணம்தானே.?

நித்திய புருஷனிடம் அமைந்த குணங்களை நாமும் வளர்த்து அவற்றை நம் மூலமாக வெளிப்படுத்த வேண்டும் என்று முயன்று அந்தப் புருஷனிடம் நம்பிக்கை கொள்வதே தர்மத்தின் இலட்சணம். இப்படிப்பட்ட குணங்கள் தனித்தனி மனிதனிடம் இயல்பாகவே அமைந்திருந்தால் பின்னர் தருமம் என்பது தேவையில்லை. அதனால் ஆவது ஒன்றும் இல்லை என்றே சொல்லவேண்டி வரும். ஆதியில் தோன்றியது மிருக சுபாவம். மனிதனை அது தூண்டி

வருவதையே அவன் தோன்றியது முதல் பார்த்து வருகிறோம். இதுவே மனித சுபாவம். இப்படி ஒன்றுக்கொன்று முரணாக உள்ள போக்கை இணைப்பது தான் தர்மத்தின் வேலை.

சீனாவில் வாழ்ந்த லாவா - த்ஸே என்ற மகான் "இறந்தாலும் அழியாதவனே என்றென்றும் நிலை பெற்று வாழுபவன்" என்று கூறியிருக்கின்றார். இந்த மாதிரியான ஒரு மனிதன் நித்திய புருஷனின் அம்சமாக விளங்குகின்றான். என்பதே இதன் பொருள். இத்தகைய "நிலைபெற்ற வாழ்வு" வாழ வேண்டுமென்ற உற்சாகத்தில்தான் மனிதர்கள் நீடித்து உயிர்வாழ எவ்வளவோ பாடுபடுகிறார்கள். நம் சாத்திரங்களிலும் "அதர்மத்தினால் மனிதன் செழித்தோங்கி பலரும் ஆவலோடு விரும்பும் பொருளை அடைந்தாலும் சரி பகைவர்களை வென்றாலும் சரி அவன் வேருடன் கெடுவான்" என்று சொல்லியிருப்பதைக் காணலாம். "நிலையற்ற உலகவாழ்வை விட நிலையான உண்மை வாழ்வு ஒன்று உண்டு" என்பதையே இது உணர்த்துகின்றது.

லாவோ - த்ஸே என்ற மகான் நல்லவனுடைய லட்சணத்தைப்பற்றி விபரிக்கும் போது ' அவன் யாவற்றையும் இயக்குகிறான். ஆனால் தனக்கென்று எதையும் வைத்துக்கொள்வதில்லை. அவன் செயல்புரிகின்றான். ஆனால் உரிமை பாராட்டுவதில்லை. புண்ணியம் செய்கின்றான். ஆனால் அந்தப் புண்ணியத்தின் பெருமையில் பங்கு கொள்வதில்லை.' என்று சொல்லியிருக்கிறார். நமக்கு வெளியே உள்ளதை நாம் விற்கலாம். நம்மோடு இணைந்திருப்பதை எப்படி விற்க முடியும்? இப்படி நம்மோடு சத்தியத்தை ஒன்றுபடுத்திப் பார்ப்பதுதான் நிறைவான சொர்க்கவாழ்வு. ஒருவன் எளிமையாக வாழ்கின்றான். அவனிடம் இருக்கும் நற்பண்புகளுடன் கூடிய ஒழுக்கங்களில் ஒன்றாக பகைவனாக இருந்தாலும் சரி அந்நியனாக இருந்தாலும் சரி விருந்தாளி என்று வருபவனை உபசரிக்க வேண்டும். என்ற எளிய மனப்பான்மை இருக்கின்றதே, அது உண்டாகத் தலைமுறை தலைமுறையாகப் பயிற்சியும் அனுபவமும் பெற வேண்டும். எளிமை தனக்குள்ள மதிப்பை பாராட்டிக் கொள்வதுமில்லை கூலியும் கேட்பதில்லை. இதுவே எளிமையின் ஒழுக்கமாகும்.

சீனா நாட்டவரான லாவோ - த்ஸே முடிவற்ற பொருளை அறியாததால் காமம், பகை முதலியவை தோன்றுகின்றன. இதுவே தீமை என்கிறார். அத்தோடு நாம் இறந்து போகலாம். ஆனால் நாம் அழிந்துபோகக்கூடாது என்றும் கூறுகின்றார். நாம் உடல்வாழ்வை இழக்கும் போது நாம் இறந்து போகிறோம். நாம் மனிதசமூகத்தின் பண்பை மறந்துவிடும் போது அழிவிற்கு போகின்றோம். மனித சமூகத்தின் பண்புதான் மனிததர்மம்.

திருக்குறளில் இல்லறவியலில் இல்வாழ்க்கையில் அறங்களைப் பற்றிக் கூறுகின்றது. இது இல்லாளோடு கூடிய வாழ்தலின் சிறப்பு. இல்லறத்தானே

ஏனைய நிலையில் உள்ளவர்க்கு அறத்தினை ஏற்றுக்கொள்வான்.

இல்லறநிலையில் உள்ளவனின் ஒழுக்கங்களாக எல்லா பந்த பாசங்களையும் துறந்து சந்நியாசிகளுக்கு கேட்பவற்றைக் கொடுத்து உதவுதலும் நம்மை நாடி வருபவர்களுக்கு உணவினை அளித்தலும் இறந்தவர்களுக்கு பிதிர்க் கடன்களைச் செய்தலும் அமைந்துள்ளன. இவ் வாழ்க்கையானது சிறப்பாக அமைய வேண்டுமாயின் அன்பும் தர்மமும் நிறைந்திருத்தல் வேண்டும். இதனை வள்ளுவர்,

"அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது." எனும் குறட்பாவினூடாக விளக்குகின்றார்

ஒழுக்கமுடைமை எனும் அதிகாரத்தில் ஒழுக்கமுடையவர்கள் எவ்வாறு விளங்குகின்றார்கள் என்று கூறப்பட்டுள்ளது. ஒழுக்கம் எல்லோருக்கும் சிறப்பினைத் தருவதால் ஒழுக்கமுடையவர்கள் அவ் ஒழுக்கத்தினை உயிரினும் மேலாகப் பாதுகாப்பார்கள். இதனை "ஒழுக்கம் விழுப்பந் தரலால் ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படும்." எனும் குறட்பா விளக்குகின்றது. ஒழுக்கத்தினை ஒன்றாலும் அழிவடையாமல் பாதுகாக்க எல்லா ஒழுக்கங்களையும் ஆராய்ந்து அவற்றில இம்மைக்கும் மறுமைக்கும் துணையாக அமைவது அவ் ஒழுக்கமே ஆகும். அது மட்டுமன்றி எல்லோருக்கும் தத்தம் வர்ணங்களுக்குரிய ஒழுக்கம் உடைமை அவர்களின் குலஉடைமை. அவ் ஒழுக்கத்திலிருந்து தவறுவதால் அவ்வருணத்திலும் தாழ்ந்த வர்ணமாகிவிடுவர். இதனை

"ஒழுக்கமுடைமை இடிமை இழுக்கம்
இழிந்த பிறப்பாய் விடும்" எனும் குறட்பா விளக்குகின்றது.

ஒழுக்கம் உடையவர்கள் மறந்தும் கூட தீய சொற்களை தமது வாயால் சொல்லமாட்டார்கள். வள்ளுவர்

" ஒழுக்கமுடையவர்க் கொல்லாவே தீய
வழுக்கியும் வாயால் சொலல்" எனும் குறட்பாவால் விளக்குகின்றார்.

இவ்வாறு திருவள்ளுவர் எழுதிய திருக்குறளில் 20 அதிகாரங்கள் இல்லற நிலையிலே செய்யக்கூடிய கடமைகள் பற்றிக் கூறி நிற்கின்றது.

இல்லறத்தின் அடுத்த நிலை துறவற நிலையாகும்.இதிலே ஒருவன் சொந்தம் பந்தம் பாசம் என்பவற்றினைத் துறந்து இறைவனை அடைதலை இலட்சியமாகக் கொண்டதாகும். இவ் இலட்சியத்தினை அடைய எண்ணுபவர்கள் காட்டிற்குச் சென்று காட்டிலே தங்கியிருந்து வன நூல்கனைக் கற்றுக்கொள்வார்கள். இவர்களின் உணவாக காட்டில் உள்ள பழங்களோ காய்களோ அமையும். காட்டிலே உணவு கிடைக்காத சமயத்தில் ஊருக்குள் சென்று பிச்சை ஏற்று உண்ணுவார்கள். இவர்களது உடை மரவுரியாகவோ காவி உடையாகவோ அமையும். துறவற நிலையில் இருப்பவர்களைப் பற்றி திருக்குறளானது பின்வருமாறு

குறிப்பிடுகின்றது. அதாவது புலாலினை மறுப்பவர்களாகவும் தவத்தினை மேற்கொள்பவர்களாகவும் பிறர் பொருட்களில் ஆசை வைக்காதவர்களாகவும் உண்மை பேசும் தன்மை கொண்டவர்களாகவும் கோபம் கொள்ள மாட்டாதவர்களாகவும் பிற உயிர்களுக்கு இன்னா செய்யாதவர்களாகவும் ஞானத்தில் இருப்பவர்களாகவும் காணப்படுவார்கள்.மேலே கூறப்பட்ட அம்சங்கள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு அதிகாரமாக்கப்பட்டுள்ளமை விசேட அம்சமாகும். வள்ளுவர் 13 அதிகாரங்களில் துறவற ஒழுக்கம் பற்றி விளக்கியுள்ளார்.

அரசியல் ஒழுக்கம் பற்றி பல நூல்கள் விளக்கியுள்ளன. அவ்வகையில் அரசன் நாட்டையும் நாட்டு மக்களையும் இரண்டு கண்கள் எனக் கொண்டு வாழ வேண்டும். அரசன் தனது கடமை எனும் போது நாட்டு மக்களின் நலனினை கருத்தில் கொண்டு செயற்பட வேண்டும். திருக்குறளானது 215 அதிகாரத்திலே அரசியல் கடமை பற்றித் தெளிவாக விளக்கியுள்ளது. நாட்டுக்கு மன்னர் என்றாலும் மன்னன் கல்வி கற்க வேண்டும். அதாவது நீதிநூல், அறநூல், யானை, குதிரை, தேர், படைக்கலம் என்ற இவற்றுக்குரிய நூல்களைக் கற்க வேண்டுமென திருக்குறள் கூறுகின்றது. இது 'கல்வி'' எனும் அதிகாரத்தில் கூறப்பட்டது.

அரசியல் என்பது கூட்டாகச் சேர்ந்து செயற்படுதல் வேண்டும். எந்தப் பிரச்சினையாக இருந்தாலும் பல பெரியவர்களிடம் கூடி ஆராய்ந்தே முடிவு எடுத்தல் வேண்டும். அத்துடன் தீர விசாரித்தல் வேண்டும். அவ்வாறு செயற்படாது விட்டால் மன்னன் அழிவையே எதிர்கொள்வான். இதற்க்கு எடுத்துக்காட்டு சிலப்பதிகாரததில் கோவலன் தீர விசாரிக்கப்படாமல் பாண்டிய மன்னனால் கொலை செய்யப்பட்டான். கோவலனின் மனைவியாகிய கண்ணகி பாண்டிய மன்னனிடம் நீதிகேட்டு நிற்கும்போது அந்த நீதியே பாண்டிய மன்னனையும் அவனது மனைவியையும் அழித்தது. இவ்வாறு ஒரு நாட்டையே சீர்குலைத்துவிடும் சிலப்பதிகாரம் காப்பியத்திலே அரசியல் பிழைத்தோர்க்கு அறம் கூற்றாகும். உரைசால் பத்தினியை உயர்ந்தோர் ஏற்றுவர். ஊழ்வினை உறுத்துவந்தூட்டும் என்னும் தர்மங்கள் கூறப்பட்டுள்ளது. அதுமட்டுமன்றி மணிமேகலை காப்பியமானது யாவர்க்கும் உணவு வழங்கல் உள்ளிட்ட பல்வேறு தர்மங்களைக் கூறுகின்றது.

பாரதியார் பெண்கள் விடுதலை, பாப்பா பாட்டு போன்ற கவிதைத் தொகுதிகளில் ஒவ்வொருவகையான ஒழுக்கங்களை கூறியிருக்கின்றார். அவ்வகையில் வாழ்க்கையில் எதுவும் நிலையானதல்ல மாயமானது என்பதற்கு நிற்பதுவே, நடப்பதுவே, பறப்பதுவே, நிறங்களெல்லாம் சொற்பனந்தானோ? பல தோற்ற மாயங்களோ? எனும் பாடலைக் கூறலாம்.

குழந்தைகளிடம் காணப்படும் ஒழுக்ககங்களை
"ஓடி விளையாடு பாப்பா - நீ
ஓய்ந்திருக்க லாகாது பாப்பா'' எனும் பாப்பாப் பாடலுக்கூடாகக் கூறுகிறார். நாட்டிலே பெண்களின் விடுதலை பற்றியும் பாரதியார் கவிதை எழுதியுள்ளார்.

ஔவையார் தனது ஆத்திசூடி, கொன்றை வேந்தன், வாக்குண்டாம் எனும் நூல்களின் தொகுப்புக்களில் அறக்கருத்துக்களை தெளிவாகக் கூறியுள்ளார் ஔவையாரின் வாக்குண்டாம் பாடல்தொகுதியில் நற்பண்புகள் கொண்டவர் களிடத்தில் காணப்படும் ஒழுக்கங்களும் அவற்றினால் மற்றவர்கள் பெற்றுக்கொள்ளும் பயன்களும் குறிப்பிடப்பட்டுள்ளது. அவ்வகையில் நல்லவர்களின் கைகளினால் செய்யும் உதவியானது கல்மேல் எழுதிய எழுத்துப் போல் என்றும் நிலைத்து நிற்கும்.இதனை

"அட்டாலும் பால்சுவையிற் குன்றாதளவளாய்
நட்டாலும் நண்பல்லார் நண்பல்லர்
கெட்டாலும் மேன்மக்கள் மேன்மக்களே -சங்கு
சுட்டாலும் வெண்மை தரும்" எனவும்

நல்லவர்களோடு சேர்வதனால் ஏற்படும் நன்மையினை

" நல்லாரைக் காண்பதுவும் நன்றே
நலமிக்க நல்லார் சொற் கேட்பதுவும் நன்றே- நல்லார்
குணங்கள் உரைப்பதுவும் நன்றே அவரோடு
இணங்கி இருப்பதுவும் நன்றே" எனும் பாடல் மூலம் வெளிப்படுத்தியுள்ளார்.

ஔவையாரின் ஆத்திசூடியில் நூறுக்கும் மேற்பட்ட ஒழுக்கங்களும் கொன்றைவேந்தனில் நாம் பின்பற்றவேண்டிய ஒழுக்கங்களையும் விளக்கியுள்ளார். அதுமட்டுமன்றி ஒழுக்கத்தை பிரதானமாகக் கொண்ட "மனுஸ்மிருதி" எனும் இலக்கியமானது "விதித்தன செய்தலும் விலக்கினை ஒழித்தலும் அறம்" எனக் கூறுகின்றது. அதாவது மனித வாழ்விற்கு எவை எவை சிறந்தது என்பதை செய்தலும் விலக்கப்பட்டவற்றை செய்யாது விடுதலும் அறம் அல்லது ஒழுக்கம் எனக் கூறுகின்றது.

இவ்வாறு மேலே கூறப்பட்ட அறிஞரின் கருத்து திருக்குறள், பாரதியார் பாடல்கள், ஔவையாரின் ஒழுக்கக் கருத்துக்கள் போன்ற நூல்கள் அறத்தினை அல்லது ஒழுக்கத்தினை தெளிவாகக் கூறியுள்ளன. இவ் ஒழுக்கமானது இந்து மக்களின் வாழ்வில் ஓர் அத்தியாயமாக அமைந்து விளங்குவதில் வியப்பில்லை.

உசாத்துணை நூல்கள்:


1. ரவீந்திரநாத் தாகூர் (1959) மனிதனின் சமயம்
2. விநாயகர் தருமநிதிய வளந்துதவு சமூக சேவை நிறுவன இலவச வெளியீடு (1998)ஔவையார் அருளிய அறநெறி நூல்கள்
3. தமிழ்வேள் ச.மெய்யப்பன் (1998) பாரதியார் கவிதைகள்
4. பரிமேலழகர் (1968) திருக்குறள்

# கனவு மெய்ப்பட வேண்டும்

செ.தீபிகா
க.பொ.த. (உயர்தரம்) 2010

அழகிய சோலைகளால் நிறையப் பெற்றது "செவ்வூர்" எனும் கிராமமாகும். இங்கே இயற்கைவளம் பொருந்திக் காணப்பட்டதால் உழவர்களே அதிகமாக வாழ்ந்து வந்தனர். இவர்கள் விவசாயத்தின் மூலம் தமது வருமானத்தை பலமடங்காக்கி செல்வச் செழிப்போடு வாழ்ந்து வந்தனர். இவ்வூர மக்களின் செல்வப்பெருக்கின் குறியீடாக கட்டடங்கள் விண்ணை முட்டுவனவாய் உயர்ந்திருந்தன. ஆயினும் இயற்கையின் நியதிக்கேற்ப அங்கே சிற்சில குடிசைகளும் காணப்பட்டன. இக்குடிசைகளுள் இருட்டுக்குள் இருளை அடக்கி குருட்டுத்தவம் செய்துகொண்டிருந்தது ஓர் குடிசை. ......அதுதான் பெரியதம்பியின் மாளிகை.

பெரியதம்பி ஊக்கமும் உற்சாகமும் நிறைந்த ஓர் விவசாயி. அது மட்டுமின்றி தளராத மனஉறுதியும் தன்னம்பிக்கையும் உடையவன். இவன் மனைவி சின்னம்மா. இவர்களது அன்னியோன்னியமான இல்வாழ்விற்கு எடுத்துக் காட்டாய் இரு ஆண்பிள்ளைகளும் இரு பெண்பிள்ளைகளும கிடைக்கப் பெற்றனர். நாட்கள் ஆற்றுநீர் போல வேகமாக உருண்டோடின. பிள்ளைகள் நாளொருமேனியும் பொழுதொருவண்ணமுமாய் வளர்ந்தனர். கல்விகற்பதற்காய் பாடசாலையில் சேர்க்கப்பட்டனர். இன்றைய காலகட்டத்தில் நாகரீகம் வளர்ந்து கொண்டே செல்கின்றது. இதனால் மனிதனது தேவைகளும் அதிகரித்தே செல்கின்றது.

நாகரீக மாற்றத்திற்கேற்ப தன்னைத் தானே மாற்றிக் கொள்பவன் தான் மனிதன் ஆயினும் பெரியதம்பியின் குடும்பநிலையில் அவனது வீட்டவர் நாகரீக வாழ்விற்கு தலைப்படுவது அநாகரீக மென்றே கூறமுடியும். ஏனெனில் நாம் ஒவ்வொருவரும் இருப்பதைக் கொண்டு வாழப்பழகிக் கொள்ள வேண்டும். இதுவே மானிடத்தின் மகத்துவமாகும். இங்கு பெரியதம்பியோ சாதாரண கூலித் தொழிலாளி அவன் தனது அன்றாடத் தேவைகளை நிறைவு செய்வதே பெரும் வேலை. பெரியதம்பியின் உடல் ஒருநாளைக்கு இளைப்பாறினாலேயே அவனது வீட்டு அடுப்பங்கரையில் அன்று புகைமூட்டத்தைக் காணவே முடியாது.

எனவே தனது குடும்பநிலையை உணர்ந்தவனாய் பெரியதம்பி தினசரி தொழிற்பட்டு வந்தான். தினமும் அதிகாலை எழுந்து வேலைக்குப் புறப்பட்டு பொழுது சாய்ந்த பின்னரே வீடுவந்து சேருவான். அவனது கஷ்ரங்களை உணர்ந்தவளாய் அவன் மனைவி

சின்னம்மா ஆதரவாக இருந்து வந்தாள். பிள்ளைகளுக்கான செலவுகள் அதிகமாக இருந்ததனாலும் தவிர்க்க முடியாதிருந்ததினாலும் குடும்பம் வறுமையில் வாடியது. வழமைபோலவே அன்றும் அதிகாலை எழுந்து தன்கடமை களை முடித்து வேலைக்குத் தயா ரானான் பெரியதம்பி. வழமையைக் காட்டிலும் சற்றுத்தாமதமாக எழுந்தமையால் புறப்படவும் சற்றுத் தாமதமானது.

ஆயினும் தான் தாமதிக்கும் ஒவ்வொரு நொடியும் தன்னைத் துன்பத்திற்கு உட்படுத்தும் என்பதனை உணர்ந்தவனாய் தயாரானான். ஒளிவிட்டுப் பிரகாசிக்கின்ற வானத்து விண்மீன் போன்றவள் அவன் மனைவி சின்னம்மா. தினம் தினம் அவளது புன்னகை பூத்த முகத்தின் ஒளியால் பெரியதம்பியின் சோகங்கள் சிதறடிக்கப் படுவது வழமையே. எவ்வளவு அவசரமாக இருப்பினும் தனக்காக இல்லாவிட்டாலும் தன் மனைவியின் திருப்திக்காகவும் சந்தோசத்திற்காகவும் அவளது கைகளால் தேநீர் பெற்று அருந்துவது பெரியதம்பிக்கு சுகமாகவே நிலவியது. அன்றும் வேலைக்கு தயாரானபின் தன் மனைவியின் அன்புகலந்த வழியனுப்பலுக்காக சின்னம்மாவை அழைத்தான்.

தனது கைகளிலே தேநீர் கோப்பையை ஏந்தியவளாய் சின்னம்மா இதோ வந்துவிட்டேன்...... என்றபடி வந்து சேர்ந்தாள். பெரியதம்பி நின்ற இடத்தை அவளது கால்கள் சேரமுன்பே தன் கணவனிடத்தில் தேநீரை நீட்டின அவளது கைகள். அதனை வாங்கியவன் அதனை ஆசையோடு வாங்கி மடமட வெனக் குடித்தான். அக்காட்சியினைக் கண்ணுற்று நிறைவுகண்டு கொண்டிருந்தது சின்னம்மாவின் உள்ளம். என்றோ ஒரு நாள் தேநீரின் இனிப்பை உணர்ந்த அவனது நாவு அன்றும் இனிப்பது போல் பாஷாங்கு செய்தபடி தேநீரை உள்வாங்கியது. தேநீர் றொம்பப்பிரமாதம் இதோ கோப்பையைப் பிடி..... என்றவனாய் தன்மனைவியிடம் விடைபெற்றுக் கொண்டான் பெரியதம்பி. தேநீரில் சீனியைக் கலந்தவளுக்கு தெரியாத அதன் சுவை....? அங்கே சீனியிருந்த கவளத்தில் அங்குமிங்குமாய் ஒட்டியிருந்த சீனித்துகள்களால் உருவாக்கப்பட்டதே பெரியதம்பி அருந்திய தேநீர். தன் கணவனின் பாசத்தையும் அவனது பெருந்தன்மை யையும் நினைத்து சின்னம்மாவின் கண்களிலிருந்து ஆனந்தக் கண்ணீர் சொட்டியது. அன்பான கணவன் பண்பான பிள்ளைகளின் அரவணைப் பால் வறுமையிலும் செம்மையாக வாழ்ந்து வந்தாள் சின்னம்மா.

மனைவியிடம் விடைபெற்றுக் கொண்ட பெரியதம்பி மிகவேகமாக புறப்பட்டுச் சென்றான். அவன் வேலைக்கு செல்லும் இடம் அவனது வீட்டிலிருந்து 2,3 மைல் தொலைவானது.

அதைக்காட்டிலும் அவன் பயணிக்கும் சைக்கிளோ மிகவும் பழுதடைந்த நிலையில் காணப்பட்டது. ஆயினும் குறித்த நேரத்தில் வேலைக்கு சென்று சேராவிடின் அவனது வேலையே பறிபோய்விடும் என்ற ஏக்கத்தில் விரைந்து கொண்டிருந்தான். அவனது கால்கள் சைக்கிளை ஓட்டும் வேகத்தைக் காட்டிலும் அவனது ஏக்கங்களால் மனோவேகம் அதிகமாயே ஓடியவண்ணம்இருந்தது. அப்போது மழைக்காலம் என்பதாலும் அதிகாலை என்பதாலும் காரிருள் சூழ்ந்து காணப் பட்டது. பாதைகள் இருளாகவும் மக்கள் நடமாட்டம் இன்றியும் காணப்பட்டன. ஆயினும் எதற்கும் அஞ்சாதவனாய் விரைந்து கொண்டிருந்த பெரியதம்பியை எங்கிருந்தோ வேகமாக வந்த லொறி ஒன்று மோதிச்சென்றது. யாருமே இல்லாத அந்தப்பொழுதில் உதவு வதற்கு யாரும் முன்வரவில்லை. மழைக்காலம் என்பதால் வீதியோரங் களில் ஆங்காங்கே சிறுகுட்டைகளும் தேங்கி நின்றன. பெரியதம்பியின் உடல் ஒரு குட்டையினுள் வீசப்பட்டநிலையில் காணப்பட்டது. இருள் மெல்ல மெல்ல விலகி சூரியன் பூமாதேவியை ஸ்பரிசிக்க ஆரம்பித்தான். வீதியில் மக்கள் நடமாட ஆரம்பித்தனர்.

பெரியதம்பியின் உடல் இரத்த வெள்ளத்தில் கிடப்பதை பலமக்கள் கண்ணுற்றனர். மோதிச் சென்ற மறுகணமே துடிதுடித்த ஜீவன் பெரிய தம்பியின் உடலைப் பிரிந்து சென்றமை வருந்தக்கூடிதே. இச்செய்தியை சின்னம் மாவிடம் காவிச்சென்றனர். சென்றவர்களால் கூறப்பட்ட வார்த்தைகள் சின்னம்மாவின் செவிகளைச் சென்றடைய முன்னரே அவள் மயக்கமுற்று வீழ்ந்தாள். செய்தி அறிந்தவள் மின்னல் தாக்கிய பசும்மரம் போலும், இடிவீழ்ந்த பாம்புபோலும் மனம் கருகித் துடித்தாள். மேலும் தன் கணவனின் பிரிவுத்துயராலும் தன் பிள்ளைகளின் எதிர்கால வாழ்க்கை பற்றியும் எண்ணிக் கதறினாள். அவளது அழுகை செவ்வூரையே அதிரச் செய்தது எனலாம்.

தன் கணவனின் கடமைகளை நிறைவுசெய்தவளாய் நடைப்பிணமாக காட்சியளித்தாள் சின்னம்மா. வாழ்க்கை யில் வேதனையையும் சலிப்பையுமே உணர்ந்த அவளது உள்ளத்தில் இன்பத்தை வரவழைப்பவன் அவள் கணவன். அவன் தன்னைவிட்டுப் பிரிந்ததை தாங்கமுடியாது தவித்தாள். அவனது நினைவுகள் அவளை ஊடுருகச்செய்தன. தன்பிள்ளை களுக்காக வாழ முற்பட்டபோதும் அவளது துயர் கொடிபோல அவளை ஆதாரமாகக் கொண்டு சூழ்ந்து நின்றது. உலைக்களத்தில் பட்ட புழுப்போலும், யானைகாலில் மிதிபட்ட பசுந்தளிர் போலும் அவளது மனம் துடிதுடித்தது.

தனது பிள்ளைகளை எண்ணியவளாய் தன்முடிவினை மாற்றியவளாய் வேலைக்குச் செல்ல

தயாரானாள். ஒரு செல்வந்த வீட்டில் பணிப்பெண்ணாக சேர்ந்து கொண்டாள். நிமிடங்கள் நாட்களாகி நாட்கள் வருடங்களாகி கடந்து சென்றன......... பிள்ளைகள் பெரியவர்களானார்கள். மூத்தவன் பெயர் சுமன். அவனைத்தொடர்ந்து நிசான் எனும் தம்பி. இவர்களைத் தொடர்ந்து இரு சகோதரிகள். நால்வரும் தமது குடும்பநிலையை உணர்ந்தவர்களாய் கல்வியில் சிறந்து விளங்கினர். சுமனுக்கு வயது 16. க. பொ.த. சாதாரண பரீட்சைக்கு தோற்ற ஆயத்தமானான்.

அச்சமயத்தில் தனது மகனின் கற்றல் செலவுகளை உணர்ந்தவனாய் சின்னம்மா செயற்பட்டாள். தன்மகனின் ஊக்கமும் திறமையும் தொலைதூரத் திலன்றி பிரகாசமான வாழ்வு அண்மிப்பதை உணர்த்தின. தன் பிள்ளைகளுக்காய் முற்றுமுழுதாய் தன்னை அர்ப்பணித்தாள். ஆயினும் தன கணவனின் பிரிவிலிருந்து அவளால் மீளவே முடியாமல் தவித்தாள். மடிந்தும் மணம் வீசும் அந்தநாட்கள் அவள் மனதில் பசுமரத்தாணிபோல் பதிவாகின. தன் உடலில் அக்கறை இன்றிச் செயற்பட்டாள். சாப்பாடு, நேரத்திற்கான உறக்கம், நிம்மதி இவையின்றி நோய் வாய்ப்பட்டாள். ஆயினும் அந்த நிலையிலும் தன் பிள்ளைகட்காய் தன்னை செயற்படுத்தினாள். அவளது உடல் நிலை மோசமானது. சின்னம் மாவை படுக்கை விரிப்புகள் பவித்திரமாகக் பற்றிக்கொண்டன.

இந்நிலையில் எதுவும் முடியாத வளாய் படுக்கையாய் கிடந்தாள் சின்னம்மா. சுமன் பரீட்சைக்குத் தோற்றினான். வீட்டுக்கஸ்ரங்கள் அவனை வாட்டின. ஆயினும் சிறந்த பெறுபேறுகளுடன் உயர்தரம்கற்று க.பொ.த.உயர்தரப்பரீட்சையிலும் சித்திபெற்றான். தன்பெறுபேறுகளோடு வேலைக்காக அலைந்து திரிந்தான். மேலும் கல்விகற்கும் வசதி அற்றவனாய் தன் குடும்பத்தை காப்பாற்றும் நோக்குடன் வேலைதேடி அலைந்தான் நாளாக நாளாக தாயின் உடல்நிலை மோசமடைந்தது. தமக்காக தம்தாய் பட்ட துன்பங்களையும் கஷ்ரங்களையும் நினைத்து வருந்தினான். அவளைக் கடைசிக் காலத்திலேனும் நிம்மதியாக வைத்திருக்க ஆசைகொண்டவனாய் சுமன் அலைந்தான்.

பல்வேறு இடங்களில் வேலைக் காக சிரமப்பட்டான். அவனது சகோதரி கள் சகோதரன், தாய் அனைவரையும் கவனிப்பதோடு வீட்டு வேலைகளையும் அவனே கவனித்துவந்தான். எல்லாத் துன்பங்களும் அவனை வாட்டி எடுத்தன. இவற்றால் வாய்மூடிப்புலம்பினான். யாரிடம் போவது....? என்ன செய்வது.....? எதுவுமே தெரியாமல் திக்குமுக் காடினான். அவனது கஷ்ரங்களை அறிந்தவராய் அவனது ஆசிரியர் ஒருவர் அவனைத் தேடி வந்தார்.அவனது குடும்பநிலையைக் கண்ணுற்றவராய்

அவன் மீது இரக்கம் கொண்டார். தனக்கு தெரிந்த நிறுவனம் ஒன்றில் வேலைக்காக ஆள்தேவை என்று அறிந்ததாயும் அங்கே உன்னை சேர்த்து விடுவதாயும் கூறினார். அதைக்கேட்டு மிக்கமகிழ்சி கொண்டவனாய் பூரிப் படைந்தான். எப்போ..? எங்கே......? நிஜமாவா...? நாளைக்கே....? என்று தன்னை அறியாமல் வார்த்தை மழை பொழிந்தான். உடனுமே ஆசிரியர் நாளைக் காலை தன்னிடம் வரும்படியும் தான் அழைத்துச் செல்வதாயும் கூறினார். அதன் பின் தம்பி.... அந்த வேலை பறிபோயிருக்கக் கூடாது என்றுதான் நானும் விரும்புறன் நீயும் வேண்டிக்கொள் என்றபடி வெளியேறினார்.

பல்வேறு இடங்களில் வேலைதேடி ஏமாற்றத்தையே சந்தித்த சுமனுக்கு வாழ்வில் புதிதாய் ஓர் நம்பிக்கை பிறந்தது போலும். மகிழ்சியில் திளைத்தான். காலை எழுந்து சீக்கிரமே ஆசிரியரைச் சந்திக்கணும் மறுநாளே வேலையில் சேர்ந்திடனும் முதல்மாதச் சம்பளத்தில் அம்மா, தம்பி, தங்கச்சியவைக்கு என்னென்ன வாங்குவது என்ற பெரிய பட்டியலே போட்டது அவனது மனது. குதூகலத்தில் அன்று இரவு நேரத்தோடு தூங்கிவிட்டான் சுமன். வேலையில் சேர்க்கப்பட்டு ஒன்று இரண்டு என மாதச்சம்பளங்களை வாங்கிட்டே இருந்தான். வாழ்க்கையில் புதுவசந்தம் வீசத்தொடங்கியது. அவன் வாழ்க்கை யில் தென்றலின் சுகத்தை உணர முடிந்தது. குடிசை மாறி கோபுரமானது. வீட்டில் சந்தோசம் குடி கொண்டது. தாய் சகோதரர்களின் சந்தோசத்தில் வீடே கலகலப்பாய் காணப்பட்டது.

தாங்கமுடியாததும் நம்ப முடியாததுமான பேரின்பம் திடீரென சகோதரர்களின் சத்தம் அப்போதுதான் கண்விழித்துப்பார்த்தான் சுமன். அடடா இன்னும் விடியவே இல்லையா...? நான் வேலையில் இன்னும் சேரவில்லையா.....? இவை அனைத்தும் கனவா..? என்று தன்னைத்தானே வினாவியவண்ணம் மறுபடியும் புரண்டுபடுத்தான். அவன் உறங்கிக்கிடந்தாலும் அவனது உறங் காத விழிகள் விடியலுக்காய் காத்தி ருந்தன. தன் கனவு நிஜமா குமா..? மெய்படுமா....? என்றவன் நிச்சயம் மெய்ப்படும். இரவும் பகலும் இயற்கையின் நியதி என்பது உண்மை யாயின் தன் வறுமையின் முடிவுநாளும் இதுவே என உறுதிகொண்டவனாய் உறங்கினான். அதிகாலை எழுந்தான் வேலைகளை முடித்துவிட்டு அவசர அவசரமாக தன் ஆசிரியர் வீட்டை நோக்கிப் புறப்பட்டான். தன் எண்ணற்ற நினைவுகளோடு தன் கனவு மெய்ப்பட வேண்டும் என்ற ஆசையோடு மிகவேகமாக நடந்தன அவனது கால்கள் ஆசிரியரைத் தேடியனவாய்......

# கிராமக் கல்வி விருத்தி மூலம் சமூக மேம்பாடு சாத்தியமாகுமா?

- ஒரு சமூகவியல் நோக்கு

எஸ்.ஜனார்த்தனி

கிராம மேம்பாட்டிற்கு கல்வியும், உடல்நலமும், உளநலமும் உறுதுணை யாய் அமைகின்றது.கல்வி மனதிற்கும், உடலுக்கும் பயிற்சியளிப்பதோடு மட்டு மல்லாமல் சில முக்கிய நோக்கங் களையும் மனித சமூகத்திற்கு எடுத் துரைக்கின்றது.

கிராம மக்களிற்கு முறைமை, முறையற்ற கல்வியூடாக நல்ல கல்வியை ஊட்டலாம்.மக்களையும் கிராமத்தையும் சுக நலன் கட்டிக் காக்கிறது. நலம் பற்றிய அறிவை கிராம மக்கள் கட்டாயம கொண்டிருக்க வேண்டும். முறைமைக் கல்வி (formal) மூலம் நலம் பற்றிய அறிவைக் கொண்டிராத மக்கட்கு நலம் பற்றிய அறிவு கிராமக்கல்வி களம் மூலம் அளிக்கப்படவேண்டும். பணியின்றி வளரும், வாழும் அறிவைக் கல்வியூடாக கிராம மக்கட்கு ஊட்டவேண்டும்.

கல்வியூடாக கற்றவர்கள் நன்மை, தீமையை நன்கு பகுத்தா ராய்ந்து சமுதாய நன்மைக்கு வேண்டிய அம்சங்களை அறிந்து வாழக்கற்றுக் கொள்கின்றனர். எவ்வொருவன் நல்ல கல்வியைக் கற்றுக்கொள்கிறாரோ அவன் தன்னுடைய தரத்தையும் வாழ்க்கைமுறையையும் மேம்படுத்தி தான் பெற்றுக்கொண்ட அறிவின் உச்சப்பயன்பாட்டை பெற்று தன் அடைவையும் காட்டிக் கொண்டு கற்றபடி நடந்து கொள்ளமுடியும். கல்வியே வாழ்வதற்கு வேண்டிய தொழிலையும் தேடிக்கொடுக்கும். நல்ல கல்வியையும் நல்லதொழிலையும் உடையவன சமுதாயத்தில் உயர்ந்த இடத்தைப் பெறுகிறான்.

மனிதன் தன் வாழ்க்கையில் தேடமுடியாத சொத்து உடல் உள நலன். மாணவன் இளமையில் நலத்துடன் வாழக் கற்றுக்கொள்ள வேண்டும். ஆசிரியன் வாழும் வழியைக் கற்றுக் கொடுக்க வேண்டும். கிராம மாணவர்கள் மத்தியில் காணப்படுகின்ற போசாக்கின்மையும் கல்வி விருத்தியில் தாக்கத்தை ஏற்படுத்துகின்றன. இவர் களது அடிப்படைத் தேவைகள் நிறை வேற்றப்படாதத நிலையில் உயர் நிலைக்குத் தேவையான சுயதிறன் எய்தலை அடையமுடியாது. இவ்வாறான நிலையில் அவர்களின் கல்வி சார்பான கவனம் சிதறடிக்கப்பட்டு விளையாட்டு மற்றும் இதர கற்றல் செயற்பாடுகளில் சுறுசுறுப்பாக இயங்கவோ அல்லது மனவுறுதியையோ ஆர்வத்தையோ முன்னெடுக்கமுடியாத நிலை ஏற்படுகின்றது.

ஆகவே கிராமப் பாடசாலை களில் நலத்தைப் பேண பொறுப்

பேற்கப்பட வேண்டும். இப்பாடசாலைகள் சூழலுக்கேற்ப நலத்தைப் பேணக்கூடியதாக செயற்படவேண்டும். கிராமப் பள்ளிகளிலே அடிப்படையில் நலம் பற்றிய விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தவேண்டும். அரசாங்கத்தின் மூலம் சத்துணவுத்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட வழிவகுக்க வேண்டும். நல்ல பழக்கவழக்கங்கள், நடை, உடைபாவனைகளைப பெற்றுக் கொள்வதாக பாடசாலைச் சூழல் மாற்றியமைக்கப்படவேண்டும்.

ஒரு பிள்ளையின் கல்வியடைவுகள் அவனது குடும்ப பொருளாதார நிலைமைகளாலே வடிவமைக்கப்படுகின்றன. கிராமத் தொழிலாளியின் வாழ்க்கையில் பலதரப்பட்ட பிரச்சினைகள் காணப்படுகின்றன. இவ்வாறான மாணவர்கள் மத்தியில் ஏற்படுகின்ற பொருளாதாரச் சுமைகள் கற்றலில் பாதிப்பை உண்டாக்குகின்றன. இதன் காரணமாக கிராமப் பள்ளிமாணவர்கள் தொடர்ந்தும் கல்விகற்க முடியாது இடைவிலகும் தன்மை அதிகமாகக் காணப்படுகின்றது. எனவே கிராமக் கல்வியில் தொழிலாளக்குழந்தைகள் அவர்களது பெற்றோர்கள் மீது பொருளாதாரச் சுமை ஏற்படாமல் மாணவர்களுக்கான அனைத்து வசதிகளையும் (பெருமளவில்) கிராமிய முன்னேற்றச் சங்கங்கள், சனசமூகநிலையங்கள், இணைந்து நிவேற்ற முன்வர வேண்டும். அப்போது மாணவர்கள் இடைவிலகல் ஓரளவில் குறைக்கப்பட்டு அவர்கள் தொடர்ச்சியான கல்வி ஓரளவாயினும் உறுதி செய்யப்படும்.

மாணவர்களுக்கு கிராமப் பாடசாலைகளில் கல்வி கற்ப்பிக்கும் ஆசிரியர்கள் பன்முக ஆளுமை கொண்டவர்களாக காணப்படல் வேண்டும். இவர்கள் தமது பாடத்துடன் உளவியல், சமூகவியல், தொழில்துறை, சுகாதாரம் போன்றவற்றில் அடிப்படை அறிவை உடையவர்களாகவும் காணப் படவேண்டும். அல்லது பயிற்றப்பட்ட சேவை மனப்பாங்குடன் இவர்கள் சேவையாற்ற முன்வரும்போதே தொழிலாளக் குழந்தைகள் கல்வி விருத்தியயடையும். பாடசாலையும், சமூகமும், வீடும் இவ்விடயத்தில் இணைந்து நிறுவனங்களாகச் செயற்படவேண்டும்.

எல்லாவற்றிற்கும் மேலாக ஆசிரியரும் பெற்றோரும் கூட்டாக முயன்று மாணவனுக்கு கீழ்படிவு, பயபக்தி, மதிப்பளிப்பு, விவேகம், வீரம் போன்றவற்றை அடிப்படையில் இருந்தே உருவாக்கி நல்ல கல்வியைப் பெற பக்குவப்படுத்தப்பட வேண்டும். இது ஆசிரியரதும் சமூகநலன் அக்கறையுடைய நிறுவனங்களினதும் குழுக்கருத்தரங்கு கலந்துரையாடல் மூலம் வலியுறுத்தப்படல் வேண்டும். ஆசிரியர்கள் பெற்றோர்களை வகுப்பு ரீதியாக அழைத்து கலந்துரையாடல் நிகழ்த்துவது மிகப்பயன் விளைவிக்கும்.

கல்வித்திணைக்களம் கிராமப் பாடசாலைகளை புறக்கணிக்கக் கூடாது.பாடசாலை சிறிதாயினும் அதற்கு

சகல வசதிகளும் செய்து கொடுக்கப் பட வேண்டும். பின்தங்கிய பிரதேசமாக கருதப்படாது நகரப்பாடசாலை பெறும் அனைத்து வசதி வாய்ப்புகளும் இவை கட்கும் ஏற்படுத்தப்படவேண்டும். குடிநீர்வசதி, மலசலகூடவசதி போன்ற வற்றுடன் கற்றல் உபகரணங்கள் போன்ற தேவைகளை நிறைவேற்ற நடவடிக்கை எடுக்கவேண்டும். கல்வி கற்பது தேர்ச்சி அடைவதற்காக மட்டு மல்லாமல் அவர்களின் வாழ்க்கைக்கு வழிகாட்டுவதாகவும் அமைதல் வேண்டும். இவ்வாறு அமைவதன் மூலம் கிராமத்து மாணவர்கள் மத்தியில் ஆசிரியர்கள், பெற்றோர்கள் மீது கீழ்படிவு, பயபக்தி, மதிப்பளிப்பு, விவேகம், வீரம் போன்ற பண்புகள் அடிப்படையில் இருந்தே உருவாக்கப் பட்டு நல்ல பக்குவப்படுத்தப் பட்டவர்களாகத் திகழ்வார்கள். இதன் மூலம் பாடசாலையும், வீடும், சமூகமும் சிறந்த பண்புகளின் அடிப்படையில் மேம்படுத்தப்படும்.

இவ்வாறு கிராமக்கல்வியினை அரச மற்றும் சமூகநலன் அக்கறையுடைய நிறுவனங்கள், பாடசாலைச்சமூகம் கூட்டாகச் சேர்ந்து பல்வேறு திட்டங்கள் நடைமுறைகளி னூடாக முன்னேற்றம் அடையச் செய்வதனூடக கிராம மறுமலர்ச்சியை உண்மையில் காணலாம்.

Referance books:


யாழ்ப்பாண பல்கலைக்கழக சமூகவியல் சமூகம் 1997

மானுடம் சமூகவியல் ஏடு-01


ஒரே குறிக்கோள்
எல்லையற்ற ஊக்கம்
தளர்வில்லாத நெஞ்சுறுதி
சளைக்காத உழைப்பு
நேர்மையான பாதை உ வெற்றி
கிடைக்காமலா போய்விடும்?

# மெல்லத் தமிழ் இனிச்சாகும்

செல்வி.சி.சிவகௌரி
B.A(Hons)

மனிதன் பயன்படுத்தும் தொடர்பாடல் ஊடகங்களுள் மொழியே மிகவும் பிரதானமானது. நமது அபிப்பிராயங்கள், உணர்வுகள், தகவல்கள் முதலியவற்றைப் பிறர் இலகுவில் அறிந்து கொள்ள அல்லது புரிந்து கொள்ளச்செய்வதே தொடர்பாடல் என அகராதிகள் தொடர் பாடலுக்கு வரைவிலக்கணம் கூறுகின்றன. சைகைகள், அடையாளங்கள், பேச்சு, எழுத்து போன்ற பலவகையான ஊடகங்கள் தொடர் பாடலுக்குப் பயன்படுத்தப்படுகின்றன.ஒரு பரந்த பொருளில் இவை யாவற்றையும் நாம் மொழி என்று கூறினாலும் பேச்சையும் எழுத்தையும் மொழி என்ற சொல்லால் சுட்டுகிறோம். உலகில் 6000 மொழிகள் தோன்றின என்றும் அவற்றுள் 2700 மொழிகள் இன்றும் உயிருடன் இருக்கின்றன என்றும் ரஷ்யா நாட்டுப் "பிராவ்தா" இதழ் கூறுகிறது. இந்த 2700 மொழிகளுள் இலக்கிய வளம் உள்ள மொழிகளில் தமிழும் ஒன்றாகும். வடமொழி, கிரேக்கம், இலத்தீன், ஈப்ரு ஆகியவை போலவே தமிழ்மொழியும் மிகவும் தொன்மை உள்ள பெரு மொழியாகும். உயர்தனிச் செம்மொழியுமாகும்.

இத்தகைய தன்மை வாய்ந்த தமிழ்மொழியின் அருமை பெருமைகளைத் தமிழ்க் கவிஞர்களும், அறிஞர்களும் நன்கு எடுத்துக் காட்டிக் கூறியிருக்கிறார்கள். சமய குரவர்களில் ஒருவரான மாணிக்கவாசகர் "ஒண்தீந்தமிழ்", "தண்ணார் தமிழ்" என்றும் கம்பர் "என்றுமுளதென்தமிழ்" என்றும் பாரதி "யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழிபோல் இனிதாவது எங்கும் காணோம்"என்றும் தமிழின் அருமை பெருமைகளைப் பாடியுள்ளனர்.

இவ்வாறு பெருமை பூத்த தமிழ்மொழி இன்றைய காலகட்டத்தில் மாற்றங்களையும் அழிவுகளையும் கண்டு வருகின்றது. அதாவது தமிழ்மொழி தனக்குரிய சிறப்புக்களிலிருந்து விலகி நிற்கும் விதத்தினையும் அதற்கான காரணங்களையும் எல்லாவற்றிற்கும் மேலாகத் தமிழ் வாழும் மொழியாக இருக்கும் என்பதையும் தொட்டுக் காட்டுவதே இந்தக் கட்டுரையின் நோக்கமாகும்.

தமிழ்மொழியில் ஏற்படும் மாறுதல்களை எழுத்து, பொருள் இலக்கணநிலை, உருவம், பிறமொழிக் கலப்புகள் என்பவற்றிற்கூடாக நோக்க முடியும்

ஒவ்வொரு மொழியும் தனக்கான வளர்ச்சியையும் மாற்றத்தையும் கொண்டதாக அமையும் அதேநேரம் தனித்துவத்தையும் இருப்பையும் கட்டமைத்துக்கொள்ளத் தவறுவதில்லை. எனினும் இந்த மாற்றங்களும் அதனால் உண்டாகும் அழிவுகளும் அவற்றின் அடையாளங்களை அந்நியமாக்கி விடுவதோடு அவற்றின் மூலவேர்களை

இல்லாமலும் செய்கின்றன. இத்தகைய பின்னணியில்தான் தமிழ் என்ற உருவ அமைப்பின் மாறுதல்களும் அழிவுகளும் பற்றி பேச வேண்டிய தேவை ஏற்படுகின்றது. மொழி பண்பாடு என்பவை குறித்து ஆய்வு செய்தவர்கள் இவற்றின் அழிவினை இரண்டு வகையாக நோக்குகின்றனர்.

1. இயற்கையில் தானாகவே அழிதல்
2. செயற்கையாக அழிக்கப்படுதல்.

இவற்றில் இயற்கை அழிவென்பது இயல்பாக எதிர்பாராத விதமாக இடம்பெறுவது. செயற்கையான அழிதலென்பது அரசியல், சமூக, சமய பொருளாதாரக் காரணிகளால் திட்டமிட்டு அழிக்கப்படுவதாகும். இந்நிலையில் மொழி தூய்மையற்று தனித்துவத்தை இழக்கவும் நேரிடும்.

இலக்கணத்தூய்மை என்பது மரபுவழிவந்த இலக்கணக் கொள்கையை வழுவாது கடைப்பிடித்தலையும் மொழியமைப்பில் ஏற்படும் புதிய மாற்றங்களையும் வழக்காறுகளையும் நிராகரிப்பதையும் எழுத்து வழக்கில் பேச்சுவழக்கின் செல்வாக்கை முற்றிலும் ஒதுக்குவதோடு பேச்சு வழக்கையும் எழுத்துவழக்கையும் ஒட்டி அமைத்துக்கொள்ள வலியுறுத்துவதையும் குறிக்கும். இவ்வகையில் எழுத்திலும் பேச்சிலும் மரபுவழி இலக்கண நெறி பேணப்படவேண்டும் என்பதே இலக்கணத் தூய்மைவாதத்தின் அடிப்படைஎனலாம். வேறுவகையில் சொல்வதானால் செந்தமிழ்மரபினை அல்லது உயர்இலக்கிய மரபினை வலியுறுத்துவதே இலக்கணத் தூய்மைவாதம் எனலாம். தன் எழுத்துக்களில் இலக்கணத்தூய்மையை முற்றிலும் பேணியவர்களில் ஒருவரான சுவாமி விபுலானந்தர் இது பற்றிக் கூறுவது எம் கவனத்திற்குரியது. "ஒவ்வொரு மொழிக்கும் சிற்சில சிறப்பியல்புகள் உள்ளன.

அவை தம்மை மாறுபடாது பாதுகாத்தல் ஆன்றோர்க்கியல்பு.... மொழி முதலிலும் இறுதியிலும் நிற்றற்குரிய எழுத்துக்கள் இவையாமெனவும் இன்ன இன்ன எழுத்துக்களின் முன்னர் இன்ன இன்ன எழுத்துக்கள் மயங்காவெனவும் இலக்கண நூலாசிரியர்கள் வகுத்துக் காட்டியிருக்கின்றனர். அவர் ஆராய்ந்தமைத்த விதிகளுக்கு இயைவாகச் சொற்கள் ஆக்கிக் கொள்ளுதல் முறையாகும். வினையெச்சு கிளவி, பெயரெச்சு கிளவி, தொகைமொழி, தொடர்மொழி என்பவற்றிற்கு இலக்கண நூலாசிரியர் கூறிய வரம்பினைக் கடைப்பிடிப்பது எல்லாவற்றிலும் இன்றியமையாததேயாம். 1936ல் சென்னையில் நிகழ்ந்த கலைச் சொல்லாக்க மாநாட்டில் நிகழ்த்திய தலைமைப்பேருரையிலேயே சுவாமி விபுலாநந்தர் இவ்வாறு குறிப்பிட்டார் என்பது கவனத்திற்குரியது.

தமிழர்களாய் இருந்தாலும் தமிழில் ஓரளவு தேர்ச்சிபெற்றால்தான் பிழையின்றித் தமிழை எழுத முடியும். பலர் அரசியல் அறிவும் ஆங்கில அறிவும் பொதுஅறிவும் பெற்றிருந்தாலும்

தமிழ்த்தேர்ச்சியின்மையால் நாளிதழ் களிலும் வார மாத ஏடுகளிலும் நல்ல தமிழ் எழுத இயலாதவர்களாய் இருப்பதைக் காண்கிறோம். இங்குதான் இலக்கணப் பிழைகளுடன் கூடிய தமிழ் தோற்றம் பெறுகிறது. வாக்கியங்களை எழுதும் போது இதழாசிரியர்கள் எழுத்தாளர்கள் மாணவர்கள் எனப் பலரும் பல தவறுகளைச் செய்கின்றனர். ஒருமை பன்மை வினைமுற்றுப் பிழைகள் நாளிதழ்களில் மலிந்திருக்கக் காணலாம். ஆங்கிலத்தில் இப் பிழையைச் செய்தால் நம்மவர்களே எள்ளி நகைப்பார்கள். ஆனால் தமிழில் கட்டுப்பாடுகள் இனிக்கிடையா என்று அமையவேண்டும். பேச்சு மொழியில் தவறுகள் நிகழ்ந்தாலும் கவலை யில்லை. ஆனால் எழுத்து மொழியில் தவறு செய்தால் அது மொழிக்குச் செய்யும் தீமை என்றுதான் கூறவேண்டும். இவ்வாறே 'மக்கள் கிடையாது' என எழுதக்கூடாது. 'மக்கள் கிடையார்' என்று எழுதவேண்டும்.

வாக்கியத்தில் பொருள்மயக்கம் என்பது வருதல் கூடாது. வணிக நிலையங்களில் இவ்வாறான பொருள்மயக்கமும் ஏமாற்றமும் தரும் வாக்கியங்களைக் காணமுடிகிறது. உதாரணமாக இங்கு செய்யப்படும் பண்டங்கள் நெய்யில் செய்யப்பட்டவை அல்ல என்ற சிற்றுண்டிச்சாலை அறிவிப்பில் ஏமாற்றமான தன்மையைக் காணலாம். செய்யப்பட்டவை என்பது வரைக்கும் வேறு நினைக்கின்றோம். அல்ல என்ற சொல்லைப்படித்த பின்னர் உண்மையை உணருகிறோம். பதிலாக எண்ணெய்யில் செய்யப்பட்டவை என்றிருந்தால் பொருள் தெளிவாக இருக்கும்.

சொற்றொடர்களைச் சொல்லும் போது இசையறுத்துக் கூறினால்தான் பொருள் தெளிவாக விளங்கும். நன்னூலாசிரியர் "புணர்மொழி இசைத் திரிபால் தெளிவு எய்தும் என்ப" என்று குறிப்பிட்டுள்ளார். சொற்றொடர்களைத் தவறாகப் பிரித்து அச்சிடுதலையும் பல இதழ்களிலும் வணிகநிலையங்களிலும் காணலாம். எடுத்துக்காட்டாக ரயில் நிலைய அறிவிப்புப்பலகை ஒன்றில் "பிரயாணிகள் சாப்பிடும் இடம்" என்று எழுதியிருந்தால் பிரயாணிகள் (மது) அருந்தும் இடம் என்று தவறாகப் பொருள் கொள்ளநேரிடும். இது ரயில் நிலையத்தில் மதுபான நிலையமா? என்ற வினாவை மனதில் தோற்றிவிடும். இவ்வாறே பழக்கடை ஒன்றில் இங்கு பழங்கள் கிடைக்கும் என்று பிரித்தெழுதினால் பழமையான கள் கிடைக்கும் என்று பொருள் தரும்.

இவ்வாறே எழுவாய்க்கேற்ற வினைமுற்றை அநேகர் எழுதுவதில்லை. உதாரணமாக "வீரரும் யானையும் குதிரையும் தேரும் சென்றன' என்றே எழுதவேண்டும். ஏனெனில் இவ் வாக்கியத்தில் அஃறினை எழுவாய்கள் மிகுதியாகக் காணப்படுவதால் சென்றன என்ற பலவின்பால் வினைமுற்று வந்துள்ளது. மாறாக வீரரும் யானையும் குதிரையும் தேரும் சென்றது என எழுதமுடியாது.

வல்லெழுத்து மிகுந்துவரும் இடங்களில் மிகாமல் வருவதும் இலக்கணப் பிழையாகும். கூடுதலாகப் பத்திரிகைகளில் இந்த நிலையைக் காணலாம்.

உ+ம் : தமிழ்நாடு காங்கிரஸ் என்பது (தமிழ்நாடு + காங்கிரஸ்) தமிழ்நாட்டுக் காங்கிரஸ் என்றே வல்லெழுத்து மிகுந்து அமைய வேண்டும்.

இந்த இலக்கணப்பிழைகளைப் போலவே தமிழ்மொழியில் சொற்களுக் கிடையிலான பொருள் கொள்வதிலும் தவறுகள் பிழைகள் ஏற்படுகின்றன. எடுத்துக்காட்டாக அலைகடல் அலைக்கடல் என்ற இரண்டு சொற் தொடர்களுக்குமிடையில் பொருள் வேறுபாடு உண்டு. முன்னுள்ளது அலைகின்ற கடல் எனவும் பின்னுள்ளது அலையையுடைய கடல் எனவும் பொருள் கொள்ளும். க் மிகுவதால் இந்த வேறுபாடு தோன்றுகிறது. அதுபோலவே பெரியார் கண்டார் பெரியார்க்கண்டார் என்ற இரண்டிலும் முன்னுள்ளது பெரியார் மற்றொருவரைக் கண்டார் எனவும் பின்னுள்ளது மற்றொருவர் பெரியாரைக் கண்டார் எனவும் பொருள் கொள்ள வேண்டும்.

மொழியில் எழுத்துப்பிழை என்பது முக்கியமாக சுட்டவேண்டிய ஒன்றாகும். பெரும்பாலும் தழிழைத் தாய்மொழியாகக் கற்காதவர்கள் தமிழர்வாழும் பிரதேசங்களில் தமது அதிகாரங்களின் மூலமும் ஏதாவது தேவையினடியாகவும் மொழிக்கலப்பை ஏற்படுத்த எண்ணுகின்றனர். இதன் விளைவுகளில் ஒன்றே தமிழ் மொழியையும் அவர்கள் பயில நேரிடுகிறது. இந்நிலையில் அவர்களின் எழுத்தாற்றல் குறைவாகவே காணப்படுகிறது. இதனால் எழுத்துப் பிழைகள் கொண்ட பெயர்ப்பலகைகளும் தமிழர் பிரதேசங்களில் தொங்க விடப்படுகின்றன. கடந்த 09.05.2011 அன்று உதயன் பத்திரிகையில் வெளியான தொடரும் தமிழ்க் கொலைகள் சீர்செய்யப்படுவது எப்போது? என்ற தலைப்பில் வெளியான செய்தியும் இத்தகைய எழுத்துப் பிழைகளை நன்கு சுட்டுகின்றது. இத்தகைய தமிழ்க் கொலைகளை அவதானித்தவர்கள் அதற்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். இல்லையேல் தமிழ்க் கொலைகள் நமது சந்ததியினரைச் சென்றடைய வாய்ப்புகள் அதிகமாக உள்ளன என்று கருத்துக்கூறப்பட்டது என அந்தச் செய்தி வெளிவந்தது. அதில் சுட்டப்பட்ட பிழைகள் பின்வருமாறு செய்திப் படமாகக்கப்பட்டுள்ளது.

புதுவருட வாழ்த்க்கள்

தமிழில் பிறமொழிக் கலப்பு என்பது மொழித் தூய்மையை கெடச் செய்கின்ற முக்கிய அம்சமாகும். தமிழ்மொழியிலே காலத்திற்கு காலம் பெருந்தொகையான பிறமொழிச் சொற்கள் வந்து கலந்துள்ளன. ஒரு மொழியைப் பேசுபவரிடத்தில்மொழி மாறும் இயல்பு அவரை அறியாம லேயே ஏற்பட்டு விடுவதை அவதானிக்க முடிகிறது.

"நம் தமிழ் மொழி தனித்து இயங்கும் ஆற்றல் பெற்ற மொழி. எனினும் தமிழில் பிறமொழிச் சொற்களைக் கலந்து வழங்குகின்றோம். இது தவறு. பிறமொழிச் சொற்களைக் கலவாது பேசுதலும் எழுதுதலும் நம் தமிழ்மொழியின் வளர்ச்சிக்கு உதவும்." என அரசசார்பான தமிழ்நாட்டுப்பாடநூல் நிறுவனம் வெளியிட்டுள்ள பத்தாம் வகுப்பிற்கான தமிழ் இலக்கண நூல் (1990:57)கூறுகின்றது. மொழி வளரவேண்டுமானால் பிற மொழிக் கலப்பைத் தவிர்க்கவேண்டும் எனவும் பிறமொழிக் கலப்பினாலேயே மலையாளம் தமிழில் இருந்து பிரிந்து தனிமொழி ஆகியது எனவும் மொழித் தூய்மையாளர்கள் அழுத்திக்கூறுவர். அவ்வகையில் தமிழ்மொழியை அதன் தனித்தன்மையோடு அழியாது பேண வேண்டுமாயின் தமிழில் பிறமொழிக் கலப்பை முற்றாகத் தடுக்கவேண்டும் புதிய சொல்வளத்தைப் பெருக்கு வதற்குத் தனித்தமிழ் கூறுகளை மட்டுமே பயன்படுத்தவேண்டும் என இவர்கள் வாதிட்டனர்.

தமிழில் பிறமொழிக் கலப்பு எனும் போது வடமொழி, ஆங்கிலம், சிங்களம், போர்த்துக்கீசம், ஒல்லாந்து, தெலுங்கு, மலாய், இந்துஸ்தானி போன்ற மொழிகள் கலந்துள்ளமையைக் காணலாம்.

வித்துவான் சொக்கலிங்கன் 'இலக்கணத் தெளிவு' எனும் தமது நூலில் பிறமொழிச் சொற்களைத் தமிழில் கையாள்வதற்கான காரணங்கள் சிலவற்றைப் பின்வருமாறு கூறியுள்ளார்.

i) அச்சொற்களுக்குரிய பொருள் தமிழுக்குப் புதியன.
ii) தத்துவம் சார்ந்தும் அறிவியல் சார்ந்தும் வருவன.

வடமொழியாகிய சமஸ்கிருதமே தமிழ்மொழியோடு பழங்காலத்திலிருந்து தொடர்புகொண்டு வந்துள்ளது. சமயம், தத்துவம், பண்பாடு, இலக்கியம் ஆகியவற்றின் மூலம் இத்தொடர்பு ஏற்பட்டது. வடமொழியில் இருந்து தமிழுக்கு வந்த சொற்களை இலக் கணகாரர் இரண்டாக வகைப்படுத்துவர்.

i) தமிழுக்கும் வடமொழிக்கும் பொதுவான தற்சம வடசொல்.
உ +ம் கமலம், விமலம், குங்குமம்.
ii) வடமொழிக்குரிய சிறப்பெழுத்துக்கு மாற்றொலிகளாய் தமிழில் உள்ள எழுத்துகளைக் கையாண்டு தமிழ் இலக்கணவிதிக்கு அமைவான தற்பவ வடசொல் உ + ம் ஆணை, இடபம்

யாழ்ப்பாணப் பேச்சுவழக்கில் வடமொழி ஒலிகள் பெரும்பாலும் திரித்தே வழங்கப்படுகின்றன. வடமொழி ஷ, ஜ போன்றவை பேச்சுவழக்கில் உச்சரிக்கப்படுவதில்லை.
உ + ம் கஷ்டம் - கயிட்டம்
பூஜை - பூசை

'வாக்கியம்' என்பது வடசொல் என்று கேட்கும்போது வியப்படையலாம். வாக்கியத்திற்கு தமிழில் சொல் இல்லையா என்று கேட்டால் வாக்கியத்தை "முற்றுச்சொற்றொடர்" எனலாம். வாக்கியம் என்பதே பெரிதும் வழங்கி வந்திருப்பதால் நாம் அச்

சொல்லை ஏற்றுக் கொள்வதில் தவறு இல்லை.
"முற்றுச்சொற்றொடர்"என்றால் இன்று பலருக்கும் புரியாதபுதிராக இருக்கும்.

அவ்வாறே 'அனுபவம்' என்ற சொல் வடசொல்ஆகும். இதற்குப் பதிலாகத் தமிழில் வேறு சொற்கள் இருந்தாலும் பெரும்பாலும் கையாளப் படுவது 'அனுபவம்' என்ற சொல்லே. மேலும் ஈஸ்வரன், ஐஸ்வர்யம், சௌக்கியம் எனப்பலசொற்கள் தமிழில் பாவனையில் உள்ள சொற்களாகக் கலந்துள்ளன.

இலங்கையில் அரசியல் பிரச்சினைகளாலும் சிங்களம் அரசகரும மொழியாக்கப்பட்டதாலும் சிங்களச் சொற்கள் தமிழில் வந்து சேர்ந்தன. ஜாதிகசம்பத, போயா, பெரஹர, சல்லி, சிசுஉதான, வனிதாவாசன, ரன் ஹெகுளு போன்ற சொற்கள் தமிழில் வழக்கில் உள்ளன.

ஆங்கிலேயர் இலங்கையை ஆட்சிபுரிந்ததன் விளைவாக ஆங்கிலச் சொற்கள் தமிழில் கலந்தன. கேக், பிஸ்கற், ஐஸ்கிறீம், பணிஸ், சோடா போன்ற சொற்களை இவ்வகையில் கூறிக்கொள்ளலாம்.

மேலும் தெலுங்கில் ஆர்ப்பாட்டம், கலவரம், சொந்தம் போன்றவையும் மலாய் மொழியில் சவ்வரிசி, மங்குஸ்தான் போன்றவையும் இந்துஸ்தானியில் கைதி, தகராறு, மன்னிப்பு போன்றவையும் தமிழில் கலந்துள்ளன.

இவ்வாறு சொல், பொருள், இலக்கணப்பிழைகள், பிறமொழிக்கலப்பு என்பவற்றால் தமிழ்மொழிக்குப் பல்வேறு தாக்கங்கள் நிகழ்கின்றபோதும் சில தனித்துவப் பண்புகளால் தமிழ் மொழி எப்போதும் நிலைபெறும் என்பதும் உறுதி.

இன்றியமையாத அயல் மொழிச்சொற்களில் தமிழில் ஏற்றுக் கொள்ளவும் நம்முன்னோர்கள் திசைச்சொல் என்று ஒருபாகுபாடும் வகுத்து வைத்துள்ளனர். இது தமிழுக்கு உள்ள ஒருதனிச்சிறப்பாகும்.

மொழிவல்லுனர் ஆகிய பேராசிரியர் ஓட்டோ யெபர்சன் தம்முடைய "மொழி அதன் இயல்பும் வளர்ச்சியும் தோற்றமும்" எனும் நூலில் ஒரு மொழியானது பிறமொழிச் சொற்களிடமிருந்து கடன்பெறுவது பற்றி வருமாறு கூறுகிறார்.

> பிறமொழிச்சொற்கள் முற்றாக இடம்பெறாதமொழிஒன்றும் இல்லை ஏனெனில் ஒரு நாடு எனினும் எப்பொழுதாயினும் வேற்றுநாட்டு தொடர்பற்று இருந்ததில்லை. பிறநாடுகளோடு தொடர்புகொள்வது தவிர்க முடியாதவாறு பிறமொழிச் சொற்களை கடன்பெறச் செய்கிறது.

மொழிவளர்ச்சி என்பது புதிய சொற்களின் பெருக்கத்தை மட்டுமன்றி ஒலி அமைப்பு, சொல் அமைப்பு, வாக்கிய அமைப்பு முதலிய மொழியின்

அனைத்து நிலைகளிலும் ஏற்படும் மாற்றங்களையும் உள்ளடக்குகிறது.

மாறாத எதுவும் வளர்ச்சியடைவதில்லை. மொழி இதற்குவிலக்கல்ல. வாழும் மொழிகள் எல்லாம் இடையறாது மாற்றத்திற்கு உள்ளாகின்றன. இதனால் வளர்ச்சியடைகின்றன. மாற்றமும் வளர்ச்சியும் ஒரு நிகழ்ச்சியின் இரு அம்சங்களாகும்.

தமிழ்வாக்கியம் தருக்க முறையில் அமைந்திருப்பதாக ஐரோப்பிய அறிஞர்கள் கூறுவர். சிலேட்டர் என்பவர் "திராவிடமொழிகள் எல்லாவற்றுள்ளும் மக்கள் பேசு மொழிக்குரிய தன்மையைப் பெற்றுள்ள மொழி தமிழ்மொழி: தருக்க அமைப்புடையதும் தமிழ்மொழியே." என்றார்.

மேலும் மொழிவளர்ச்சி என்பது ஒரு குறிப்பிட்ட காலகட்டத்தில் ஒரு குறிப்பிட்ட சமூகத்தின் தொடர்பாடல் தேவைகளுக்கேற்ப அச்சமூகத்தின் மொழி பெறும் இணக்கப்பாட்டைக் குறிக்கும். காலந்தோறும் ஏற்படும் சமூகவளர்ச்சி அச்சமூகத்தின் தொடர்பாடல் தேவையை அதிகரிக்கின்றது. அதனை ஈடுசெய்யும் வகையில் மொழியும் வளர்சியடைகிறது.

ஒவ்வொரு மனிதனும் தான் வாழும் சமூகத்தையும் பண்பாட்டையும் அறிந்து கொண்டுவாழவேண்டியது அவசியமாகும். இவ்வாறு அறிந்து கொண்டு வாழ்வதற்குரிய முக்கியகருவி மொழியாகும்.

எனவே மேற்கூறப்பட்ட கருத்துக்களை நோக்கும் போது மொழி ஒரு சமூக சாதனம் என்ற வகையில் சமூகத்தில் ஏற்படும் மாற்றங்களும் வளர்ச்சிகளுமே மொழிமாற்றத்தையும் வளர்ச்சியையும் தீர்மானிக்கின்றன.

பல நூற்றாண்டு காலமாக மனிதனால் பேசப்படும் மொழியில் மாற்றங்கள் நிகழ்வது இயற்கையே. பேசப்படுகின்ற ஒவ்வொருவரினதும் தனித் தன்மைக்கு ஏற்பவும், இடத்திற்கு ஏற்பவும் சூழ்நிலைக்கு ஏற்பவும் மொழி மாறுவதும் தோன்றுவதும் இயல்பாகும். இந்நிலையில் பாரம்பரிய மொழியை ஆவணப்படுத்துவதும் முக்கியமான தொன்றாகும். எது எவ்வாறாயினும் தமிழன் என்ற ஒரு இனம் உள்ளவரை தமிழ் சாவதில்லை. அது மெல்ல மெல்ல இனித்தே ஆகும்.

உசாத்துணை நூல்கள்:


1. பதிப்பாசிரியர், எம்.ஏ.நு..மான், "1992, தொடர்பாடல்மொழி நவீனத்துவம்", இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்கள வெளியீடு.

2. பரந்தாமனார், அ.கி, 2003, 'நல்ல தமிழ் எழுதவேண்டுமா?',பாரிநிலையம்

3. மனோன்மணி சண்முகதாஸ், கலாநிதி, ரகுநாதன். ம,கலாநிதி தொகுப்பு, 2006,'யாழ்ப்பாணம்: மொழியும்வாழ்வும்"

4.சண்முகதாஸ்..அ,பேராசிரியர், 2008' மொழி-இலக்கியம்-பண்பாடு'(ஆய்வரங்கக் கட்டுரை)

5ஸ்ரீநிவாசசர் மா.கோ,கலாநிதி, 1986,'கிளைமொழியியல்",விநாயகர் அச்சகம்

# Friendship

S.Dilaksha

J/National College of Education

A True friend is
someone who is
there for you,
when he is
supposed to be
somewhere else.

Friends are a
wonderful
excuse to stop
whatever you
are doing

There are limits
to our
friendship – the sky.

True friendship
comes when
silence between
two people is
comfortable

with a friend
at your side
no room seems
too long.

# மரத்துப் போன வாழ்வு

**து.சுதர்சன்**
ஆரம்பப்பிரிவு 2ம் வருடம்
யாழ்ப்பாணம் தேசியகல்வியற் கல்லூரி

நியாயங்கள் நிர்
மூலமாகி நீண்டகாலம் ஆயினும்
கேள்வி கேட்க யாருமில்லாமல்
கரைகிறது காலம்

எப்படி விண்ணப்பித்தும்
கிடைக்க மாட்டேன்
என்கிறது இளமை

கொஞ்சம் கொஞ்சமாய்
கண்ணீர் ஊற்றி வளர்த்துக்
கொண்டிருக்கிறதே உயிரை

இப்போதெல்லாம் மலிவாக
கிடைப்பது வேதனைகளும்
மனிதம் இழந்த
முகங்களும் தான்

உடலும் உள்ளமும்
மரத்து
உயிர் ஊசலாடுகிறது

சொந்த நாட்டு குடிமகனை விட
அடுத்த நாட்டு அகதி வாழ்வே
பெரிதும் விரும்பப்படுகிறது.

# நாட்டார் பாடல்களில் தொழிற்பாடல்களின் முக்கியத்துவம்

அ.வசந்தரூபி
B.A(Hons)
நீர்வேலி

அறிமுகம்:

கிராமிய பொருளாதார சமூக உற்பத்தி உறவுகள் பூரணமாக உடைக்கப்படாத சமூகங்களில் பயில் நிலையிலுள்ள கலைகள் நாட்டார் கலைகள் எனப்படுகின்றன. அதாவது பரம்பரை பரம்பரையாகத் தனித்துவமான முறையிலே நவீன நாகரிகக்கலப்பற்ற வகையில் வாழ்ந்துவரும் கிராமிய மக்களால் பயன்படுத்தப்படும் தூய கலைகளே நாட்டார் கலைகள் எனப்படுகின்றன. இக்கலைகளில் ஒன்றாகவே நாட்டார் இலக்கியம் விளங்குகின்றது. நாட்டுப்புறப் பண்பாட்டுப் பயில்மரபில் ஓர் அழகியல் கவர்ச்சி கொண்டதாக இது விளங்குகிறது. ஆய்வாளனுக்கும் சமூகத்திற்கும் இடையே அதிக கவன ஈர்ப்பைப் பெற்றுள்ள இதனை திட்டவட்டமான வரையறை ஒன்றுக்குள் உள்ளடக்க முடியாது. இத்தன்மையினை காலத்துக்குக்காலம் பல்வேறுபட்டவர்கள் தரும் வரைவிலக்கணத்திலிருந்து அறிந்து கொள்ளக் கூடியதாக உள்ளது. ஒரு நாட்டு மக்களின் வாழ்வையும் வரலாற்றையும் குறையையும் நிறையையும் தெளிவாகக் காட்டுவனவாக நாட்டுப்புற இலக்கியங்கள் விளங்குகின்றன. இவற்றை பாமர இலக்கியம், வெளிப்பாட்டு இலக்கியம், மக்கள் இலக்கியம், எழுதப்படாத இலக்கியம், செவிவழி இலக்கியம், பழங்கால இலக்கியம் என பலவாறு அழைக்கின்றனர். இந்நாட்டார் இலக்கியமானது பல வகைப்பாடுகளைத் தன்னகத்தே கொண்டுள்ளது. அவை:

- → நாட்டார் பாடல்கள்.
- → நாட்டார் பழமொழிகள்
- → நாட்டார் விடுகதைகள்
- → நாட்டார் கதைகள்
- → நாட்டார் வாய்மொழி காப்பியங்கள்
- → நாட்டார் புராணங்கள்
- → நாட்டார் குழூஉக்குறி மரபுகள்

போன்றவை ஆகும். எனினும் நாட்டார் இலக்கிய வகை தொடர்பான ஒருமித்த கருத்தினை ஆய்வாளர்களிடையே

காணமுடியாது. அது காலம், கருத்து, சூழல், வெளி, ஆய்வாளனின் நோக்கு, தொடர்பாடல்முறை, என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு பலதிறத்தில் வகைப்படுத்தப்படுகிறது. இவ்வகைப்பாடுகள் ஒவ்வொன்றும் தமக்கு தமக்கென தனித்துவமான அழகியல் அம்சங்களை கொண்டு சிறப்புற்று விளங்குகின்றது.

நாட்டார் பாடல்கள்:

நாட்டார் பாடல்கள் மக்களிடையே மக்களால் மக்களுக்காகப் பாடப்படும் ஒன்றாகும். குறிப்பிட்டதொரு சூழலில் இந்தப் பாடல்களை மக்களே பாடுகின்றனர். இவை நாட்டுப்புற மக்களின் வாழ்விலே பிறந்து அவர்கள் வாழ்விலே வளர்ந்து அவர்களது வாழ்வோடு இணைந்து கருவறை முதல் கல்லறை வரை இருவறை இடைவெளியிலுள்ள சகல நிகழ்வுகளையும் பிரதிபலிப்பனவாகக் காணப்படுகின்றன.மனித உள்ளத்தின் ஆழத்தையும் அங்கே தோன்றி எதிரொலிக்கும் பல்வேறு இதய எழுச்சிகளையும் இன்பதுன்பங்களையும் ஆசாபாசங்களையும் வாழ்க்கைப் போராட்டங்களையும் இந் நாட்டார் பாடல்கள் நெடுகிலும் காணலாம். ஓரினத்தின் அல்லது நாட்டின் பண்பாட்டைச் சித்திரிப்பதில் குறிப்பிட்ட இடத்தைப் பெறுகின்ற நாட்டார் பாடல்கள் உலகப்பண்பாடுகள் அனைத்திற்கும் பொதுவானதாகவும் தேசியத்தின் அடையாளமாகவும் விளங்குகின்றன. அந்த வகையில் இந்நாட்டார் பாடல்கள் ஒரு நாட்டுமக்களின் நாகரீகத்தை, பண்பாட்டை, பழக்க வழக்கங்களை, வரலாற்றை உண்மையான முறையில் படம்பிடித்துக் காட்டுகின்றன. இத்தகு சிறப்புவாய்ந்த நாட்டார்பாடல்கள் நாட்டுப்பாடல்கள், நாடோடிப்பாடல்கள், வாய்மொழிப்பாடல்கள், பாமரர்பாடல்கள், கிராமியப்பாடல்கள், கல்லாதார் பாடல்கள், ஏட்டில் எழுதாக் கவிதை, மலை அருவி, காட்டுப்பூக்கள், காற்றிலே மிதந்த கவிதை என்றெல்லாம் அழைக்கப்படுகின்றது.

நாட்டுப்புறப்பாடல்களை ஒவ்வொரு ஆய்வாளர்களும் தத்தம் அறிவுக்கும் ஆற்றலுக்கும் தாம் விளங்கிக் கொண்டதற்கும் ஏற்ப வகைப்படுத்தியுள்ளனர். அந்தவகையில் :

பாடல்களின் பொருள்
பாடல்களின் வடிவம்
பாடல்களின் தனி இயல்புகள்
பாடல்களைப் பாடுவோர்
நிலப்பிரிவுகள்
சூழமைவுகள் வட்டாரத்தன்மை

முதலியவற்றை அடிப்படையாகக் கொண்டு நாட்டுப்புறப்பாடல்கள் வகைப்படுத்தப்படுகின்றன. ஆனால் இவ்

வகைப்பாட்டில் பல்வேறு பிரச்சினைகளும் குறைபாடுகளும் அவதானிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. தமிழ் மக்களிடையே வழக்கத்திலுள்ள நாட்டார் பாடல்கள் பிரதானமாக மூன்று வகையாக பாகுபாடு செய்யப்படுகிறது.

1. பாடல்களை உதிரியாகப் பெயர் சுட்டும் நிலையினை அடிப்படையாகக் கொண்டு வகைப்படுத்தப்படுகின்றன.

இவ்வகையில்:

*ஏற்றப்பாட்டு
*வள்ளப்பாட்டு
*கண்ணன் பாட்டு
*நடவுப்பாட்டு
*தாலாட்டுப்பாட்டு
*ஒப்பாரிப்பாட்டு
* பரிகாசப்பாட்டு
* கும்மிப்பாட்டு
* விடுகதைப்பாட்டு
* வேல்பாட்டு
* இசைப்பாட்டு

முதலிய பாட்டு வகைகள் உள்ளடக்கப்படுகின்றன.

2. பல்வேறு அளவுகோல்களைக் கொண்டு வகைப்படுத்திய வகைப்பாட்டினுள்

*தொழில் செய்வோர் பாடல்
*இன்பப்பாடல்
*உணர்ச்சிப்பாடல்
*குழந்தைப்பாடல்
*விளையாட்டுப்பாடல்
*கருத்துப்பாடல்
*கதைப்பாடல்

போன்றன உள்ளடக்கப்படுகின்றன.

3. ஒரே அளவுகோலைக் கொண்டு வகைப்படுத்திய நிலை. இவ்வகைப்பாட்டினுள் பாடல்களின் பொருண்மையினை அடிப்படையாகக் கொண்ட வகைப்பாட்டினுள்:

*நாட்டார் பாடல்கள்
*பக்திப் பாடல்கள்
*மங்கலவாழ்த்துப் பாடல்கள்
*தாலாட்டுப் பாடல்கள்
*தொழிற்பாடல்கள்
*சமுதாயப் பாடல்கள்
*ஒப்பாரிப் பாடல்கள்

என வகைப்படுத்தப்படுகின்றன.

அவ்வாறே சூழலினை அடிப்படையாகக் கொண்டு நாட்டார் பாடல்கள் பின்வருமாறு வகைப்படுத்தப்படுகின்றன.

தாலாட்டுப் பாடல்கள்:

1.குழந்தை பற்றியது:

குழந்தை இல்லாக் காலத்து தாய் பட்ட வேதனை, குழந்தைப் பேற்றிற்காக செய்த அறங்கள், விரதங்கள், குழந்தை அழுவதற்குரிய காரணங்கள், குழந்தை பிறந்ததன் காரணம், குழந்தையை வர்ணித்தல், குழந்தையின் எதிர்காலம், குழந்தைக்குச் செய்யும் சடங்கு, குழந்தைக்கு அடித்தவருக்குரிய தண்டனை, குழந்தையினுடைய அழுகை வர்ணனை, குழந்தைக்கு அறிவுரை என்பன உள்ளடக்கப்படும்.

2. குழந்தைக்குரிய கருவிகள் பற்றியது:

சங்குப்பாவாடை, வெள்ளிப்பாவாடை, பொற்பாவாடை, புதுத்தொட்டில், கிண்ணி, அரைஞான் கயிறு, கும்மி முதலியன உள்ளடக்கப்படும்

குழந்தைப்பாடல்கள்:

i குழந்தைகளுக்காக மற்றவர்கள் பாடுதல்:

தவழல், உண்ணல், சாய்ந்தாடல், கைவீசல், கைதட்டல்

ii குழந்தை சிறுவர்களாக வளர்ந்து பாடும் பாடல்

நாப்பயிற்சிப் பாடல், எண்ணுப் பயிற்சிப் பாடல், அறிவுவளர்ச்சிப்பாடல், நீதிப்பாடல், பக்திப்பாடல், பறவை மிருகங்களைப் பற்றிய பாடல், விழாக்களில் பாடப்படும் பாடல்கள், வேடிக்கைப் பாடல்கள், வினாவிடைப் பாடல்கள்.

iii விளையாட்டுப் பாடல்கள்

உடற்பயிற்சிவிளையாட்டுப் பாடல்கள், வாய்மொழி விளையாட்டுப் பாடல்கள், சிறுவர் விளையாட்டுப் பாடல்கள், சிறுவர் சிறுமியர் பாடல்கள்

* காதற் பாட்டு
  - i காதலன் பாட்டு
  - ii காதலி பாட்டு

* தொழிற்பாடல்கள்

*வேளான்மைத் தொழிற்பாட்டு

ஏற்றப்பாடல், ஏர்ப்பாடல், நாற்றுப்பாடல், அறுவடைப்பாடல், பொலிப்பாடல்

*வேளான்மையல்லாத தொழிற்பாடல்:
நெல்குத்துவோர்பாடல், சுண்ணாம்பு இடிப்போர் பாடல், சாலைஅமைப்போர் பாடல், கிணறுவெட்டுவோர் பாடல், உப்பளத் தொழிலாளர் பாட்டு, துறைமுகத் தொழிலாளர் பாட்டு, மீனவர்பாடல், வண்டிக்காரன் பாட்டு

*கொண்டாட்டப் பாடல்

i அகப்பாடல்/குடும்பப்பாடல்

திருமணப்பாடல்,பரிகாசப்பாடல்,நலுங்குப்பாடல்,வளைகாப்புப்பாடல்

ii புறப்பாடல்/சமூகப்பாடல்

கும்மி, கோலாட்டம்

* பக்திப்பாடல்

i இயற்கை வழிபாட்டுப்பாடல்

ii சிறுதெய்வ வழிபாட்டுப் பாடல்

iii பெருந்தெய்வ வழிபாட்டுப் பாடல்

இந் நாட்டார்பாடல்கள் மக்களின் வாழ்க்கையை, வாழ்க்கைப்பிரச்சினைகளை, உற்பத்திமுறைமைகளை, எண்ணங்களை, கனவுகளை, இயல்பாகவே எடுத்துரைக்கும் சாமான்ய மக்களின் இலக்கியமாக விளங்குகிறது. கிராமிய மக்களின் வாழ்கையினை எவ்வித மாறுபாடுமின்றி உள்ளதை உள்ளபடி எடுத்துரைப்பதனால் உணர்ச்சிபூர்வமான வெளிப்பாட்டு முறையைக் கொண்டுள்ளது. அத்துடன் இவை குறிப்பிட்டதொரு சூழல் அமைவுகளைக் கொண்டு பாடப்படுகின்றன. தாம் தோன்றுகின்ற பிரதேச மண் வாசனையை உணர்த்துபவையாகவும் காணப்படுகின்றன. இந்நாட்டார் பாடல்கள் ஏட்டில் எழுதப்படாது வாய்மொழி வழியாக ஞாபகங்களினூடாக பரம்பரை பரம்பரையாக கடத்தப்பட்டு வருகின்றன. இத்தகைய நாட்டார் பாடல்களில் ஒன்றாக தொழிற்பாடல் அமைகிறது.

தொழிற்பாடல்

ஒரு மனிதனால் ஒழுங்கமைக்கப்பட்ட நோக்குடன் ஒரு பொருளின் மீது கருவிகளால் ஆற்றப்படும் வினை தொழில் எனப்படும். தொழிலில் ஈடுபட்டிருக்கும் அவனால் பாடப்படும் பாடல்களே தொழிற்பாடல்கள் எனப்படுகின்றன. இவை தொழிற்பாடல், உழைப்புப்பாடல், உழைப்புப் போக்குப் பாடல் என பலவாறாக அழைக்கப்படுகின்றன. இத்தொழிற்பாடல்களில் வேளாண்மைத் தொழில் சார்ந்த

பாடல்களும் வேளாண்மை தொழில்சாராத பாடல்களும் உள்ளடங்கும்.

உழைப்புப்பாடல்களின் அமைப்பை உணர்ச்சிஓசை, உழைப்பொலி, பல்லவி, தொழில்ஓசை, இட்டுக்கட்டு, விருத்தி என இருவகையாக நோக்கலாம். இவற்றில் உணர்ச்சி ஓசை எல்லா உழைப்புப் பாடல்களிலும் முக்கிய அம்சமாக விளங்குகின்றது. உழைப்பவன் தன் உழைப்பிற்கு தன் சக்தியை ஒன்று கூட்டி பிரயோகிக்கும் சந்தர்ப்பத்தில் இதனை பயன்படுத்துகிறான். இவ் உணர்ச்சி ஒலியானது மாற்றம் எதுவுமின்றி மீண்டும் மீண்டும் அப்படியே வரும். உடல் இயக்கத்தோடு சேர்த்து இயங்கும் பேச்சு உறுப்புக்களின் தன்னிச்சையான பேச்சாகவும் காணப்படும். உழைப்பிற்கு உடலியக்கங்களை ஒரே நேரத்தில் இயங்க வைக்க உணர்ச்சிஓசை உதவுகிறது. இது உழைப்பிலிருந்தே தோற்றம் பெறுகிறது.

குறித்ததொரு பாடலில் ஆகக்கூடிய மூன்று அசைகளைக் கொண்டிருக்கும் உழைப்பொலியானது எப்பொருளினையும் கொண்டிராது வெறும் இசையினையே கொண்டிருக்கும். எடுத்துக்காட்டாக,

'தெந்தனா தெனா தெனாதென
தெந்தனா தெனா தெனாதென'

ஒரு உழைப்பொலி முடிந்து மற்றைய உழைப்பொலி வருவதற்கு முன் இட்டுக்கட்டு பாடப்படும். இவ்விட்டுக்கட்டானது தெளிவான பொருளினைக் கொண்டிருக்கும். இட்டுக்கட்டானது குறித்த தொழிலில் ஏற்படும் பிரச்சினைகளையும் அதனால் ஏற்படும் அநுபவங்களைப் பற்றியும் பாடுகிறது. இதுஉழைப்பின் உணர்ச்சியோடு சம்பந்தப்பட்டிருக்கும். மாறாக அதிலிருந்து வேறுபட்டதொன்றாக இது இருக்காது.

தொழிற்பாடல்கள் உழைப்போடு சம்பந்தப்பட்டவை. இவை உழைக்கும் மனிதனின் உடல் உறுப்பின் இயக்கம், பேச்சுறுப்பின் இயக்கம் என்பவற்றை தொடர்ந்து பேண உதவுகின்றது. இவை தமக்கென குறிப்பிட்டுக் கூறக்கூடிய தாளக்கட்டு, இசைக்கட்டு, சொல்லடுக்கு, இட்டுக்கட்டு என்பவற்றை சிறப்பாக கொண்டிருக்கின்றன. எடுத்துக்காட்டாக

"மட்டுருக்காலில் அரிவாளும் செய்து
மாவிலங்கப் பிடி தன்னில் இறுக்கி..."

என அமைந்து செல்லும் பாடலினைக் குறிப்பிடலாம். இப்பாடல்களின் சிறப்பியல்புகளை பாடும் போதுதான் உணரலாம். அத்துடன் இவற்றில் பாவனை இரட்டைச் சொற்கள் காணப்படுவதால் இவை எளிமையானவையாகக் காணப்படுகின்றன. உதாரணமாக

"நெல்லுத் தின்னும் ஆசையினால் பல்லுக்கில்லு பேந்திடாமல்
பையமெல்ல நன்னிநன்னி தின்னும் கோமக்காள்"

என்ற பாடல் வரிகளைக் குறிப்பிடலாம். இந்தச் சொற்கள் மரபுரீதியாக அங்கீகாரத்தைப் பெற்றிருக்கவில்லை. எனினும் இயற்கையின் ஓசையைப் போல ஒன்றாக இருந்து இன்னொன்றாகப் பிரதி செய்யும் தன்மை கொண்டவை.

தொழிற்பாடல்கள் பல்வேறுபட்ட மையப்பொருட்களைக் கொண்டுள்ளன. இப்பாடல்கள் தொழிலையும் அதன் மகத்துவத்தையும் தொழிலாளர்கள் படும் கஷ்ட நஷ்டங்களையும் ஏற்றத்தாழ்வுகளையும் பொருட்களாகக் கொண்டிருந்தாலும். சில பாடல்களில் தொழில் தவிர்ந்த வேறு பொருட்களையும் காணலாம். இப்பாடல்களில் தொழிலுக்கு அடுத்தபடியாக காதலிக்கு பரிசாக தாலி வாங்கிக் கொடுக்கும் காதலனையும் திருமணத்திற்கு ஏங்கித்தவிக்கும் இளைஞனையும் அவனின் அடக்க முடியாத ஆசைகளையும் கற்பனைக் கோட்டைகளையும் காணலாம். எடுத்துக்காட்டாக:

"அலிக்கம்ப வட்டயில
அஞ்சேக்கர் செஞ்சிரிக்கன்
தாலிக்கொடி வாங்க - என்ர
தங்கமயில் நாகூருக்கு"

என அமைந்த பாடலில் ஒரு இளைஞனின் உள்ளத்து ஆசையையும் உணர்வினையும் சிறப்பாக புரிந்து கொள்ளலாம்.

சில பாடல்களில் வர்க்கப் போராட்டத்தின் உச்சக்கட்டத்தையும் அடக்கு முறைக்கெதிராகக் கிளம்பி எழும் ஆக்ரோஷத்தையும் தொழிலாளர்களின் உறுதியையும் காண்கிறோம்.

தொழிற்பாடலின் மீதே நாட்டாரது பொருளாதாரம் கட்டப்படுகிறது. ஏனெனில் கிராமிய பொருளாதார சமூக உற்பத்தியோடு உழைப்புப்பாடல் மிக நெருக்கமான உறவினைக் கொண்டுள்ளது. ஒரு சந்ததியின் உழைப்பைத் தொடர அவன் தனது உடலின் சக்தியைப் பேண நாட்டார் கலைகளைப் பயன்படுத்துகிறான். அவனது உற்பத்திக்கு உற்பத்திக்கருவிகள் எவ்வளவு அதீத உதவியினைச் செய்கின்றனவோ அவ்வாறே உழைப்புப்பாடல்களும் உதவிபுரிகின்றன.

தொழில் செய்வோர் தம் களைப்பினைப் போக்கிக் களிப்பினைப் பெருக்கப் பாட்டினைத் துணைக்கு அழைப்பர். துன்பமும் மகிழ்வும் தொழிலும் பாட்டினை உருவாக்கும் நிலைக்களன்களாகும். இழப்பால் வரும் துன்பத்தைப் போக்கப் பாட்டே தோணியாகிறது. உள்ளத்தில் பொங்கியெழும் இன்பவெள்ளம் பாட்டாக ஓடி வருகின்றது. மனிதன் தொழிலில் ஈடுபடும்போது

அதனால் எழும் களைப்பைப் போக்கிக்கொள்ள சாய்விடமாய் பாட்டருவி குதித்தோடி வருகிறது. எந்தத் தொழிலைச் செய்தாலும் பாட்டினைத் துணைக்கழைப்பது நாட்டுபுற மக்களின் இயல்பாகும்'' எனக்கூறும் டாக்டர் மா.கோதண்டராமனின் கருத்தும் இவ்விடத்தில் குறிப்பிடத்தக்கது.

தொழிற்பாடல்கள் அன்றைய சமூகத்தை ஒன்று திரட்டுவதனையும் அடிப்படையாகக் கொண்டு இருக்க மறக்கவில்லை. நாட்டார் பாடல்களால் ஒருமைப்பட்டு கூட்டுமுயற்சியால் ஈடுபடுவதனால் உற்பத்தி அதிகரிக்கப்பட்டு விளைச்சல் பெருகி அவர்கள் பொருளாதார மேம்பாட்டினை அடைகிறார்கள். இதனால் தொழிற்பாடல்கள் பயன்பாட்டிலக்கியமாக கணிக்கப்படுகின்றன.

நாட்டார் சமூகத்தை ஒற்றைப்படையானதாக ஒருமைப்படுத்தி ஒன்று திரட்டி வருவதனை அடிப்படையாகக் கொண்ட தொழிற்பாடல்கள் பற்றி எதுவும் திட்டவட்டமாக கூற முடியாதிருப்பதும் அதன் அழகியல் பண்புகளில் ஒன்று. இது செவிவழியாகப் பேணப்பட்டு வந்தமையால் இதன் தோற்றம் பற்றியோ ஆசிரியர் பற்றியோ எதுவுமே கூறமுடியாதுள்ளது. இப்பாடல்கள் அவற்றிற்குரிய வாய்ப்பாடுகளின் மூலம் ஞாபகங்களில் வைக்கப்பட்டுள்ளமையால் சந்தர்ப்பத்திற்கும் காலத்திற்கும் ஏற்ப மாறுந்தன்மை கொண்டு காணப்படுகின்றன.

முடிவுரை:

மேற்குறிப்பிட்ட வகையில் நாட்டார் மக்களின் பிறப்பு முதல் இறப்பு வரையிலான ஒவ்வொரு வளர்ச்சிக் கட்டங்களிலும் நாட்டார்பாடல்கள் பின்னிப்பிணைந்துள்ளன. நாட்டார் பாடல்களையும் நாட்டுப்புற மக்களது வாழ்வையும் இரண்டாகப் பிரித்து பார்க்க முடியாதளவிற்கு இரண்டும் ஒன்றில் ஒன்று தங்கி வளர்ந்து வருகின்றன. இவற்றில் ஒரு பிரிவாக அமையும் தொழிற்பாடல்கள் இன்னும் முக்கியத்துவம் வாய்ந்தவையாகக் காணப்படுகின்றன. ஏனெனில் இவைதான் மக்களை ஒருநிலைப்படுத்தி அவர்களது சமூக,பொருளாதார அடுக்கமைவுகளின் வளர்ச்சிநிலைக்கு உந்துசக்தியாகக் காணப்படுகின்றன. அத்துடன் தமிழ் பேசும் மக்களின் இருப்பை, பண்பாட்டை, அடையாளத்தை பேசிநிற்கும் கூறுகளாகவும் விளங்குகின்றன. எனவே இவை அவற்றின் தனித்தன்மைகள் நீங்காவண்ணம் பேணப்படுதல் வேண்டும். இவ்வாறு பேணப்படுவதானது நாட்டார் பாடல்களை அழியாத வகையில் பேணப்படும் என்பதோடு தமிழ் மக்களின் இருப்பும் பேணப்படும் என்பது அசைய முடியாத நம்பிக்கையாகும்.

உசாத்துணை நூல்கள்: i. சக்திவேல்.சு.நாட்டுப்புறவியல் ஓர் அறிமுகம்.
ii சக்திவேல்.சு.நாட்டுப்புறவியல் ஆய்வு. iii சுரேந்திரன்.இரா.நாட்டுப்புற இலக்கியம்.
iv லூர்து. தே. நாட்டார்வழக்காற்றியல்-சில அடிப்படைகள்.
v கமத்தொழில் விளக்கம் சஞ்சிகை 1960

# கல்விக்கட்டுமானத்தில் பாடசாலை, ஆசிரியர், பெற்றோர், சமூகம், அரசாங்கத்தின் பங்களிப்பு

- ஓர் சமூகவியல் அணுகுமுறை.

**காருண்யா தவேந்திரராஜா**

(சமூகவியல்)

$4^{th}$ வருடம்

யாழ்பல்கலைக்கழகம்

உலகில் இன்று கல்வி என்பதும் அதனுடைய தேவையும் பெருமளவில் உணரப்பட்டு, தொழில்நுட்பப் புரட்சியின் மூலம் விஞ்ஞான உலகம் ஒன்று உருவாகியிருக்கிறது. அதற்கு அடித்தளம் இடும் வகையில் பல்வேறு செயற்பாடுகள் உலகநாடுகளால் இன்றும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. பொதுவாக கல்வி என்பது வரையறுக்க முடியாததொன்று. எனினும் அதனைப் பல்பரிமாணங்களில் வைத்து விளக்கம் கூறியவர்களுள் ஒருவரான 'ஜோன் டூயி' என்பவரது கருத்துப்படி "கல்வி என்பது சமூகப்புனரமைப்புச் சாதனம். அது பயனுள்ளதாக அமையவேண்டும்" எனக்கூறுகிறார். இது இன்றைய காலத்தின் தேவையாகவும் இருப்பதை எம்மால் உணரமுடிகிறது. குறிப்பாக அபிவிருத்தி அடைந்த நாடுகளிலும் அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளிலும் பல்வேறு உத்திகளைக் கையாண்டு கல்விக் கட்டுமானங்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

அந்தவகையில் இன்று கல்வி என்பது பல்வேறு நவீன கற்றல் கற்பித்தல் முறையியல்கள், உத்திகள்,செயற்பாடுகள், திறன்கள் போன்றவற்றினால் பெருமளவில் கட்டியமைக்கப் பட்டுள்ளது. இத்தகைய கட்டுமானத்தில் குறிப்பாக நவீன கற்றல் கற்பித்தல் முறையியல்களாக நவீன கற்பித்தலில் குழுமுறை, நுண்முறைக்கற்பித்தல் முறை, அணிமுறை க்கற்பித்தல்முறை, பல்மட்டக்கற்பித்தல்முறை, குறைநீக் கற் கற்பித்தல்முறை, டால்டன்முறை, கலந்துரையாடல் முறை, வெளிக்களக் கற்பித்தல் முறை, சிந்தனையைக் கிளறும் முறை, செய்து காட்டல் முறை,விடய ஆய்வுமுறை, விரிவுரை முறை போன்றன காணப்படுகின்றன.

அது மட்டுமன்றி உடல், உள, மனவெழுச்சி பாதிப்புக்குள்ளான மாணவர்கள், கற்றல் குறைபாடுகள், உறுப்புக்கள் ஊனமுற்ற மற்றும் உணர்வு குழம்புகிற மாணவர்களைக் கையாள்வதற்கான கல்வியாக விசேட கல்வி என்பது அறிமுகப்படுத்தப் பட்டிருக்கிறது. இது தவிர பாடசாலை

முகாமைத்துவம், தலைமைத்துவம் போன்றவற்றின் தரத்தை அபிவிருத்தி அடையச் செய்தல், தொழில்நுட்பக் கல்விப் பயிற்சியை பாடசாலையில் உருவாக்குதலும் வழிகாட்டுதலும் போன்ற பல்வேறு கல்வித்திட்டமிடல் மூலம் அரசாங்கம் பாடசாலை ஆசிரியர்கள், சமூகம் பெற்றோர் போன்றவர்களின் பங்களிப்பின் மூலம் இன்றைய இருபத்தோராம் நூற்றாண்டிலே "சிறந்த கல்விக் கட்டுமானம்" என்பது உருவாக்கப்பட்டிருப்பது மறுக்க முடியாத உண்மையாகும்.

இந்த வகையிலே இன்று கல்வியை வழங்கும் செயற்பாட்டில் பங்கெடுக்கின்ற வகையினராக பாடசாலை, ஆசிரியர்கள், பெற்றோர், சமூகம், அரசாங்கம் என்போர் காணப்படுகின்றனர். இவர்கள் அனைவரதும் முயற்சிகள் ஒன்றுக்கொன்று துணை நின்று ஒன்றோடு ஒன்று இசையும் போதே உச்சப்பயன் கிட்டுகின்றது. இதன் அடிப்படையில் இன்று கல்வியை ஒரு கூட்டு முயற்சியெனக் கொள்வது ஏற்புடையதாகும்.

இந்நோக்கில் கல்விக் கட்டுமானத்தில் பாடசாலையின் பங்களிப்பினை முதலில் நோக்குவது சாலப் பொருத்தமானதாகும். கல்வி எனும் முயற்சியின் முக்கிய செயற்பாடாகிய "கற்றல் - கற்பித்தல்" நிகழும் களம் பள்ளிக்கூடமாகும். கல்வி நிறுவனப் படுத்தப்பட்ட செயற்பாடாக உருப்பெற்ற காலத்திலிருந்து அதில் பாடசாலை முதலிடத்தை வகிக்கிறது. கல்விக்குரிய கொள்கைகள், திட்டங்கள் என்பவற்றை உருவாக்கும் அமைப்புக்களிலும் பார்க்க அவற்றை பயன்தரு முறையில் நடைமுறைப்படுத்தும் இடமே அவற்றின் வெற்றிக்கு வழிசமைக்க முடியும். இக் கருத்தில் பாடசாலையின் மகத்துவத்தை எவரும் மறுப்பதற்கில்லை.

இந்த வகையில் ஒரு பாடசாலையானது பின்வரும் பங்களிப்புகளை வழங்குகின்றது.

1.சமூகத்தின் எதிர்கால இளம் தலைமுறையினரை அவர்களது எதிர்காலசமூக தோற்றங்களுக்கு பொருத்தமாக வளர்த்தெடுக்கின்ற ஒரு கல்விக்கூடமாக பாடசாலை விளங்குகின்றது.

அதாவது பிள்ளையின் அறிவு வளர்ச்சிக்கு வேண்டிய பாடங்களைக் கற்பதற்கு ஒழுங்கு செய்வது அப் பிள்ளையின் ஆளுமை வளர்ச்சிக்கு உதவக்கூடிய பாடப்புறச் செயல்கள் என்பவற்றை ஒழுங்கு செய்வது போன்ற செயல்களுக்கூடாக பாடசாலைக் கல்வியின் அடிப்படைகளை வழங்குகின்றது.

2. இன்றைய நவீன சமூகத்தில் திட்டமிட்ட செயற்பாடுகளினூடாக ஒரு முறைசார்ந்த கல்வியை பாடசாலை வழங்குகின்றது.

அதாவது பாடசாலைக்கல்வி தொடர்பான சிந்தனைகள் இன்று சர்வதேச ரீதியில் சகல மக்களாலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட சிந்தனையாக விளங்குகின்றது. இன்றைய நவீன சமூகத்தில் பாடசாலையானது

திட்டமிட்ட செயற்பாடுகளினூடாக முறைசார்ந்த கல்வியை வழங்கும் பாடசாலைகளில் புவியியல் அடிப் படையிலும், சமூக அரசியல் அடிப் படையிலும், பொருளியல் அடிப்படை யிலும், பண்பாட்டு அடிப்படையிலும் கல்வி வழங்கப்படுகின்றது.

3.பாடசாலைகள் சமூகத்தின் நீதியையும் சமூகப்பிணைப்பினையும் உறுதிசெய்கின்ற அதனைப் பேணிக்காக் கின்ற வாழ்க்கைப் பாணிகளை மனதிற் பதிய வைத்தலும் ஊக்குவித்தலுமாகிய பாரிய சமூகப் பணியை மேற் கொள்கின்றன.

அதாவது இதனூடாக பாடசாலைகள் விழுமிய நடவடிக்கைகளை மேற்கொண்டு மாணவர்களின் சமூக அந்தஸ்த்தை உயர்த்தும் ஆரம்ப செயற்பாடுகளுக்கு வித்திடுகின்றன.

. 4.பாடசாலைகள் மாணவர் களிடத்தில் சிந்தனைத்திறன் விருத்தி, சமூகத்திறன் விருத்தி,சுயதிறன் விருத்தி போன்றவற்றை வளர்த்துக் கொள்ள கலைத் திட்டமிடலின் வழியான சிறந்த கல்வியை வழங்குகின்றது.

அதாவது பாடசாலை சமூகத்தின் சிறிய உருவம் எனக் கணிக்கப்படுவதுண்டு. அந்த வகையில் சமூகத்திறன் விருத்தி, சுயதிறன் விருத்தி என்பன அவசியமான ஒன்றாக மாணவர்களிடத்து காணப்படுகிறது.

5. மாணவர்கள் பெருமளவு நேரத்தை கற்றலுக்காக பாடசாலை களில் கழிப்பதால் மேம்பாடு என்பதனை எட்டவைக்கவேண்டிய பெரும் பொறுப்புள்ள இடமாக பாடசாலை அமைகின்றது.

அதாவது ஒரு மாணவன் பாடசாலையில் ஒரு நாளில் ஆறு மணித்தியாலங்களைக் கழிக்கின்றான். இந்தநேரம் தவிர்த்து அவன் வீட்டில் பதினெட்டு மணித்தியாலங்கள் இருப்பதாக பலர் நினைப்பதுண்டு. ஆனால் அவனுடைய அடிப்படைத் தேவைகளான ஊண், உறக்கம் கழித்தால் அவன் பாடசாலையிலேயே அதிக நேரம் இருக்கிறான். இந்த வகையிலே பாடசாலை முக்கியமான பங்கினை கல்விக் கட்டுமானத்திலே வகிக்கின்றது.

எனவே பாடசாலைகள் பிள்ளைகளின் வளர்ச்சியை விருத்தியாக்கும் அற ஒழுக்கங்களை மேம்படுத்தி வலுவூட்டி சமூகம் போற்றும் மனிதர்களாக மாற்றியமைக்கும் உயர் செயற்பாட்டை தொடர்ந்தும் முன் னெடுக்க வேண்டும். சமூகத்தின் வளர்ச்சி மிகத் துரிதமானதாகும். ஆகவே அத்தகைய மாற்றத்திற்கும் சூழலுக்கும் ஏற்ப தம்மை மாற்றி வளர்ந்துவரும் சமூகத்தில் தன்னை ஒரு பெறுமதிமிக்க உறுப்பினராக ஆக்கு வதை நோக்கமாகக் கொண்டு செயற்படவேண்டும். இதனால் பாடசாலை என்ற சமூகநிறுவனமானது கல்வி எனும் கருமத் தொடரை சிறந்த முறையில் முன்னெடுத்துச் செல்ல வேண்டுமானால் சமூகப்பொருத்தப்பாடுடைய கல்வியை வழங்க வேண்டுமென்பதே

கல்விச்சமூகத்தின் அபிலாசையாகும்.

அடுத்ததாக கல்விக் கட்டுமானத்தில் ஆசிரியர்களின் பங்களிப்பு என்பதனை நோக்கும்போது உலகின் தொன்மையான வாண்மைகளுள் ஒன்றாக விளங்கும் ஆசிரியத்துவம் வரன்முறை நிலையிலும் வரன் முறைசாரா நிலையிலும் கல்விக் கட்டுமானத்தில் பெரும்பங்காற்றியுள்ளது. ஆசிரியத்துவத்தின் தோற்றம் பட்டறிவைக் கையளிப்பதிலிருந்தும் சடங்குகளை மேற்கொண்டு ஆற்றுப்படுத்தலை மேற்கொள்வதிலிருந்தும் மாயவித்தைகளை ஆற்றுகை செய்வதிலிருந்தும் வளர்ச்சியடைந்ததாக அறிகை மானிடவியலிலே குறிப்பிடப் படுகிறது.

இந்தவகையில் ஆசிரியர்கள் கல்விக்கட்டுமானத்திலே ஆற்றிய பங்களிப்புக்களை பின்வரும் அம்சங்களினூடாக நோக்கலாம்.

1.ஆசிரியர்கள் பாடசாலையில் நிகழும் ஆசிரியர்-மாணவர் இடைவினைகளுக்கூடாக சமூக மயமாக் கலினையும் சமூக உணர்வையும் முன்னெடுக்கும் விசைகளாகத் தொழிற் படுகின்றனர்.

அதாவது இடைவினைகளின் வழி சமூகமயமாக்கலுக்கும் சமூக உணர்வுக்கும் அறிக்கைத்தளம் படிப்படியாகக் கட்டியெழுப்பப்படுகின்றது. நாளாந்தம் இவ்வாறான கட்டியெழுப்பற் செயற்பாடு பாடசாலையில் நிகழ்ந்தவண்ணம் உள்ளது. ஆசிரியர்களின் புலமைவலு (Academic strength)நேர்முகமாகவும் மறை முகமாகவும் கருத்தோற்றமாகவும் வலுவூட்டலாகவும் மாணவரிடத்தே தொழிற்பட்டுக் கொண்டிருக்கும்.

2.ஆசிரியர்களின் கற்பித்தலானது நாட்டின் கல்விவிருத்திக்கும், கல்வி பற்றிய புதிய சிந்தனைகள், சீர்திருத்தங்கள், புதியகற்றல் கற்பித்தல் உத்திகள்,கல்வியல் ஆய்வுகள், கண்டுபிடிப்புக்கள் ஆகியவற்றுக்கும் பங்களிப்பு செய்கின்றது.

அதாவது சிறந்த முறையிலே ஒரு கற்பித்தலை வழங்கும் ஆசிரியரால் மேல்வரும் பங்களிப்புக்களை கட்டாயமாக செய்யமுடியும். ஏனெனில் ஆசிரியர்கள் கல்வியின் உயிர் நாடிகளாக காணப்படுகின்றனர்.

3.பாடசாலைமாணவர்களின் நடத்தைகள் அவர்களுக்கும் அவர்கள் வாழும் சமூகத்திற்கும் பயன்தரத்தக்க முறையில் மாற்றி அமைக்க வழி காணுவதே ஆசிரியத்துவத்தின் மிகச் சிறந்த பங்களிப்பாக உள்ளது.

அதாவது கல்வியின் அடிப்படை நோக்கமே பாடசாலை மாணவர்களை சமூகத்திற்கு ஏற்ப தயார்ப்படுத்தல் ஆகும். அதனை செவ்வனே நிறைவேற்றும் ஆற்றலை ஆசிரியர்கள் கொண்டிருக்க வேண்டும். அதனை அவர்கள் நடைமுறைப் படுத்துவார்களாயின் அதுவே கல்விக்கட்டுமானத்தில் அவர்களின் சிறந்த பங்களிப்பாக அமையும்.

4. மாணவரை 'மனச்சான்றுப்படுத்துதல்' ஆசிரியரின் பணிகளில் முக்கியத்துவம் வாய்ந்ததாக கருதப்படுகிறது.

அதாவது ஆசிரியரும் மாணவரும் கற்போர் என்ற தளத்தில் ஒன்றிணையும் பொழுதும் ஒன்றிணைந்து கற்றலின் தர மேம்பாட்டை முன்னெடுத்துச் செல்லும் பொழுதும் ஆசிரியரின் பங்களிப்பு வளமும் வலுவும் பெறுகின்றது.

5. அசிரியர்களுடைய சிறந்த வாண்மைத்துவப்பயிற்சி, திறமை, பொறுப்புக்கள், வகைகூறல்கள், உளப்பாங்குகள் என்பவையே கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகளின் தர பண்பு ரீதியான உயர்வுக்கு உதவுகின்றன.

அதாவது ஒரு சிறந்த கற்றலைக் கொண்டுள்ள ஆசிரியர்கள் சிறந்த கற்பித்தலை மேற்கொள்ள முடியும். அதற்கான தகுதிகள் அனைத்தையும் கொண்டுள்ள ஆசிரியரால் தர பண்பு ரீதியான உயர்வுக்கு உதவமுடியும்.

இந்த வகையிலே ஆசிரியர்களிடத்து கூடுதலான சமூகப்பங்களிப்புகளையும் விளைவுகளையும் சமூகம் எதிர்பார்க்கத் தொடங்கியுள்ளது. கல்வியாலும் பாடசாலைகளாலும் ஆசிரியர்களாலும் சமூகப்பிரச்சினைகள் மற்றும் நடத்தைப் பிரச்சினைகள் தீர்க்கப்பட்டு சிறந்த ஒரு கல்விக்கட்டுமானத்தில் பங்காற்ற முடியும்.

அடுத்ததாக பெற்றோரின் பங்களிப்பு கல்விக்கட்டுமானத்தில் எவ்வாறு அமைந்திருக்கிறது என்பதை நோக்குவோமானால் எந்தவொரு சமுதாயத்திலும் பிள்ளைகளின் கல்வி தொடர்பான முன்னேற்றம், பெறுபேறு என்பவற்றைத் தீர்மானிப்பதில் கற்கும் மாணவர் ஆற்றல் மற்றும் ஈடுபாடு ஆசிரியர்களின் கற்பித்தல் அர்ப்பணிப்பு, பாடசாலை முகாமைத்துவத்தின் கவனக் குவிப்பு, வினைத்திறன் என்பவற்றுடன் பிள்ளைகளின் பெற்றோரின் கல்விசார் அணுகுமுறையும் முக்கியத்துவம் பெற்று வருகிறது.

இந்தவகையிலே பெற்றோரின் பங்களிப்புக்களை பின்வரும் அம்சங்களூடாக நோக்க முடிகின்றது.

1. பிள்ளைகளின் கல்வி, நடத்தை, ஒழுக்கம், கட்டுப்பாடு என்பன பெற்றோரின் ஈடுபாடு, அவதானம், அனுசரணை சார்ந்தே காணப்படுகின்றன.

அதாவது பெற்றோர்கள் பாடசாலைகளுடன் இணைந்து புரிந்துணர்வின் அடிப்படையில் அமைந்த கூட்டுச்செயற்பாட்டில் இருபக்கச் செயற்பாட்டிலேயே பிள்ளைகளின் கல்வி மற்றும் நடத்தை முன்னேற்றங்கள் தங்கியுள்ளன.

2. பெற்றோர்கள் மாணவர்களின் கல்வி சிறக்க அவர்களின் உடல், உள, வளர்ச்சி சமூகத்தொடர்பு என்பவற்றை கட்டியமைக்க பாடுபடுபவர்களாக காணப்படுகின்றனர்.

அதாவது மாணவர்களின் ஆரோக்கியமான கற்றலையும் தொடர்ச்சியான கற்றலையும் பேணிக்கொள்வதன் மூலம் கல்விக்

கட்டுமானத்தில் பெரும் பங்காற்று கின்றனர்.

3.பெற்றோர்கள் அவர்களுக்குரிய சமூக வைபவங்கள் போன்றவற்றில் கலந்து கொள்வதன் மூலம் மாணவர்களின் முன்னேற்ற செயற்திட்டங்களுக்கு பெரிதும் பங்களிப்புச் செய்பவர்களாக காணப்படுகின்றனர்.

அதாவது பாடசாலை மாணவர்கள் போன்ற இரண்டு முன்னேற்ற செயற்றிட்ட ங்களில் ஆலோசனைகளையும் உதவிக ளையும் பெற்றோர் பாடசாலை அதிபருக்கு வழங்குதல் என்பது முக்கியமானதாக காணப்படுகின்றது. பாடசாலை முன்னேற்ற நடவடிக்கைகளில் பெற்றோர் பங்கெடுக் கும் சந்தர்ப்பங்களில் அவை சாத்தியமாகின்றன.

4.பெற்றோர்கள் பிள்ளைகளுக்கு உயர்ந்த ஆனால் யதார்த்தமான நூல் கல்விசார் தரங்களை நிறுவுவதன் மூலம் பிள்ளைகள் பாடசாலைகளில் மேலும் சிறப்பாக செயற்பட உதவுகின்றனர்.

அதாவது பிள்ளைகள் எப்பொழுது படிக்கவேண்டும் எப்பொழுது விளையாடவேண்டும் என்ற அடிப்படையில் பெற்றோர் நேரங்களை வகுத்துக் கொடுத்தல் வேண்டும்.

இந்த வகையிலே எதிர் காலத்தில் பிள்ளைகளின் முன்னேற்றம், கல்வியின் பயனை உச்சப்படுத்துதல், பிள்ளைகளுக்குரிய எதிர்கால மகிழ்ச்சியான வாழ்வை உறுதிப் படுத்துதல் என்பன தொடர்பாக பெற்றோரின் அணுகுமுறையும் ஒத்துழைப்பும் கல்விக்கட்டுமானத்தில் இன்றியமையாததாகிறது.

அடுத்ததாக கல்விக்கட்டு மானத்தில் சமூகத்தின் பங்களிப்பு என்பதனை நோக்கும் போது காந்தியடிகள் கருதியது போன்று அறிவை வளர்த்து ஆற்றல்களை வளர்த்து உணர்ச்சிகளைப் பண்படுத்தி மக்களை வாழ்க்கைக்கு ஆயத்தம் செய்யும் கல்வி மனிதனுடைய சமூக நடத்தையை மாற்றியமைக்கின்றது. கல்வியானது தனது இந்தச் சமூக நோக்கினை நிறைவு செய்வதற்கு சமூகம்தான் ஆற்ற வேண்டிய பணியினைச் செவ்வனே செய்ய வேண்டும்.

இந்த வகையிலே பின்வரும் அம் சங்களூடாகச் சமூகத்தின் பங்களிப் பினை நோக்கலாம்.

1.சமூகமானது தன்னிடத்தில் உள்ள வளங்களைச் சரியாகப் பகிர்ந்து கொள்ளத் தயாராயிருத்தல் மூலம் கல்விக்கு பங்காற்ற முடியும்.

அதாவது கல்விசார்ந்த நிறுவனங்களான பாடசாலைகள் கல்வி அமைப்புக்கள் போன்றவற்றுக்கு தன்னிடமுள்ள நிலம் சார்ந்த வளங் களையோ செய்வதன் மூலம் கல்வியின் கட்டுமானத்தில் பெரும் பங்காற்றுகின்றது.

2.சமூகமானது சமூகத்தில் இயங்கும் அறக்கொடை நிறுவனங்கள்

போன்றவற்றின் மூலம் பலவீனமடைந்த நிலையிற் காணப்படுவோருக்கு கைகொடுத்து உதவுதல்.

அதாவது கற்பதற்கு வசதியற்ற மாணவர்களின் கல்வியில் அக்கறை கொண்டு பாடசாலை இடைவிலகல்கள் போன்ற பிரச்சினைகள் எழாவண்ணம் சமூகம் என்றவகையிலே ஒரு சிறந்த இளம்சமுதாயம் தோன்ற வழி வகுக்கின்றது.

3.பாடசாலைகளை உந்தும் சக்தியாக சமூகமானது காணப்படுகின்றது. இதனூடாக பாடசாலைக்கல்வி நடவடிக்கைகளுக்கும் முன்னேற்ற கரமான செயற்பாட்டிற்கும் உதவு கின்றது.

அதாவது பாடசாலைகள் கல்விநிறுவனங்களில் மேற் கொள்ளப்படும் முன்னேற்ற நடவடிக்கை களுக்கு சமூகம் பங்காளராக மாறிப் பணிசெய்கின்றது. இதனூடாக சமூகமும் கல்வியும் பெரிதும் முன்னேற்ற மடைகின்றது.

4.சமூகத்தில் இயங்கும் பழைய மாணவர்சங்கம், நலன்புரிநிறுவனங்கள் போன்றன கல்விவளர்ச்சிக்கு பெரிதும் பங்காற்றுகின்றன.

அதாவது குழுவான செயற் பாட்டின் மூலம் பாடசாலைகளின் கல்வியை மேம்படுத்துவதனூடு அரசுக்கும் பாடசாலைசமுதாயத்துக்கும் சமூகமானது பெரும்பங்காற்றுகின்றது.

இந்த வகையிலே ஒரு சமூகத்தின் அதி உன்னத வளர்ச்சிக்கும் நவீனமாதலுக்கும் கல்வி ஒரு உறுதிமிக்க கருவிபோல் கல்வியின் நவீன கற்றல் கற்பித்தல் செயற் பாடுகளுக்கும் மாணவர்களின் வளர்ச்சி க்கும் சமூகமானது பெரும்பங்கினை ஆற்றிவருகின்றது. இது எதிர்காலத்திலே நாட்டின் சிறந்த கல்விக் கட்டுமானத்தில் பெரும்பங்காற்றி கல்விவல்லுநர்கள், நிர்வாகிகள், சமூகத்தின் எதிர்பார்ப் புக்களை நிறைவேற்றும் என்பதில் எவ்வித ஐயமில்லை.

இந்த வகையிலே அடுத்து அரசு கல்விக்கட்டுமானத்தில் எத்தகைய பங்களிப்பினை வகிக்கின்றது என்பதனை நோக்கினால் பொதுவாகவே 'அரசு கல்வியை வழங்க வேண்டுமேயொழிய கல்வியிற் தலையிடக்கூடாது' என்று கொள்ளப் படுவதுண்டு. யதார்த்த நிலையில் இது சாத்தியமாகுமா என்ற வினா எழுவது இயற்கையே. "அரசு" என்ற அமைப்பினது வரலாற்றில் ஆரம்பத்தில் அரசுக்குரிய கடப்பாட்டு எல்லைகள் மட்டுப் படுத்தப்பட்டிருந்த போது அரசு பாரிய பொறுப்புக்களை ஏற்றிருக்கவில்லை. எனினும் சமூகமுன்னேற்றம் சனத் தொகைப்பெருக்கம் அரச இயந்திரத்தின் வலுவிலேற்பட்ட திரட்சி என்பவற் றையடுத்து அரசின் பொறுப்புக்களின் விசாலிப்பு என்பன கல்விசார்பாகவும் அதன் கடமைகளைப் பெருகச் செய்துள்ளன.

இந்த வகையிலே அரசின் பங்களிப்புக்களை பின்வரும் அம் சங்களினூடாக நோக்கலாம்

1. கல்வித் திட்டமிடலினூடாக மாணவர்களின் கல்வியில் மேம் பாட்டினை ஏற்படுத்துகின்றது.

அதாவது கலைத்திட்டங்களை உருவாக்கி பாடசாலையில் மாணவன் ஒருவன் கற்கவேண்டிய துறைகளைக் கொண்ட பாடங்களை அறிமுகம் செய்தல் ஆகும். இதனூடாக மாணவர்கள் நவீன கற்றல் - கற்பித்தல் முறைகளை உள்வாங்கி மேம்பாடு அடைய முடிகிறது.

2.சமூகவிழுமியங்களை மாணவர்களுக்கு அளிக்கக் கூடிய கலைத்திட்டங்களை உருவாக்குவதில் அரசு பெரும் பங்கு வகிக்கின்றது.

அதாவது கலைத்திட்டம் என்பது கல்வியின் நோக்கங்களை அடைவதற்கு கல்வியை எவ்வாறு எந்தளவிற்கு கற்பிக்கலாமென அறிவியல், உளவியல் அடிப்படையில் கல்விச்சிந்தனையாளர் காட்டியவழிமுறையாக காணப்படுகிறது. இதன் வழி மாணவன் ஒருவன் கற்க வேண்டிய துறைகளைக் கொண்ட வழிகாட்டும் பாதையை அரசு உருவாக்குகிறது.

3. கட்டாயக் கல்விமுறையை அமுல் படுத்துவதினூடாக மாணவர்களின் பாடசாலை இடைவிலகல்களைத் தவிர்க்கிறது.

அதாவது ஐந்து வயது தொடக்கம் பதினான்கு வயது வரைக்கும் கட்டாயக் கல்வி என்ற ஒன்றை ஏற்படுத்துகின்றது. இதனூடாக எல்லா மாணவர்களும் கல்வி என்ற ஒன்றை ஏற்படுத்துகின்றது. இதனூடாக எல்லா மாணவர்களும் கல்வி அறிவைப் பெறுவதற்கான வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்கின்றது.

4.திறமையுள்ள மாணவர்களுக்கு புலமைப்பரிசில்கள் வெகுமதிகள் அளிப்பதால் மாணவர்களின் கல்விநிலையை ஊக்குவித்து சிறந்த உத்தியைக் கையாள்கின்றது.

அதாவது மாணவர் ஊக்குவிப்புத்தொகைகள் வழங்குவதன் மூலம் மாணவர்களைக் கல்விநிலையில் ஊக்குவித்து சிறந்த கல்விச் சமூகத்தை உருவாக்குகின்றது.

5. மாணவர்களுக்கென ஒவ்வொரு அரசும் வெவ்வேறு வகையான சீர்திருத்தங்களை உருவாக்குவதன் மூலம் மாணவர்களின் கற்கையில் நவீனத்துவத்தைக் கையாள்கிறது.

அதாவது 1972ம் ஆண்டு கல்விச்சீர்திருத்தம் இளைஞர்களிடையே வேலையில்லாப் பிரச்சினைகளை உண்டுபண்ணியபோதும் கல்வியில் மாணவர்களது விருப்பினை உறுதிப்படுத்தியதோடு வாழ்க்கைப் பொருண்மையுடையதாக அமைந்தது. 1977ம் ஆண்டு கூட்டம் ஒழுக்கத்தைக் கட்டியெழுப்புதல், தேசத்தைக் கட்டி யெழுப்புதல் என்பவற்றை மையமாகக் கொண்டிருந்தது.

6.ஊனமுற்ற மாணவர்களுக்காகவும் முறைசார்கல்வி கற்க முடியாதவர் களுக்கும் விசேடகல்வியும் முறை சாராக்கல்வியும் அரசாங்கத்தால்

அறிமுகப்படுத்தப்பட்டது.

அதாவது இதன்மூலம் எல்லோருக்கும் கல்வி என்ற நிலையை ஏற்படுத்தி நாட்டின் எழுத்தறிவு வீதம் கல்வியறிவுவீதம் என்பவற்றைக் கூட்டி சிறந்த கல்விக்கட்டுமானத்துக்கு வித்திட்டுள்ளது.

இந்த வகையிலே சனநாயகக் கோட்பாட்டுக்கிணங்க அரசியல் இயங்கிவரும் இன்றைய கால கட்டத்திலே அதன் அடிப்படை கட்சி செயற்பாடுகளாகக் காணப்படுமிடத்து குறுகிய சுயநல அரசியல் இலா பங்களைக் கருத்திற் கொள்ளாது மக்களின் நலன் நோக்கிக் கல்விக் கொள்கைகள் வகுக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்படடவேண்டும். "நாட்டின் நலனே கல்வியின் உயர்முடிவு" என்ற கல்விச் சிந்தனையாளர் ரூசோவின் கல்வித் தத்துவத்தை செயலுருவம் பெறச்செய்வதே அரசின் கடமை எனக் கொள்ளலாம்.

இந்த வகையிலே கல்விக் கட்டுமானத்தில் பாடசாலை, ஆசிரியர், பெற்றோர் சமூகம், அரசாங்கம் என்பன ஆற்றிய பங்களிப்பினை நோக்க முடிகிறது.ஒட்டு மொத்தமாகப் பார்ப்பின் கல்வியின் நிறைவும் வெற்றியும் பலருடைய முயற்சியின் பெறுபேறுகளே என்பது கண்கூடு. ஒவ்வொருவருக்குமான பொறுப்பு இலட்சிய உணர்விலே தான் நிறைவு பெறுகின்றது. இன்றைய உலகில் "யதார்த்தம்" என்ற சிந்தனை 'இலட்சியத்துக்கு'மாற்றீடாகப் புகுத்தப்படுவதும் உண்டு. கல்வியில் அதற்கு இடம் கொடுக்கமுடியாது 'உள்ளுவதெல்லாம் உயர்வுள்ளலாக' இருக்க வேண்டிய கல்வியில் இலட்சியத்தின் வெற்றியை நிலைநாட்ட நாமனைவரும் எம்மை அர்ப்பணித்து சேவையாற்றுவது எமது கடமையாகும்.

உசாத்துணைநூல்கள்:

1.ஞானமுத்து பிலேந்திரன் விழுமியக் கல்வி (1996)கிறிஸ்தவ மன்றம் யாழ்பல்கலைக்கழகம்
2.பேரா.வ.ஆறுமுகம் கல்விப் பாரம்பரியங்கள் (2000) உயர் கல்விச்சேவைப் பதிப்பகம்
3.அகவிழி சஞ்சிகை பெப்ரவரி 2009
4.திரு பரராஜசிங்கம் இராஜேஸ்வரன், திரு. நடராஜா திருவாசகன் கல்வியலாளன் (2003) கல்வியியல் வெளியீட்டு நிலையம் யாழ்ப்பாணம்
5.மா. சின்னத்தம்பி பாடசாலையும் சமூகமும் (2008) குமரன் புத்தகஇல்லம்
6.மா.சின்னத்தம்பி ஆசிரிய முகாமைத்துவம் (2004)விஸ்டம் பப்ளிக்கேசன்ஸ்
7.சபா.ஜெயராஜா கல்விச்சமூகவியல் (2008)சேமமடு பதிப்பகம்
8.ஜெ.இராசநாயகம் கல்வியின் சமூகவியல் (2008)J R திறன்
9.கலாநிதி ஜெகுரம்குரா.்.பி பெற்றோரும் கல்வியும் (2007)தமிழ்மொழிப்பதிப்பு சோ.சந்திரசேகரம் குமரன் புத்தகஇல்லம்
10. தம்பிராசா சிவகுமார். விசேட கல்வி அறிமுகமும் பிரயோகங்களும் (2007) குருபிறிண்டேர்ஸ் திருநெல்வேலி.

# பெருகிவரும் விவாகரத்திற்கான காரணங்களும் அதற்கான தீர்வுகளும்

**செல்வி.ஜெசிவதனா ஜெகராசா**
*Iம் வருடம் கலைப்பீடம்*
*யாழ்ப்பாணம்*

ஆதிகாலம் தொட்டு இன்றுவரை மனிதனானவர் தமது பண்பாடுகளுக்கு ஏற்றாற் போல் திருமணத்தொடர்புகளை ஏற்படுத்திக் கொண்டு தான் வாழ்கின்றான். மனிதனின் நாகரீக வளர்ச்சிக்கேற்ப திருமணமும் பல வடிவங்களில் மாற்றமடையத்தான் செய்கின்றன. உலகளாவிய ரீதியில் இந்தத் திருமணத் தொடர்பென்பது இனங்களுக்கினம் வேறுபட்டதாகக் காணப்படினும் அடிப்படையில் ஆணுக்கும் பெண்ணுக்குமிடையே ஏற்படுகின்ற உடல், உளரீதியான தொடர்பு முறையாக இந்தத் திருமணத் தைப் பொதுவாக கருதலாம்.

திருமணம் என்பது மனிதனைப் பொறுத்தவரையில் அவசியமான தொன்றாகத்தான் காணப்படுகிறது. ஒரு ஆணும் பெண்ணும் தமது மனப்பூர்வமாக இல்லறவாழ்க்கையில் ஈடுபடக்கூடிய ஒரு புதியஅனுபவத்தை பெற்றுக்கொள்ளும் முறையைக் குறிப்பிடலாம். இத்தகைய திருமண முறையானது ஒவ்வொரு இனங்களும் தத்தமது கலாச்சாரத்திற்கு ஏற்றாற்போல நடைமுறைப்படுத்து கின்றனர்.சான்றாக தமிழர்களின் பண்பாடானது ஒருத்தனுக்கு ஒருத்தி என்ற நிலையில் ஒரு ஆண் ஒரு பெண்ணைமட்டும் தான் திருமணம் செய்து கொள்ளமுடியும். அதேபோன்று முஸ்லிம் பண்பாட்டின்படி ஒரு ஆண் பல பெண்களை (7) மணந்துகொள்ளும் முறை காணப்படுகின்றது. திபெத்திய நாட்டுத் திருமணமுறையை நோக்கில் அங்கே ஒரு பெண் பல ஆண்களை மணந்து இல்லறம் நடத்தும் முறை காணப்படுகிறது. எது எவ்வாறு இருப்பினும் இத்திருமண முறையின் நோக்கம் தமது சந்ததியை நிலை பெறச்செய்வதே.

இவ்வாறாக நடைபெறுகின்ற திருமணமுறை இருவகையில் நடை பெறுவதனை அவதானிக்க முடிகிறது. அவ்வகையில் பெற்றோர்களின் விருப்பப்படி சட்டபூர்வமாக நடாத்தப்படும் நிச்சயார்த்தத்திருமணம். மற்றையது ஓர் ஆணும் பெண்ணும் தமது இதய பூர்வவிருப்பத்தோடு மேற்கொள்ளப் படுகின்ற காதல் திருமணம் என திருமணமுறை அமைகின்றது. இத்தகைய இருவிதமான திருமண முறைகளும் ஆரம்பகாலம் தொட்டு இன்று வரை மனிதர்களால் பின்பற்றப்பட்டு வருகின்றன.

இத்தகைய திருமணமானது

ஆணும் பெண்ணும் தாம் இறக்கும்வரை ஒருவருக்கொருவர் துணையாக வாழ்ந்து இவ்வுலக இன்பங்கள் அனைத்தையும் பெறும் பொருட்டே மேற்கொள்ளப் படுகின்றது. இவ்வாறான சிறப்பம்சம் பொருந்திய திருமண முறையில் சில தகராறுகள் காரணமாக விவாகரத்து என்ற நிலைக்கு அக்குடும்பம் தள்ளப்படுகின்றது.

புராதன காலம்தொட்டு நவீன காலம் வரை இருந்துவரும் திருமண முறையில் விவாகரத்தென்பதும் தொடர்ந்த வண்ணமே உள்ளன. விவாகர்த்து என்பது திருமணமாகிய ஆணுக்கும் பெண்ணுக்குமிடையே ஏற்படும் கருத்துவேறுபாடு காரணமாக தோன்றும் பிரச்சினை காரணமாக ஏற்படுகின்றது. இவ்வகையில் விவாக ரத்து ஏற்படுவதற்கான காரணிகள் எனும் போது

*ஆணுக்கோ பெண்ணுக்கோ ஒருவர் மீது ஒருவர் கொள்ளும் சந்தேகம் காரணமாக

*குடும்பத்தில் நிலவுகின்ற அதிகரித்த வறுமை காரணமாக

*பிள்ளைப்பாக்கியம் இல்லாத சந்தர்ப்பத்தில்.

*கணவனோ மனைவியோ தத்தமது குடும்பத்தவரின் சொற்கேட்டு அதன்படி நடக்க முற்படும்போது

*ஒருவர் கூறும்கருத்தை மற்றவர் ஏற்கமறுக்கும் சந்தர்ப்பங்களில்

*அழகு என்ற நிலைக்கு அடிமையாகும் போது

*வேலைத்தளங்களில் ஏற்படும் வேலைப் பிரச்சினை

*ஒருவரை ஒருவர் புரிந்து வாழும் மனப்பாங்கு அற்ற நிலையில்

*வயது வித்தியாசம்

*குறைந்த வயதுடையவர்களாக இருவரும் இருந்தால்

*ஆணோ பெண்ணோ முதலில் வேறொரு திருமணம் செய்யப் பட்டிருந்தால்

*பிறருடைய கருத்துக்களுக்கு செவி மடுத்தல்

இதே போன்று பல்வேறு காரணிகளால் குடும்பத்தவரிடையே முரண்பாடு ஏற்பட்டு இறுதியில் இருவரும் ஒற்றுமையாக ஒன்றிணைந்து வாழ முடியாது எனக் கருதிய நிலையில் விவாகரத்து என்ற நிலைக்கு தள்ளப் படுகின்றனர்.

இந்த விவாகரத்துக்கு உட்படுகின்ற குடும்பங்களைப் பொறுத்த வரையில் விவாகரத்தாகிய பெற்றோர்கள் இருவரும் தனித்து வாழும் நிலை உருவாகுவதனால் சமுதாயத்தில் அவர்களுக்குரிய அந்தஸ்த்து குறைக் கப்படுவதோடு அவர்களின் பிள்ளைகளின் மனதில் ஒரு விரக்தி உணர்வு அப் பிள்ளைகளைப் பார்த்து ஏனைய பிள்ளைகள் ஏளனம் செய்தல் தரக்குறைவாக நினைத்தல், இதனால் அப்பிள்ளைகள் தற்கொலை என்ற நிலைக்கே செல்லக்கூடிய சந்தர்ப்பங்கள் உருவாகின்றன. இவ்வாறாக விவாகரத்து செய்வதனால் அக்குடும்பம் பல பிரச்சினைகளை எதிர்நோக்க

வேண்டி ஏற்படுகின்றது.

இதே போன்று இந்த விவாகரத்து எனும் விடயத்தை நடைமுறை வாழ்க்கையுடன் ஒப்பிடுகையில் விவாகரத்துச் செய்பவர்கள் பெரும்பாலும் காதல் திருமணம் செய்த தம்பதியினராகவே இருக்கிறார்கள். இத்தகைய விவாகரத்துப் பற்றி புராதனகால வரலாறு சிலவற்றை நோக்குவோம். வாலிஸ் சிம்சர் என்ற அமெரிக்க பெண்ணானவர் ஸ்பென்சா என்ற கடற்படை அதிகாரியை காதல் திருமணம் செய்து இல்வாழ்க்கையை நடாத்தி வந்தவள். எட்டாம் எட்வர் என்பவரைக் கண்டதும் அவ் விளவரசனிடம் மனதைப் பறிகொடுத்ததன் விளைவாக ஏற்கனவே இருந்த தனது கணவனை விவாகரத்துச் செய்துவிட்டு எட்வர் என்பவரைத் திருமணம் செய்து கொண்டாள். இவ் வாறு திருமணம் செய்து கொண்டதும் இரண்டு முறை விவகாரத்துச் செய்த ஒரு அமெரிக்கப் பெண்ணை நீங்கள் மணந்தால் அவள் 'ராணி' என்ற அந்தஸ்த்தைப் பெற முடியாது என அந்நாட்டுமக்கள் கூறினார்கள். இதனால் அவளைத் திருமணம் செய்து கொள்ளும் பொருட்டு 1937ம் ஆண்டு மன்னன் தனது காதலுக்காக முடிதுறந்து மணந்து கொண்டதாகக் கூறப்படுகின்றது. இதே போன்று கிட்லரின் நண்பன் முசோலினி என்பவருடைய காதலி கிளாரா என்பவள் தான் முதல் திருமணம் செய்த விமானப்படை அதிகாரியை விவாகரத்துச் செய்துவிட்டு முசோலினியை திருமணம் செய்ததாக கூறப்படுகின்றது.

இவ்வாறான சம்பவங்களை நோக்குகையில் ஆரம்பகாலத்திலிருந்தே விவாகரததென்பது ஒரு சோகமயமான விடயமாகவும் சமூகம் ஏற்கும் விடயமாகவும் தான் காணப்படுகின்றது. ஆனால் விவாகரத்தென்பது சமூகத்தைப் பொறுத்தவரை அவசியமற்ற தொன்றாகத்தான் காணப்படுகின்றது. ஏனெனில் திருமணம் செய்யும் பொழுது தம்பதியினர் இருவரும் மனப் பூர்வத்துடனே இணைந்து கொள்கின்றனர். அவ்வாறான நிலையில் காலம் செல்லச் செல்ல ஏன் விவாகரத்து என்ற நிலைக்கு தள்ளப்படுகின்றார்கள். இது பெரும் வினாவாகத்தான் இருக்கிறது. குடும்பத்தில் ஏற்படுகின்ற ஏற்றத்தாழ்வு காரணமாக குடும்பங்கள் பொன்னான இன்ப வாழ்கையை துச்சமென எண்ணி விவாகரத்தில் ஈடுபடுகின்றார்களே என எண்ணும் பொழுது கவலைக்குரிய விடயமாகத்தான் காணப்படுகின்றது.

தற்கால ஆய்வுகளை நோக்கும் பொழுது இளம் தம்பதியினருக்கிடையே பெரும்பாலும் இந்த விவாகரத்து என்ற நிலை உருவாகின்றது. இந்தியாவில் ஏறத்தாழ 220000 முடிவுகள் விவாகரத்துத் தொடர்பாகக் கிடைக்கப் பெற்றுள்ளன. முன்பெல்லாம் விவாகரத்து என்பது அரிதாகவே இருக்கும். இப்பொழுது ஆன்னா ஊன்னா என்று

விவாகரத்து ஆகிப்போச்சு. இந்தியாவில் 11 june 2008 தகவலின்படி விவாக ரத்தானது மிகவேகமாக அதிகரித் துள்ளதென தெரியவந்துள்ளது. சென்னை போன்ற பெருநகரங்களில் தினமும் 15 விவாகரத்து வழக்குகள் இடம்பெறுவதாக தெரியவருகின்றது.

பாரம்பரிய பெருமையும், கலாச்சாரப்பின்னணியும் கொண்ட தமிழகத்திலே ஆண்டு தோறும் 4000 ற்கும் மேற்பட்ட விவாகாரத்து எனும் நோய் தீவிரமாக பரவலடைவதாக வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. உதாரணமாக நயந்தாராவை திருமணம் செய்வதற்காகவே மனைவி ரம்யத்தை விவாகரத்து செய்யும் நடிகரும் இயக்குனருமான பிரபுதேவா.

இது தவிர அண்மையில் பெறப்பட்ட தகவலின்படி காதல் கணவரை விவாகரத்து செய்துள்ளனர். பொய் வழக்குப்போடும் இளம்மனைவியர் தன் கணவன் கள்ளக்காதலுக்கு இடையூறு எனக்கருதி கணவன் கொலை. கடலில் படையினருடன் மனைவியும் கைது. தினந்தோறும் நடைபெறுகின்ற கள்ளக்காதலால் விவாகரத்து செய்யும் நிலை காரணமாக இதே ரீதியில் போனால் அனைத்து நாளிதழ்களும் கள்ளக்காதல் சிறப்பிதழ்கள் தினந்தோறும் வெளியாகும் நிலை சீக்கிரம் வரலாம்.

இதே போன்று நடிகர்கள் திருமணம் என்று அறிவித்த கையோடு விவாகரத்துத் தேதியும் அறிவித்து விடலாம் போலிருக்கிறது.மிகமிகச் சமீபத்தில் திருமணமான நடிகைக்கும் அவர் கணவருக்கும் திருமணமாகிய 3ம் நாளே கருத்து வேறுபாடு ஏற்பட்டுவிட்டதாம். அதாவது கல்யாணியின் கணவன் மாதவன் மற்றும் அவனது சகோதரர்களது நடத்தை சரியில்லாததன் காரணமாக கல்யாணி திருமணமாகி சிறிது நாட்களின் பின்னே பிறந்த வீட்டிற்குச்சென்று தனித்து வாழ்வதாகவும் சிறிது காலம் கழித்து அவள் விவாகரத்துச் செய்யப் போவதாகவும் செய்திகள் தெரிவிக் கின்றன. இவ்வாறாக பல காரணங் களால் விவாகரத்துக்கள் நடைபெறு கின்றன. இவ்வாறான விவகாரத்து வழக்குகள் ஆண்டுக்கு 20 சதவீதமாக வளர்ச்சி கண்டிருப்பது வேதனை தருகிறது.

திருமணமாகிய தம்பதியினர் தம் குடும்பத்தில் ஏற்படும் பிரச்சினை காரணமாக விவாகரத்து செய்யப்படுகின்றது. அதாவது குடும்பத்தில் கணவன் மனைவிக் கிடையே ஏற்படும் பிரச்சினைகள் உறவினர்களால் தீர்க்கமுடியாத பட்சத்தில் பொலிஸ்துறையை அணுகு கின்றனர். அங்கு சமரச முயற்சியில் ஈடுபடும் பொலிஸார் தோல்வி யடைவதால் பிரச்சினை கோட்டிற்குச் செல்கிறது. இவ்வாறு குடும்பம், நண்பர், சமூகம் என எல்லோராலும் தீர்க்க முடியாமல் குடும்பநல கோட்டிற்கு வழக்கு பதிவு செய்ய வரும் தம்பதியினருக்கு கோட்டில் கவுன்சிலிங்

கொடுக்கப்படும். அந்த முயற்சி தோல்வியடையும் போது வழக்கைச் சந்திக்கின்றனர். சில வழக்குகள் வக்கீல் சொன்னபடி செய்வதாலும் அவசரப்பட்டு எடுக்கும் முடிவுகளாலும் தங்களது குடும்பவிவகாரங்கள் அனைத்தையும் வெளியே சொல்ல வேண்டிய நிலைக்கு தம்பதியினர் ஆளாகின்றனர்.

இவ்வாறான விவாகரத்து நிகழ் வதற்கான முக்கிய காரணியாக தற்காலத்தில் முக்கியம் செலுத்து வையாக பேஸ்புக் ட்விட்டர் போன்ற சமூக வலைத்தளங்கள் உலகஅளவில் ஏராளமான மக்களை ஒன்றிணைப்பதாக ஒருபுறம் பெருமையுடன் பேசிக் கொண்டிருக்கையில் மறுபுறம் அமெரிக்காவில் நடக்கும் ஒவ்வொரு ஐந்து விவாகரத்திலும் ஒரு விவாகரத்து பேஸ்புக் காரணமாக உள்ளதாக ஆய்வொன்றில் தெரியவந்துள்ளது. எதிர்காலத்தில் இப்படி ஒரு வில்லங்கம் வர வாய்ப்புள்ளது என்ற ஆபத்தை உணராமல் பேஸ்புக்கில் உலா வருபவர்கள் தங்களது மனைவி அல்லது கணவனுக்கு கூடத் தெரியாத அந்தரங்கமான விடயங்களை ஏற்றி வைக்க பின்னாளில் அதுவே விவாகரத்து வில்லனாக உருவெடுத்து வருகின்றது. விவாகரத்துக் கோரி நீதிமன்றங்களில் படிக்கட்டுக்களில் ஏறும் ஆண் அல்லது பெண் தனது மனைவி அல்லது கணவர் சமூகவலைத்தளங்களில் கொட்டி வைத்துள்ள அசிங்கமான தகவல்கள் மற்றும் புகைப்படங்கள் போன்ற வற்றையே உதாரணம்காட்டி இப்படிப்பட்ட குணமுடையவருடன் சேர்ந்து வாழ முடியாது எனக்கூற நீதிமன்றமும் இத்தகைய அசைக்க முடியாத ஆதாரங்களின் அடிப்படையில் விவாகரத்து வழங்கி விடுகின்றது.

இவ்வாறாக விபச்சாரம், கள்ளக்காதல் தொடர்பு, பேஸ்புக் பாவனை, புரிந்துணர்வின்மை, இருவரும் வெவ்வேறு மதங்களைச் சார்ந்திருத்தல், பல்வேறு கஷ்ரங்களுக்கு ஆளாகி இருத்தல், குழந்தைகள் பற்றிய பிரச்சினை போன்ற பல காரணிகளை மையமாக வைத்து விவாகரத்திற்கு உட்படும் கணவன் மற்றும் மனைவியர்களின் இத்தகைய போக்கு காரணமாக எதிர்காலம் என்னவாகும். இதற்குரிய தீர்வுகளை நோக்குவோம்.

* திருமணத்திற்கு முன்பு ஆண், பெண் எனும் இருபாலாருக்கும் இல்லற வாழ்வின் சிறப்பம்சங்கள் பற்றி எடுத்துரைத்தல். (விட்டுக் கொடுத்தல், புரிந்துணர்வு, சுயமாகச் செயற்படல், பொறுப்பறிந்து செயலாற்றல் போன்றவற்றை தெளிவுறுத்துதல்)

* சமூகப் பண்பாட்டை நன்றாக தெரிந்திருத்தல்
* இணையத்தளங்களின் பாவனையை (பேஸ்புக் ட்விட்டர்) குறைத்தல்
* குழந்தை, மனைவி நலனில் அக்கறை கொள்ளுதல்
* தேவையற்ற விடயங்களில் தலையிடுவதைத் தவிர்த்தல்
* திருமணத்திற்கு முன்பு இருவீட்டின் நிலைப்பாடுகள்,பழக்கவழக்கங்கள்,

அந்தஸ்து போன்றவற்றை அறிதல்.

* பிறருடன் பழகும் விதம் பற்றி தெரிதல்

* உலகில் பிணக்குகள் சண்டை சச்சரவுகள் ஏன் ஏற்படுகின்றது அதை எவ்வாறு தீர்ப்பது பற்றி முற்கூட்டியே அறிவைப் பெற்றிருத்தல்.

* குடித்தல், மது அருந்துதல் பழக் கத்தைக் கைவிடல்

* காமவெறி பிடித்த விபச்சார செயல்கள் இருப்பின் அவற்றை அடியோடு நீக்குதல்

* குடும்பத் தேவை எதுஎன அறிந்து செயற்படும் தன்மையை வளர்த்தல்

இவ்வாறான பல செயற்பாடுகளை தம்பதியினர் தாம் திருமணம் செய்யமுன் கடைப் பிடிப்பார்களேயனால் நாடு மட்டுமல்ல உலகில் நடைபெறும் சகல விவாகரத்தும் இடம்பெறாது தடைசெய்யலாம். இதற்கு இன்றைய இளைஞர்கள், யுவதிகள் கைகளில்தான் இது தங்கியுள்ளது. அவர்கள் ஒன்றிணைந்து விவாகரத்து செய்வதால் ஏற்படுகின்ற எதிர்நோக்குகின்ற சவால்களை மக்களுக்கு தெரியப் படுத்துவதுடன் விவாகரத்து செய்வது தவறு எனக் கூறி அரசாங்கத்தாலும் நீதிமன்றத்தாலும் ஒரு சட்டம் நடைமுறைக்குக் கொண்டு வருவதற்கு முன்னுதாரணமாக திகழ வேண்டும். அவ்வாறு திகழ்ந்தால் ஒற்றுமையுள்ள நல்லதொரு குடும்பங்களை நாட்டில் கட்டியெழுப்ப முடியும் .

நல்லதையே சிந்திப்போம்
நல்லதற்காக உழைப்போம்
விவாகரத்தை உலகினின்று
முற்றாகாத் தடைசெய்வோம்.


உசாத்துணை நூல்கள்:

இணையத்தளச் செய்திகள்
உலக வரலாறு கலைக்களஞ்சியம்


இளைஞனே!
ஓடுகின்ற கால்கள்
ஓய்வெடுக்கும் போது
நீ எடுத்துக்கொண்ட பயணம்
முடிந்திருக்க வேண்டும்!
வாழ்ந்த நாட்களை
திரும்பிப் பார்க்கும் போது
உன் பெயரை சிலர்
உச்சரிக்க வேண்டும்!
கோபுரங்களின் அழகை
அஸ்திவாரங்கள் தாங்குவது
போல்
நீ பிறந்ததின் பயனை
ஊரறியச் செய்

# பரதநாட்டியத்தில் தமிழிசைப் பாடல்கள்

## பதம் எனும் தெய்வீகப்பாட்டு

**கார்த்திகா பரமேஸ்வரன்**

*முதலாம்வருடம்*

*நுண்கலைப்பீடம் யாழ். பல்கலைக்கழகம்*

தமிழகம் வளர்த்த செவ்விய ஆடற்கலை, கூத்து, தேவரடியார்முறை, தாசி ஆட்டம், சின்னமேளம், சதிர் எனக் கால ஓட்டத்தில் பல்வேறு பெயர்கள் பெற்று தற்காலத்தில் பரதநாட்டியம் என்று அழைக்கப்படுகிறது.

தமிழ்நாட்டில் உருவாகி வளமுற்ற இந்த நாட்டியமுறை இன்று இந்தியாவின் சிறப்புமிகு செவ்விய ஆடல்களில் ஒன்றாகப் போற்றப்படுகிறது. உலகில் பிற நாடுகளிலுள்ளோரும் இக்கலையை முறைப்படி விரும்பிப் பயின்று உலக அரங்குகளில் ஆடிவருகின்றனர். இசையும் தாளமும் மெய்ப்பாடுகளும் விரவி வரும் கலையாக விளங்குவது இதன் தனிச்சிறப்பாகும்.

### நிருத்த நிருத்திய நாட்டியம்

பரதநாட்டியத்தில் நிருத்தம், நிருத்தியம், நாட்டியம் எனும் மூன்று வகை ஆடல்களும் அடங்கும்.

நிருத்தம் என்பது அழகிய உடல்அசைவுகளைக் கொண்ட ஆடலைக் குறிக்கும். நிருத்தியத்தில் நடனமாகிய நிருத்தமும் அபிநயக்கலையால் கதை அல்லது கருத்தினை வெளிப்படுத்தும் நாட்டியமும் விளங்கும்.

தற்காலத்தில் பரதநாட்டிய நிகழ்சிகளில் ஆடப்பெறும் பதம், வர்ணம், கீர்த்தனை, விருத்தம் முதலியவை நிருத்திய மற்றும் நாட்டிய வகையிலான ஆடல்கள் ஆகும். இவ்வகை ஆடல்முறையில் அபிநயமும் பாடலும் மிக முக்கியமாக கொள்ளப்படும்.

### நாட்டியப்பாடல்கள்

நாட்டியத்தில் இன்றியமையாக்கூறு இசை. ஆடலில்லாத இசை இருக்கலாம். ஆனால் இசை இல்லாத ஆடல் இல்லை. நாட்டியத்தில் இசையின் தரம் குறைந்தால் அது தன் சிறப்பை முழுமையாக இழந்துவிடுகிறது. இனிய குரலின் பாட்டிசையும் உணர்ச்சிகளுக்கு எழுச்சியூட்டும் கருவியிசையும் ஆடலோடு பொருந்தி எழும்போது

ஆடல் சிறக்கிற உயர்சிபெறுகிறது. பழந்தமிழில் மாதவி நல்லாளின் நாட்டிய அரங்கேற்றத்தின் போது

....யாமும் குழலும் சீரும் மிடறும்
தாழ்குரற் றண்ணுமை ஆடலொ டிவற்றின்
இசைந்தபாடல்..... (14)

என யாழும், குழலும், தாளமும், தண்ணுமையும் பாடலொடு இணைந்து ஆடலுக்கு சிறப்புத்தந்த செய்தியை சிலப்பதிகாரம் கூறுகின்றது.

மேலும் பரதநாட்டியத்திலே பன்மொழிப்பாடல்கள் கொண்ட உருப்படிகளாக அலாரிப்பு, ஜதீஸ்வரம் தவிர்த்து சப்தம், பதவர்ணம், பதம், ஜாவளி, தில்லானா, விருத்தம் ஆகியவை பாடலை அடிப்படையாகக் கொண்ட நாட்டிய உருப்படிகள். இவற்றுள் ஜாவளி என்னும் நாட்டியஉருப்படிகளுக்குரிய பாடல்கள் தெலுங்கு மற்றும் கன்னட மொழிகளில் பாடப்பெற்றவையாக இருக்கும். சப்தத்திற்குரிய பாடல்களை சிலர் தமிழிலும் இயற்றியுள்ளனர். எனினும் சப்தப் பாடல்கள் பெரும்பாலும் தெலுங்கு மொழியில் அமைகின்றன.

மேலும் பரதநாட்டியத்தில் தமிழிசைப்பாடல்கள் எனும் நிலையிலே பதம் எனும் தெய்வீக காதல்பாட்டினை விரிவாக நோக்குவோமாயின்

நாட்டிய அரங்குகளிலும் இசை அரங்குகளிலும் பாடப்பெறும் ஒரு சிறப்பு மிகு கருநாடக இசை வடிவம் பதம், நெருப்பு, தொடுப்பு, முடிப்பு என்னும் அமைப்பிலான பதங்களைத் தமிழில் முத்துத்தாண்டவரும், தெலுங்கு மொழியில் சேத்ரக்ஞரும் பாடிய காலத்திலிருந்து (கி.பி. 17 ஆம் நூற்றாண்டு) தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம் மராத்தி, வடமொழி முதலான தென்னகத்தில் பயிலும் எல்லா மொழிகளிலும் பதங்கள் இயற்றப்பட்டன.

பதங்கள் அகப்பொருள் சார்ந்த பாடல்கள், மதுர, பக்தி, சிருங்காரரசம், நாயக - நாயகி பாவம், தலைவன் தலைவி காதல் உறவு என்று பலவாறு சொல்லப்படும் அகப்பொருள்சார்ந்த உணர்வுகள் பதத்தின் கருப்பொருளாகிறது.

அன்பினால் பிணைக்கப்பட்ட உறவுகள் பலவகை. தந்தைக்கும் மகனுக்குமிடையே உள்ள பாசம், தாய்க்கும் மகளுக்குமிடையேயான அன்பு, நண்பர்களுக்கிடையேயான உண்மையான அன்பு, தலைவனுக்கும் தலைவிக்கும் காதலிக்கும் இடையே உள்ள அன்பு மிக நெருக்கமானது. உணர்சி மிக்கது. வலிமை மிக்கது. இது உணர்வாலும் உடலாலும் ஒன்றாகிவிடும் உயர்ந்த உறவாகும்.

பதங்களில் சொல்லப்படும் நுட்பமான அகஉணர்வுகள் வெளிப்படையாகவும் சில சமயம் உள்ளுறையாகவும் பாடப்படுகின்றன. இவை சிற்றின்ப உணர்வுகளை விளக்குவன போல் காணப்படினும் உயர்ந்த பேரின்பத்தத்துவத்தை உணர்த்துகின்றன என்பதே உண்மை. கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளையின் ஒரு பதம் இங்கு எடுத்துக்காட்டலாம்.

இராகம்:சண்முகப்பிரியா தாளம்:ஆதி

எடுப்பு

நல்ல சகுனம் நோக்கிச் செல்லடி - சென்று
நான்படும் பாடு அவருக்குச் சொல்லடி - தோழி (நல்ல சகுனம்)

தொடுப்பு

அல்லல் அகற்றி அன்பர்க் கானந்தம் அருள்நேசா
தில்லைப் பதிநடேசன் திருவுள்ளம் - அறிய நீ (நல்ல சகுனம்)

முடிப்பு

வண்ணமலர்க ளேதும் வாசம் தருவதில்லை
பண்ணில் இனிமையில்லை பாலிற் சுவையுமில்லை
கண்ணில் உறக்கமில்லை கருத்தோர் நிலையிலில்லை
புண்ணியம் உண்டடி பொற்றொடியே இன்று (நல்ல சகுனம்)

பாடலில் சித்தரிக்கப்படும் தில்லைநடேசராகிய இறைவன்/பரந்தாமன் அத்தலைவனை அடைய ஏங்கித்தவிக்கும் தலைவியாகச் சித்தரிக்கப்படுபவர். அடியவன் அல்லது ஆன்மா. இறைவனை ஆன்மாவாகிய அடியவன் உணர்ந்து கொள்வதற்கு ஆசானாகிய குரு உறுதுணையாக விளங்குவது போல் இங்கு தோழியானவள் குருவாக அமைகிறாள். ஆக தலைவன், தலைவி, தோழி எனும் முக்கியமான மூன்று பாத்திரங்களைக் கொண்டு உரியதொரு தத்துவமாகிய பதி-பசு உறவை பதம் என்னும் இசைப்பாடல் வகை உணர்த்தக் காணலாம்.

### பழந்தமிழ் அகப்பொருள் பாடல்கள்

தமிழரின் பண்டைய பெருமைகளை அழகுற எடுத்துக்காட்டும் எட்டுத்தொகை, பத்துப்பாட்டு, தொல்காப்பியம் முதலிய பழந்தமிழ் நூல்களில் அகப்பொருட் செய்திகள் ஏராளம் உள்ளன.

குறுந்தொகையில் ஒரு தலைவி அவள் காதல் கொண்ட தலைவனை சந்திக்கமுடியாதபடி தாய் அவளை வீட்டிலே தடுத்துவைத்து விடுகிறாள்.

பிரிவுத்துயரால் துடிக்கிறாள் தலைவி. தன் உள்ளத்தை கொள்ளை கொண்ட தலைவனைக் காணமுடியாது துயரில் இறந்துபோய் விடுவாளோ என ஐயுறுகிறாள். குளத்திலுள்ள நீரில் கல்விழும் போது ஏற்படும் நுரை மெல்ல மெல்ல இல்லாமல் போவது போல தானும் இறந்துவிடுவேன் என ஆற்றொணாத்துயரோடு தோழியிடம்

யாம் எம் காதலர் காணோம் ஆயின்
செறிதுளி பெருகிய நெஞ்சமொடு பெருநீர்
கல்பொரு சிறுநுரை போல
மெல்ல மெல்ல இல்லாகுதுமே

(குறுந்தொகை 240)

என்று சொல்கிறாள். இவ்வாறு பழந்தமிழ் பாடல்களில் அகக்காதல் பேசப்படுகிறது.

இவ்வாறாக பழந்தமிழில் உலாப்பாடல்கள், துதிப்பாடல்கள், கர்நாடகஇசையில் பதம், இசைஅமைதி என பலவற்றில் பரதநாட்டியத்திற்குரிய பதம் சொல்லப்படுகிறது. இப்படியாக பரதநாட்டியத்தில் தமிழிசைப்பாடல்கள் எனும் தொகுப்பில் 'பதம் எனும் தெய்வீகப் பாட்டு' தொகுப்பினை நோக்கலாம்.


உசாத்துணை நூல்கள்:

குலேந்திரன்.நா. (1964) பரதநாட்டியத்தில் தமிழ் இசைப்பாடல்கள்-தஞ்சாவூர்

# யாழ்ப்பாணத்து உணவுப் பழக்கவழக்கள்

**காயத்திரி**
க.பொ.த. (உயர்தரம்)

மனிதருக்கு மனிதன், குடும்பத்திற்கு குடும்பம், ஊருக்குஊர், நாட்டிற்கு நாடு நாம் உண்ணும் உணவும் அத்துடன் இணைவான பழக்கவழக்கத்திலிருந்தும் வேறுபட்டிருக்கின்றது.

தட்ப வெப்ப, கலை, கலாசாரம், பொருளாதாரம் போன்றன உணவுப் பழக்க வழக்க முறையில் பெரும்பாலும் செல்வாக்கு செலுத்துகின்றன. உண்ணும் உணவும், உண்ணப்படும் உணவு சமையலாக்கப்படும் முறையும், சமையலாக்கப்பட்டவை உண்ணப்படும் முறையும் ஒவ்வொருவரிடத்திலும் வேறுபட்டவையாகவே உள்ளன. ஆதிகாலம் தொட்டு மனித வாழ்வியலோடு பின்னிப்பிணைந்து உணவு காணப்படுகிறது. எனினும் அவை உண்ணப்படும் முறை காலத்திற்கு காலம் மாறுபட்டவையாகவே உள்ளன.

'கூழேயானாலும் குளித்துக்குடி' என்ற முன்னோர் கூற்றானது அன்றைய கால உணவினையும் அதனுடன் இணைந்த பழக்கவழக்கங்களையும் சுட்டுகின்றது.

இந்து சமுத்திரத்தின் நித்திலமாய் இந்திய உபகண்டத்திற்கு அண்மையில் நாலாபுறமும் கடலினால் சூழப்பட்ட ஒரு தீவாக இலங்கை விளங்குகின்றது. எண்சாண் உடம்பிற்கு சென்னி சிறந்தது. என்று கவிஞர்களால் போற்றப்படுவது ஓர் உடலுக்கு தலையானது எத்தகைய அவசியமோ அதே போன்று இலங்கையின் தலையாகக் காணப்படுகிறது யாழ்ப்பாணம். என்னவளம் இல்லை இந்தத் திருநாட்டில் என்று கவிஞர்கள் பாடும் அளவிற்கு இது சிறப்புற்று காணப்படுகிறது.சகல வளங்களும் உண்டு. நவநாகரிக மோகத்ததைவிட பழைய தலைமுறைகளின் செயற்பாடுகளையும் தன்னகத்தே கொண்டுள்ளது.

"பசி வந்தால் பத்தும் பறந்திடும்" என்ற பழந்தமிழ் நூல்களிலே கூறப்பட்ட கூற்றிற்கேற்ப யாழ் குடாநாட்டின் பண்டைய கால உணவுப் பாரம்பரியம் பற்றி நோக்குவோம் பண்டைக் காலத்தில் இயற்கை உணவுப் பாரம்பரியம் நிலவிற்று அதாவது இயற்கையிலே பயிர்விதைத்து இயற்கைப் பசளைகளைக் கொட்டி பட்டை மூலம் நீர் பாய்ச்சி நன்கு செழித்து வளர்ந்த குரக்கன், சாமை, தினை, வரகு, பயறு, உழுந்து, கௌபீ மற்றும் நெல் முதலான தானிய வகைகளை தம் கைப்பட உரலிலே இடித்து அரிசியோ மாவாகவோ செய்து அவற்றிற்கு மரவள்ளி, மீன், இயற்கையான கீரைவகைகள், பசுவின்

மூலம் பெறப்பட்ட தயிர் போன்றனவற்றையும் கறிகளாக் கொண் டனர். யாழ்குடாநாட்டின் கற்பகத்தரு என்றழைக்கப்படும் பனைமரம் மூலம் அதிகளவான உணவுத்தேவை நிறைவு செய்யக்கூடியதாய் இருந்தது. தாகத் திற்கு பானங்கள் அல்லது பதநீர், நுங்கு உணவிற்கு பனங்கிழங்கு, பனாட்டு, மற்றும் ஒடியல் என்பனவும் பனை மரத்தின் மூலம் பெற்றுக்கொண்ட உணவுகளாக விளங்கிற்று.

மேலும் பண்டையகால உணவிலே சித்திரை மாதகாலப் பகுதியிலே அதிகமாய் காணப்படும் வேப்பம்பூ, வாழைபொத்தி, முருங்கைக் காய் போன்றவற்றை வடகமாக்கி உணவிலே ஓர் அங்கமாய் சேர்த்துக் கொண்டனர். இது தவிர ஊறுகாய், வத்தல், பனாட்டு, தேன் போன்ற இன்னோரன்ன உணவுவகைகளும் காணப்பட்டன. பெரும்பாலும் இவ் வுணவுகளே ஆரம்பகால உணவுப் பாரம்பரியமாக விளங்கிற்று எனக் கூறலாம்.

ஆரம்பகாலத்திலே மட்பாண்டங் களிலேயே உணவுகள் சமைக்கப்பட்டு, வாழையிலை, தாமரையிலை, மட்டு கோப்பை போன்றவற்றிலேயே சமைக்கபட்ட உணவுகள் உண்ணப் பட்டன. காலைவேளையிலே பழங்கஞ்சி, கூழ் போன்ற உணவுவகைகள் பெரும்பாலான யாழ்ப்பாண வீடுகளில் காலை உணவாக விளங்கிற்று. பெரும்பாலான வீடுகளில் அனேக உணவுகள் கைகளினால் எடுத்து உண்ணக்கூடியனவாக காணப்பட்டதால் தமது கைகளே உணவு உட்கொள்ளப் பயன்படுத்தினர்.

இவர்களின் உணவில் அனைத்து வகையான உணவுச் சத்துக்களும் பூர்த்தியாககக் கூடியனவாக காணப்பட்டன. பெரும்பாலான தானியவகைகள் புரதத்தினை கொண்டிருக்க, கிழங்கு வகைகளில் மாப்பொருள் பரந்து காணப்பட்டிருந்தது. யாழ்மாவட்டம் கிராமப்புறங்களையே அதிகமாய் கொண்டிருந்தமையாலும் நகரமய மாக்கல் துரிதமாக இடம் பெறாமை யாலும் அதாவது நகரமயமாக்கல் இடம்பெறவில்லை என்றே கூறலாம். இச் சூழ்நிலையினால் அதிக மக்கள் பசுக்கள் வளர்த்துவந்தனர். இதன் மூலம் பால், தயிர், நெய் போன்றன பெறப்பட்டன. இவ்வுணவுகள் இலிப்பிட்டினை அதிகமாய் கொண் டிருந்தன. மேலும் பால் பூரண உணவாக விளங்கிற்று. மேலும் பச்சை உணவுகள் மூலம் கனிப்பொருள் தேவை பூர்த்தியாக் கப்பட்டது. இவை தவிர இறைச்சி வகைகளும் உணவில் சேர்க்கப்பட்டன.

பண்டையகாலமனிதன் தனது உணவின் மூலம் உணவுச்சத்துக்களை மட்டுமல்லாது அறுசுவை உணவினை யும் பெற்றுக்கொண்டான். அறுசுவை உணவிலே நோய் எதிர்ப்புசக்தியினை அதிகமாய் கொண்ட கசப்புவகை

உணவுகள் அதிகமாய் சேர்க்கப்பட்டன. அகத்தி, பாகற்காய், சுண்டைக்காய், வேப்பம்பூ போன்றவற்றில் கசப்புவகை மேலோங்கிக் காணப்பட்டன. ஆரம்பகால மனிதன் அறுசுவை உணவினை இயற்கையான முறையிலே பெற்று அனைத்து உணவுச்சத்துக்களையும் பூரணமாக்கக்கூடிய வகையில் சிறந்த தோர் உணவுப் பாரம்பரியத்தை கொண்டு ஆரோக்கியமான வாழ்க்கை முறையினை உணவுப்பழக்க வழக்கத்தின் மூலம் கொண்டிருந்தான் என்பது அனைவரும் கண்டதோர் உண்மை.

பூமி எனும் உருண்டை சுழன்று கொண்டிருப்பதால் இரவு, பகல் போன்றன உருவாகி நாட்களாகி, நாட்கள், மாதங்களாகி, மாதங்கள் வருடங்களாகி எத்தனையோ வருடங்கள் கடந்து விட்டன. காலமாற்றத்தினாலும் அந்நியர் வருகையினாலும் யாழ்குடாநாட்டு உணவுப்பாரம்பரியத்தில் பிறழ்வுகள் ஏற்படலாயின. அந்நியர் களின் ஆட்சி படிப்படியாய் எமது நாட்டிலே வேரூன்றி எமது நாட்டிலே வேரூன்றிக் காணப்பட்ட பாரம்பரியங்கள் வழக்கொழிந்து செல்லத்தொடங்கின.

மேலைத்தேய மோகம் உள் நுழைந்து பலமாற்றங்களை ஏற்படுத் தியது. பாண், பியர், போன்ற உணவு குடிபான வகைகள் முதலிலே வேற்றுணவாக அறிமுகப்படுத்தப்பட்டு படிப்படியாக பரவலடையத் தொடங்கியது. இதனைத் தொடர்ந்து உள்நாட்டு யுத்தம் காரணமாக அனேக யாழ் மக்கள் மேலைநாட்டவரிடம் அகதிகளாய் சென்றடைந்தனர். இவர்களின் பின்னைய வருகையினால் யாழ்ப்பாண உணவுப்பாரம்பரியத்தில் பிறழ்வுகள் ஏற்படலாயின. 1995ற்கு பின்னர் தொடங்கி தற்போதைய காலப் பகுதி வரை பெருமளவில் உணவுப் பாரம்பரியம் முன்னைய காலத்துடன் ஒப்பிடுகையில் முரண்பட்டுக் காணப்படுகிறது.

தற்காலம் நகரமயமாக்கல், தொழில் வாய்ப்பு போன்ற காரணிகளால் நேரம் போதாமையாலும் மக்கள் அல்லல்படுகின்றனர் இதனை உணவு மூலம் நிவர்த்தி செய்ய மேலை நாட்டவர் முடிவெடுத்து விரைவாக சமையலாகப்படும் இலகுவான உணவு வகைகள் இன்று யாழ்ப்பாணத்தில் பரவலடைந்திருப்பதைக் காணமுடிகிறது. இன்றைய காலத்தில் தமிழரின் பாரம்பரிய உணவுகளை ஓரங்கட்டி வைத்து விட்டு பசுமைப்புரட்சி, வெண்மைப்புரட்சி, நீலப்புரட்சி என்றும் பின்னர் மரபணுமாற்ற உணவுவகைகள் என்றும் ஏதையெதையெல்லாமோ உபயோகித்து உற்பத்தி செய்யப்படும் உணவுகள் உண்ணப்படுகின்றன.

நம்முன்னோரின் அனுபவ மொழியான மருந்து கால் மதி முக்கால் என்பது இப்போது மறுவளமாக்கப்பட்டு மதிகால் மருந்து முக்கால் என்ற புதுமொழிக்கு யாழ்ப்பாணத்து மக்கள் வாழ்கின்றனர். காலை உணவு நூடில்ஸ்,

இட்லி, பாண்.... என்ற உணவ வகைகள் விளங்குகின்றன. பழங்கஞ்சியும் இல்லை கூழும்இல்லை. புதுமையான உணவுகள் கைகளால் உணணப்படுவதுமில்லை. கரண்டி, முள்கரண்டி, கத்தி போன்ற வற்றால் உண்ணப்படுகின்றன. உணவுகளிற்குப் பதிலாக சிலவகை மாத்திரைகள் உள்ளெடுடக்கப் படுகின்றன.இன்றைய காலத்தில் பெண்களும் தொழில் வாய்ப்பினைப் பெற்று அதன் நிமிர்த்தம் வேலைக்குச் செல்வதால் உடன் உணவுகள் சமைக்கப்படுவது அரிதாகவே காணப்படுகிறது. குளிர்சாதனப்பெட்டியில் வைக்கப்பட்ட மரக்கறிவகைகளை சமைப்பதோ அல்லது சமைக்கப்பட்ட கறிகளை குளிர்சாதனப் பெட்டியில் வைத்துவிட்டு தேவைக்கேற்ப எடுத்து சூடுகாட்டி உண்ணும் முறையினையும் காணலாம். காலதேச மாற்றம் காரணமாக யாழ்ப்பாணத்து உணவுப்பழக்கவழக்க முறையில் மாற்றங்கள் ஏற்பட்டாலும் இவை ஒருவகையில் நன்மையினையும் மறுபுறத்தில் தீமையினையும் கொண்டுள்ளன என்றே கூறலாம்.

தற்கால உணவுவகைகளில் அனைத்துவகையான ஊட்டங்களும் பூர்த்தியாக்கப்படிருப்பதோடு இலகுவான முறையில் சமைக்கக்கூடியதாகவும் உள்ளன. எது எவ்வாறிருப்பினும் யாழ்ப்பாணத்திற்கே உரித்தான சுதேச உணவுகளினை இன்று அரிதாகவே காணமுடிகின்றமை கவலைக் குரியதாகவே இருக்கின்றது.

'யாழ்ப்பாணத்தின் பனம் மரம் எங்கே

ஒடியல் கூழும் எங்கே'

என அவதியுறும் நிலையினைக் கண்கூடாகக் காண்கின்றோம். சலரோக வருத்தம் வந்துவிட்டதே என்ற ஒரு நோக்கத் திற்காக மட்டமல்லாது எமது அன்றாட உணவுத்தேவைக்காக குரக்கன் மாவினையும், குறிஞ்சா இலையையும் தேடும் கூட்டத்தினைக் காணமுடியாது. தற்போது போலிக்கமிலக் குறைபாட்டால் பிறப்பிலேயே குறைபாடுடைய குழந்தைகள் பிறக்கின்றனரே என்பதற் காகவே பச்சைநிற மரக்கறிகள் கர்ப்பிணித்தாய்மார்களால் பெரும்பாலும் உண்ணப்படுகின்றன.

உணவுப்பழக்கமுறையிலே விருந்தோம்பல் சிறப்பிடம் பெறுகின்றது. விருந்தோம்பலிலே யாழ்ப்பாணம் உயர்ந்து விளங்கிற்று என்பதனை பிடியரிசிப் பண்பாடு என்ற பழக்கத்தை நாவலர் ஏற்படுத்தியமை சிறந்த சான்றாக பகிரலாம். இன்றைய யாழ்ப்பாண விருந்தோம்பல் முறை யானது விசித்திரமானதாக காணப் படுகிறது. அதாவது விருந்துண்ண வரும் திகதி, நேரம், வரவுள்ளோர் தொகை முதலான தகவல்களை ஏற்கனவே தெரியப்படுத்தி விட்டு விருந்துண்ணச் செல்வதற்கு முன் "ஹலோ" சமையல் முடிந்துவிட்டதா? நாங்கள் புறப்படுகின்றோம் என மீண்டுமொரு முறை தொலைபேசியில் உறுதிப்

படுத்திக் கொண்டு விருந்துண்ணச் செல்லும் மரபு காணப்படுகின்றது.

ஆரம்ப காலத்தில் எம்முன்னோர்களால் அன்றாட உணவாக பயன்படுத்தப்பட்டவை தற்போது வைத்திய தேவைக்காகவே பயன்படுத்துகின்றனர். யாழ்ப்பாணத்தின் சர்வதேச உணவுவகைகள் என்று பனையுடன் தொடர்பான உணவு வகைகளை சிறப்பாக குறிப்பிடலாம். மேலைநாட்டவர் தற்போது இயற்கை விவசாயத்தோடு திரும்பிவிட்டனர். ஆனால் நாம் இரண்டும் கெட்டவர் களானோம். எம்முடைய பாரம்பரிய உணவுகளோ அதனுடன் தொடர்பான பழக்கவழக்கங்களையோ முழு மையாகக் கையாளுவதில்லை. சரி மேலைத்தேய உணவுகளோ அதனுடன் இணைந்த பழக்கவழக்கங்களோ பூரணமாக தெரியாமலும் காணப் படுகின்றது. எனவே உணவுகள் உணவுப்பழக்கவழக்கங்கள் உண்ணும் முறைகள் யாவிலும் அன்னநடை பயிலப் போய் தன்நடையும் கெட்ட கதையாகிவிட்டோம். நம்மை அறியாமலே நம்முள் புகுந்துவிடும் பல் தேசிய கொம்பனி விளம்பரங்கள் தரும் மாயையில் நமது உணவு, பழக்கவழக்கம் முதலான அனைத்து அம்சங்களும் கட்டமைப்பு சிதைந்து சின்னாபின்னமாகிவிடும் நிலை ஏற்பட்டுள்ளது. ஆனால் நாம் ஒட்டகத்தை தலைநீட்ட விட்ட கதையாக அல்லது ஆற்றுக்குள் கிடந்த கரடியை தூக்கிவிட அற்றுக்குள் இறங்கிய கதையாக நாம்விட்டாலும் அது எம்மை விரட்ட ஆரம்பித்து விட்டது.

எனவே என்றோ ஒருகாலத்தில் தொடங்கி காலங்காலமாகத் திகழ்ந்த "யாழ்ப்பாண உணவுப்பழக்க வழக்கம்" மக்களின் வாழ்வியலில் பல் பரிமாணங் களையும் மேம்படுத்தி காலத்திற்கு காலம் எழுந்தடித்த உணவுப் பழக்க வழக்க புயல்களிலிருந்து கொண்டும், கொடுத்தும் அவற்றுடன் அடிபட்டுப் போய்விடாது இன்றளவும் நிலைத்து நின்று காலத்திற்கேற்ற சிந்தனைகளால் புதுப்பொலிவு பெற்றுத் திகழும் யாழ்ப்பாண உணவுப்பழக்க வழக்கங்களை எம்மாலியன்றவரை பின்பற்றி நிற்கவும் பாதுகாத்து அடுத்த சந்ததியினருக்கு கையளிக்கும் கைங்கரியம் நம் அனைவருக்கும் உரியது. இவ்வாறே தலைமுறை தலைமுறையாகக் கையளித்து காலத் தாலழியாது காத்து நிற்போமாக.

உசாத்துணை நூல்கள்

பவளவிழா மலர்(2011) யா/இடைக்காடு மகாவித்தியாலயம்
உடல்நலவாழ்வும் மூலிகை மருத்துவமும் உணவுவகைகளும் 1997
பசுமை (2005)யா/ குட்டியப்புலம் அ.த.க.பாடசாலை

# திட்டமிடல் ஓர் அறிமுகம்

**கே. தவலோயினி**

முதலாம் வருடம்

யாழ் பல்கலைக் கழகம்

உலகளாவிய ரீதியில் அனைத்து மட்டத்தினராலும் உபயோகப் படுத்துகின்ற ஒரு விடயமாக திட்டமிடல் இன்று காணப்படுகின்றது. மனித நாகரிகங்கள் ஆரம்பபமாகிய யுகத்தி லிருந்து இன்றுவரை பல்வேறு படிமுறை வளர்ச்சிகளைக் கண்டு தனித்த ஒரு துறையாக விளங்குகின்றது.

திட்டமிடலானது பல்வேறு துறைகளையும் தன்னகத்தே உள்ளடக்கியிருப்பதனால் இதற்கென தனித்த ஒரு வரைவிலக்கணம் கூற முடியாதுள்ளது. எனினும் பல்துறைசார் அறிஞர்களான Mento work, Johnston Haiman, Koontz and donnel, Dickinson, Mourice Dobb, Lewis Lordwin F.Sweig, Prop Robbins போன்றோர் பல்வேறு வகையான வரைவிலக்கணங்களை திட்டமிடல் சார்பாக முன்வைத்துள்ளனர்.

திட்டமிடல் என்பதற்கு "எதிர்கால இலக்குகள் குறித்து அவற்றை அடைவதற்காக மேற்கொள்ளப்படும் ஒழுங்கு முறைப்படுத்தப்பட்ட செயற் பாடு" என்று பொதுவாக வரை விலக்கணம் சொல்வார்கள்.

இன்றைய நிறுவன, நிர்வாக மற்றும் அபிவிருத்திச் செயற்பாடுகளில் திட்டமிடல் தேவையானது மிகையாக உணரப்படுகின்றது. ஒரு திட்டமிடல் செய்முறையின் பூரணமான வெற்றியைத் தீர்மானிப்பவையாக பின்வரும் அம்சங்கள் கொள்ளப்படுகின்றன. தூரநோக்கம் (vission), இலட்சியநோக்கம் (mission), குறிக்கோள்(objective), இலக்கு (jarget/goal), தந்திரோபாயங்கள் (strategics),ஆற்றல் (capacity), புலமை சார்ந்தசூழல் (Interlectual Enveronment), கொள்கைகள் (policy), வழிகாட்டல் நியமங்கள் (guiding principles)என்பனவாகும். இவை அனைத்தினையும் உள்ளடக்கியதே ஒரு நிறைவான திட்டமிடல் செயற்பாடாகும்

இத்திட்டமிடல் ஆரம்ப காலங் களில் பல்வேறு கட்டங்களை தாண்டி வளர்ச்சி பெற்று வந்துள்ளது. மனித இனம் தோன்றிய காலத்தில் உட்கிடையாகவே திட்டமிடல் செயற்பாடு பின்பற்றப்பட்டது. 18ம் நூற்றாண்டின் பிற்பகுதியில் அதாவது கைத்தொழில் புரட்சியின் ஆரம்பகாலம் முதலாக இது ஒரு தனித் துறையாக பிரபல்யம் அடையத்தொடங்கியது.

திட்டமிடலின் ஆரம்பத்தில்

திட்டங்களினைச் செயற்படுத்துபவர்கள் முன்னுரிமை (priority) அடிப்படையில் மேல்மட்டத்திலிருந்து தாழ் வர்க்கம் நோக்கி திட்டங்களை நடைமுறைப் படுத்தினர்.இம்முறை top → bottom எனப்பட்டது. / இதனால் அடிநிலை மக்களை (grass root peoples) திட்டங்களின் பயன்கள் நன்மைகள் சென்றடையவில்லை. இதனை உணர்ந்த திட்டமிடலாளர்கள் பின்னர் அடிமட்டத்திலிருந்து திட்டங்களை அறிமுகம் செய்தனர். இதை bottom - up என அழைத்தனர்.

இவ்வாறே மக்களின் திட்டமிடல்களிலும் மாற்றங்கள் ஏற்பட்டன. ஆரம்ப கட்டத்தில் மக்களிற்காக மேல்நிலையினர் திட்ட மிட்டார்கள்.(planning for people) இரண்டாம் நிலையில் மக்களுடன் சேர்ந்து திட்டமிட்டார்கள். (planning with people )மூன்றாம் கட்டத்தில் மக்கள் தங்களிற்கு தாங்களே திட்டமி ட்டார்கள். (people plan for them selves) இவ்வாறாக திட்டமிடல் வளர்ச்சியை ஒரு சமூகரீதியாக நோக்கலாம்.

இவ்வாறாக மேற்கொள்ளப்படும் திட்டங்கள் பருமன் அடிப்படையில் பின்வருமாறு வகைப்படுத்தப்படுகின்றது. பாண் திட்டங்கள் (Macro plans) இடை நிலை திட்டங்கள்(Meso plan) நுண் திட்டங்கள் (Micro plan) சிறு குறு திட்டங்கள் (Mini plan). Macro plan என்பது சர்வதேச ரீதியில், தேசிய ரீதியில் மேற்கொள்ளப்படும் திட்டங்களை (வறுமை ஒழிப்பு, சேரிகளின் நீக்கம், பொருளாதார ஸ்திரத்தன்மை) குறிக்கும். Mini plan ஒரு சிறிய அலகினை விருத்தி செய்வதை நோக்காகக் கொண்டவை. உதாரணமாக அரசினால் "திவி நகும" என்ற அபிவிருத்தி திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படும் 1000000 குடும்பங்களின் பொருளா தாரத்தை விருத்தி செய்யும் நோக்கில் மேற்கொள்ளப்பட்ட "மனைப் பொருளியல் அபிவிருத்தித் திட்டத்தை" குறிப்பிடலாம். இதன் மூலம் விவசாயம், கால் நடைவளர்ப்பு, மீன்பிடி மற்றும் சிறுகைத்தொழில் நடவடிக்கைகள் என்பனவும் ஊக்குவிக்கப்படவுள்ளன.

பொதுவாக உலக நாடுகளில் திட்டமிடல் செயன்முறையானது பின்வரும் இரண்டு அடிப்படைகளில் இடம்பெறுகின்றன.

1. நிர்வாக பிரதேச அடிப்படையிலான பிரதேசங்களில்
2. நோக்கு/ செயற்பாட்டு அடிப்படையிலான பிரதேசங்கள்

நிர்வாக பிரிவு அடிபபடையிலான பிரதேசங்கள் (HIERACHY OF PLANNING UNITS BY ADMINISTRATIVE) என்பது அரசியல் ரீதியாக அங்கீகரிக்கபட்ட நிர்வாக எல்லைகளை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்படும் திட்டங்கள். இலங்கையை எடுத்துக் கொண்டால் National plan, Sub National plan, Provincanal plan, Distric

plan,Divisonal plan, Grama Niladhari plan, Neighbour hood plan என்பனவற்றை இவ்வாறான தன்மையினதாகக் கொள்ளலாம்.

நோக்க/செயற்பாட்டு அடிப்படையிலான திட்டமிடல் பிரதேசங்கள் (HIERACHY OF FUNCTIONAL AREA) எனும் போது புவியியல் காரணிகளின் செல்வாக்கு காணப்படும். அதாவது குறிப்பிட்ட ஒரு தொகுதியினரை அவர்களின் தேவையினை இலக்காக் கொண்ட திட்டங்களாகும். இங்கு நிர்வாக எல்லையின் கட்டுப்பாடு காணப்படாது.

பொதுவாக திட்டமிடல் செயற்பாடுகளானவை பல்வேறு வகையில் காணப்படும். இவை குறித்த திட்டமிடலின் இலக்கினை குறிப்பதாக காணப்படும். இதற்கு உதாரணங்களாக Education planning, financial planning, Land use planning, Sectoral planning, Spatial planning, Strategic planning, Rolling planning, Project planning, City planning, National Security planning, Income stability planning, Physical planning, Democracy planning, Totalitarian planning,Short rang planning, Long rang planning, Comprehensive planning, Indicative planning, Imperative planning, என பல வகைகளில் காணப்படுகின்றன.

இவ்வாறான திட்டமிடல் செயற்பாடுகள் கால ரீதியான ஒரு எல்லையை கொண்டதாகவும் காணப்படுகின்றது. 10 Years plan, 5 Years plan, 1 Year plan என பிரதானமான வகைகளாக காணப்படினும் இந்த கால எல்லைகள் Days Time என்ற அளவிலும் கணிப்பிடப்படும். உதாரணமாக 2004ம் ஆண்டு காலப்பரப்பில் ரணில் விக்கிரமசிங்க அவர்கள் பிரதமராகப் பதவியேற்றவுடன் 100 days plan ஒன்றை அமுல்படுத்தினார். இது பல்துறை சார்விருத்தியை நோக்காக கொண்டது.

1917-1987 வரை 70 ஆண்டுகள் காலப்பரப்பில் பழைய சோவியத் யூனியனில் 55 பிரதேசங்களாக பிரித்து 5 ஆண்டுத் திட்டங்கள் நடைமுறைப் படுத்தப்பட்டன. இதே போன்று இந்தியாவில் 1951ம் ஆண்டிலிருந்து இன்று வரை 11 ஐந்தாண்டுத் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டன. இறுதியாக ஐந்தாண்டுத் திட்டம் 2007 - 2012 வரையான காலப்பரப்பினை உள்ளடக்கியதாகும். இவ்வாறான திட்டங்களின் நோக்கங்கள் வறுமை ஒழிப்பு, கைத்தொழில் அபிவிருத்தி (இரும்பு உருக்கு, தகவல் தொழில்நுட்ப வளர்ச்சி, விவசாய வேளானண்மை விருத்தி) என பலவாறு காணப்பட்டன.

திட்டமிடலில் " Project cycle" எனும் விடயம் முக்கியமானது. இதில் செயற்திட்டமானது பின்வரும் பண்புகளைக் கொண்டு காணப்படும் என

Rondinells எனும் அறிஞர் குறிப்பிடுகின்றார். அவையாவன திட்டமிடல் பிரதேசத்தை அடையாளம் காணல் (Indentification) திட்டச் செயற்பாடுகளைத் தயாரித்தல் (preparation) திட்டமிடுதல் (Planning ) திட்டமிடலின் தாக்கம் பற்றிய ஆய்வு (appraisal) தெரிவு செய்தல் (Selection) ஒழுங்கமைத்தல் (organization) அமுல்படுத்தல் (Implementation) கண்காணித்தல் (monitoring) நிறைவுத் தன்மை ( completion) செயற்பட வைத்தல் (Activation) மதிப்பீட்டு ஆய்வு (Evaluation ) தொடர்ச்சியான செயற்பாடு (Follow -up) என்பனவாகும். மேற்கூறிய 12 பண்புகளையும் உள்ளடக்கியே ஒரு செயற்திட்டம் காணப்படுமெனக் கூறுகின்றார்.

திட்டமிடல் செய்முறை மூலமாக பல்வேறு நன்மைகள் அனுபவிக்கப் படுகின்றன. அவற்றில் பின்வருவன முக்கியமாகக் காணப்படுகின்றன.

1.பொருளாதார ரீதியான ஸ்திரத்தன்மை பேணுவதுடன் தொடர்ச்சியானவளர்ச்சிக்கும் துணை புரிகின்றது.

Eg: Monetary police full employment Internotional trade policy

2.மக்களின் பொதுத் தேவைகளைப் பூர்த்தி செய்ய முடிதல்

Eg: National Health policy

Human resources Develópement

National shelter plan

3. தனியார் துறையினரால் கவனத்தில் கொள்ளளப்படாத மக்களின் தேவைகளையும், சேவை களையும் பெற்றுக்கொடுத்தல்.

Eg: புகையிரதப்போக்குவரத்து, நெடுஞ்சாலை விருத்திகள், விமானத் துறை, நீர் மின்திட்டங்கள், நகரவிருத்தி செயற்பாடுகள்.

(அம்பாந்தோட்டை துறைமுக அபிவிருத்தி, வீரவில சர்வதேச விமான நிலையம், $A_4$ பாதைவிருத்தி நடவடிக்கை, டெக்கிற்கான புகையிரத போக்குவரத்து மீள்நிர்மாணிப்பு)

4. தொழில்துறையினர், விவசாயிகள், மற்றும் மாற்று வலுவுள்ளோர்களிற்கான நலம் சார் திட்டங்கள்.

Eg: ஓய்வூதியக் கொடுப்பனவுத் திட்டங்கள்

5. வருமானப்பங்கீடு (Incomstability) சமூகசமநிலை(Social equality)

என்பனவற்றை பேணும் வகையிலான திட்டங்கள்.

Eg: ஒருங்கிணைந்த கிராமிய அபிவிருத்தித் திட்டங்கள்.

6. சந்தை செயற்பாடுகளினால் பாதிக்கப்பட்டோரின் பாதுகாப்பு நலன்பேணும் திட்டங்கள்.Eg: Pre market Economy

7. சூழலினை பாதுகாக்கும் திட்டங்கள்

NECCD - வடக்குகிழக்குக் கரையோரத்திட்டம்.

Forest Development - மீள்காடாக்கம்

8. சமுதாயத்தில் வருமானத்தை மீளப்பெறலிற்கான திட்டங்கள்,

ஊக்குவிப்பு திட்டங்கள்.

9. நிலவளம் பேணல்.அதன் வினைத்திறனான பயன்பாட்டை பேணும் வகையிலான திட்டங்கள்.

Eg: Land use planning

10. சமூகஅரசியல புறந்தள்ளல் மூலம் பாதிக்கப்பட்டோர் (social/ political Enclusion)களை பாதுகாக்கும். அவர்களிற்கு சமூக நியாயங்களை பெற்றுக் கொடுக்கும வகையிலான திட்டங்கள்.

இவ்வாறு பன்முகத் தன்மை கொண்ட திட்டமிடலின் பயன்பாடுகள் காணப்படினும் சில குறைபாடுகளும் இருக்கின்றன. அதாவது திட்டமிடல் தீர்மானித்தல் செயன்முறைகளிற்கு சரிநுட்பமான தகவல்கள் என்பவை அடிப்படை அம்சமாகும். இவற்றைப் பெறுவது சிரமமாக உள்ளதால் திட்டமிடல் செயற்பாட்டில் ஒரு பாதகமான விளைவு தோன்றும். நீண்டகாலத் திட்டங்களை அறிமுகம் செய்யும்போது அரசியல் ரீதியாக ஏற்படும் மாற்றங்கள்/இயற்கை அனர்த்தங்கள் /யுத்தசூழ்நிலைகள் நிலவும் போது மாற்றப்படும் நிலைக்குத் தள்ளப்படும். இவ்வாறு ஒரு சில பிரச்சினைகள் இனம்காணப்பட்டுள்ளன.

எவ்வாறிருப்பினும் ஒரு நீண்ட செயற்பாட்டினை மேற்கொள்ளும்போது அதன் இலக்கு அடைவினை / வெற்றியை தீர்மானிப்பவையாக திட்டமிடலே காணப்படுகின்றது. இன்று திட்டமிடலானது புவியியல், பொருளியல், அரசறிவியல், சமூகவியல், உளவியல் என பலதுறைகளையும் உள்ளடக்கியதாகவும் Man weber, Tonnies, karlmark, மால்தூஷ் போன்ற பல அறிஞர்களின பல கோட்பாடு களைத் தன்னுள் வாங்கியதாகவும் ஒரு பெரிய துறையாக இன்று வளர்ச்சி கண்டுவருகின்றது. சிறந்த திட்டமிடல் முகாமைத்துவம் கொண்ட நாடுகள் (கனடா, யப்பான், இந்தியா போன்றன) வளர்ச்சிப்படிகளை எட்டியமைக்கு திட்டமிடலின் திறமையே காரணம் எனலாம். (இவ்வாறாக திட்டமிடல் பற்றிய ஒரு பொதுவான பார்வையில் அதன் பிரிவுகள், மட்டங்கள், செயற்பாடுகள், வரைவிலக்கணம், வரையறை, கோட்பாடுகள், படிமுறைகள் என்பவற்றை தெளிவாகவும் விரிவாகவும் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

Referance books:


1.திட்டமிடல் - 2006 - 2007 இதழ் 01 யாழ்பல்கலைக்கழகம்

2.வாழ்வியல் களஞ்சியம்

3.முகாமைத்துவம் Prof. தேவராஜா

4.மானிடப்புவியியல் கலாநிதி குணராசா.கமலம் பதிப்பகம் யாழ்ப்பாணம்

# காலநிலை மாற்றம்
# Climate change

**ஜி. நிவாஸ்**
*நீர்வேலி*

அறிமுகம்:

மனித வாழ்கையின் ஒவ்வொரு விடயங்களும் காலநிலைக்காரணிகளின் செல்வாக்கிற்கு உட்பட்டதாகவே அமைகின்றன. மனிதனின் தோற்றம், நிறம், உடலமைப்பு, மொழி, பண்பாடு, உணவு, உடை அவனது பொருளாதார நடவடிக்கைகள், சமூக, அரசியல் நடவடிக்கைகள் என ஒவ்வொன்றிலும் வானிலை மூலக்கூறுகள் செல்வாக்குச் செலுத்துகின்றன. வானிலை மூலக்கூறுகளான மழைவீழ்ச்சி, வெப்பநிலை, வளிமண்டலஅமுக்கம், ஈரப்பதன், காற்று, சூரியக்கதிர் வீசல், ஆவியாக்கம், ஆவியுயிர்ப்பு போன்றன மனிதனின் அன்றாட வாழ்க்கையில் ஒவ்வொரு பகுதிகளிலும் செல்வாக்குச் செலுத்துகின்றன.

புவியில் மனிதன் மட்டுமன்றி ஏனைய உயிரினங்களினதும் இருப்பினை தீர்மானித்த முக்கியமான காரணிகளில் ஒன்றான காலநிலை மாற்றமடைந்து செல்வது அண்மைக்காலத்தில் உலக நாடுகளை விழிப்படைய வைத்துள்ளது. ஏனெனில் இதனுடைய விளைவுகள் மிகக் கடுமையாக இருக்கும் என எதிர்வு கூறப்படுவதனால் உலகின் பெரும்பாலான நாடுகள் அக்கறை காட்டி வருகின்றன. தீவிரவாதம் பயங்கரவாதத்திற்கு அடுத்து உலக நாடுகள் எல்லாம் அக்கறை காட்டி வருகின்றன. ஓரணியில் நின்று எதிர்க்கும் விடயமாக காலநிலை மாற்றம் அமைந்துள்ளது. எனலாம்

காலநிலைமாற்றத்துக்கான வரைவிலக்கணம்

காலநிலை மாற்றம் என்பது வானிலைமூலக்கூறுகளான மழைவீழ்ச்சி, வெப்பநிலை, ஈரப்பதன், அமுக்கம், காற்று, ஆவியாக்கம், ஆவியீர்ப்பு, சூரியக்கதிர் வீசல் என்பவற்றில் ஏற்படுகின்ற நீண்டகாலமாற்றம் காலநிலை மாற்றமாகும். இவற்றின் குறுகிய கால மாற்றம் வானிலை மாற்றம் ஆகும். காலநிலை மாற்றத்திற்கு நீண்டகாலம் எடுக்கும். ஒரு பிரதேசத்தில் காலநிலை மாற்றம் ஏற்பட்டுள்ளதா என்பதனை அறிவதற்கு ஆகக்குறைந்தது 30 ஆண்டுகாலத்தரவுகள் அவசியம். ஏனெனில் 30 ஆண்டுகாலமாக பெறப்பட்ட வானிலைத்தரவுகளை ஆராய்வு செய்வதன் மூலமே காலநிலை மாற்றத்தினையோ காலநிலைப்போக்குகளையோ அறிந்து கொள்ளமுடியும்.

புவி தோன்றிய காலத்திலிருந்தே காலநிலை மாற்றம் ஏற்பட்டு வந்துள்ளது.

புவிச்சரித காலங்களல் மிகப்பழைய காலமாகிய பிறிக்கேம்பிறியன் காலத்திலிருந்து அதன் பின் வந்த ஒவ்வொரு காலப்பகுதிகளிலும் காலநிலை மாற்றம் ஏற்பட்டு வந்துள்ளதை பனிப்பாறைகளை துளையிட்டு ஆய்வு செய்ததன் மூலமாகவும் காபன் தரவுகள் மூலமும் அறியப்பட்டுள்ளது. எனவே காலநிலை மாற்றம் என்பது புவி தோன்றிய காலத்திலிருந்தே ஏற்பட்டுவந்துள்ளது.

ஆனால் இக் காலநிலைமாற்றம் ஒவ்வொன்றுக்கும் முன்பு எடுத்துக்கொண்ட காலம் என்பது நீண்டதாகக் காணப்பட்டது. புவியின் வரலாற்றில் ஒவ்வொரு காலநிலை மாற்றத்திற்கும் ஆயிரக்கணக்கான வருடங்கள் எடுத்துள்ளது.

ஆனால் அண்மைக்காலத்தில் காலநிலைமாற்றங்களுக்கு மிகக்குறுகிய காலமே எடுத்துள்ளது. எடுத்துவருகின்றது. சாதாரணமாக புவியின் வரலாற்றில் புவியின் சராசரிவெப்பநிலை $01^0C$ அதிகரிக்க கிட்டத்தட்ட 900 வருடங்கள் எடுத்துள்ளது. தற்போது $01^0C$ அதிகரிக்க வெறுமனே 40 ஆண்டுகள் எடுக்கின்றது. இது வழமையான ஒன்று அல்ல. புவியின் காலநிலை வரலாற்றில் அசாதாரணமானது. இந்நிலை தொடருமானால் புவியின் அதிகரித்த வெப்பநிலை காரணமாக உயிரின இருப்பு என்பது கேள்விக்குறியாக மாறிவிடும். இது போலவே காலநிலையின் ஒவ்வொரு கூறுகளும் மாற்றமடைந்து புவியின் காலநிலையின் சமநிலையை குழப்பிவிடும். இதனால் காலநிலை மாற்றம் என்பது புவியியல் உயிரின் வாழ்வை அச்சுறுத்தும் ஒரு முக்கியமான விடயமாக மாறியுள்ளது.

காலநிலை மாற்றக் காரணிகள்

காலநிலை மாற்றத்தினைப் பௌதீக, சமூக, பொருளாதார, அரசியல், காரணிகள் தூண்டி உள்ளன. அந்தவகையில் பின்வரும் காரணிகள் முக்கியத்துவம் பெற்றனவாகக் காணப்படுகின்றன.

1. பச்சை வீட்டு வாயுக்களின் அதிகரிப்பு

பச்சைவீட்டு வாயுக்களான காபனீரொட்சைட் ($CO_2$) மெதென்($CH_4$) கந்தகவீரொட்சைட்($SO_2$) நீராவி($H_2O$) போன்றவற்றின் அதிகரிப்பே காலநிலை மாற்றத்துக்கான பிரதான காரணியாக காணப்படுகின்றது. 1750இல் ஏற்பட்ட கைத்தொழில் புரட்சியை அடுத்து இவ்வாயுக்களின் வெளியீடு அதிகமானதாக காணப்படுகின்றது.
பச்சை வீட்டு வாயுக்கள் கைத்தொழில் புரட்சிக்கு பின்னரே அதிக அளவில் அதிகரித்துள்ளன. இதனை பின்வரும் அட்டவணை குறிப்பிடுகின்றது.

| வாயு | கைத்தொழில் புரட்சிக்கு முன் | கைத்தொழில் புரட்சிக்கு பின் | அதிகரிப்பு1750 இன்றுவரை |
|---|---|---|---|
| காபனீரொட்சைட் | 280ppm | 387ppm | 104ppm |
| மெதென் | 700ppb | 1745ppb | 1045ppb |
| கந்தகவீரொட்சைட் | 270ppb | 314ppb | 44ppb |
| குளோரோ புளோரோ காபன் | 0 | 533ppt | 533ppt |

ppm-parts per million ppb-parts per billion ppt-parts per trillion

பச்சைவீட்டுவாயுக்களைப் பொறுத்தவரை ஒவ்வொரு துறைகளும் வேறுபட்ட அளவில் பச்சை வீட்டு வாயுக்களை வெளியிடுகின்றன. அந்த வகையில் ஒவ்வொரு துறைசார்ந்த ரீதியிலும் வெளியேற்றப்படும் பச்சை வீட்டு வாயுக்களின் அளவினை பின்வரும் அட்டவணை காட்டுகின்றது.

| துறைகள் | வீதம்% |
|---|---|
| கைத்தொழில் நடவடிக்கைகள் | 16.8% |
| வலு நிலையங்கள் | 21.3% |
| போக்குவரத்து எரிபொருள் | 14.0% |
| விவசாய உற்பத்தி | 12.5% |
| உயிர்சுவட்டு எரிபொருட்களின் தரப்படுத்தல் மற்றும் விநியோகித்தல் | 11.3% |
| நிலப்பண்பாடு மற்றும் உயர்திணிவு எரிவு | 10.0% |
| கழிவகற்றல் நடவடிக்கை | 3.4% |
| வதிவிட வர்த்தக மற்றும் ஏனைய மூலங்கள் | 10.3% |

ஒவ்வொரு துறை சார்ந்த ரீதியாகவும் பச்சைவீட்டு வாயுக்களின் வெளியேற்றம் இவ்வாறுகாணப்பட நாடுகளைப் பொறுத்தவரையில் விருத்தியடைந்த விருத்தியடைந்துவரும் நாடுகளிடையில் அவை வெளியிடுகின்ற பச்சை வீட்டு வாயுக்களின் அளவில் வேறுபாடுகள் காணப்படுகின்றன.

1995ஆண்டு பச்சைவீட்டு வாயுக்களைப் பொறுத்தவரை அபிவிருத்தியடைந்த நாடுகள் 73% யும் , அபிவிருத்தியடைந்துவரும் நாடுகள் 27% யும் வெளியிட்டுள்ளன. விருத்தியடைந்த நாடுகள் அமெரிக்கா 23% யும் விருத்தியடைந்துவரும் நாடுகளில் சீனா 14% யும் வெளியிட்டுள்ளன. ஆனால் 2025ல் ஆண்டில் விருத்தியடைந்த நாடுகள் 50% யும் அபிவிருத்தியடைந்துவரும்

நாடுகள்50% யும் வெளியிடும் எனவும் இதில் அமெரிக்கா 17% மும் சீனா 15% மும் வெளியிடும் எனவும் எதிர்வு கூறப்பட்டுள்ளது.

பச்சைவீட்டு வாயுக்கள் வெளியயேற்றத்துக்கான காரணிகளாக
* உயிர்ச்சுவட்டு எரிபொருள்பாவனை
* உரப்பாவனை
* அலுமினிய, சீமெந்து தயாரிப்பு
* கழிவகற்றல் நடவடிக்கை
* கால்நடைவளர்ப்பு
* தொழிற்சாலைக் கழிவுகள்

போன்றன காணப்படுகின்றன. இப் பச்சைவீட்டு வாயுக்களின் அதிகரித்த வெளியேற்றமானது வளிமண்டலத்தின் பச்சைவீட்டு வாயுக்களின் அளவை அதிகரித்து விடுகின்றன. பச்சைவீட்டு வாயுக்கள் வெப்பத்தை உறிஞ்சி வைத்திருக்கும் ஆற்றல் மிக்கவையாகக் காணப்படுகின்றன. இதனால் வாயுக்கள் அதிகரிக்க அதிகரிக்க அவை உறிஞ்சி வைத்திருக்கும் வெப்பத்தின் அளவும் அதிகரிக்கின்றது. இது வளிமண்டல வெப்பநிலையின் அதிகரிப்புக்கு அடிப்படையாக அமைகின்றது. வளிமண்டல வெப்பநிலை அதிகரிப்பு புவியின் வெப்பநிலை அதிகரிப்பையும் காலநிலை மாற்றத்தையும் ஏற்படுத்துகின்றது. எனவே காலநிலை மாற்றத்துக்கான பிரதான காரணியாக பச்சைவீட்டு வாயுக்களின் அதிகரிப்பினைக் குறிப்பிடலாம்.

2. எரிமலை வெடிப்பு

காலநிலை மாற்றத்துக்கான இன்னொரு காரணியாக எரிமலை வெடிப்பினைக் குறிப்பிடலாம். எரிமலை வெடிப்பின் போது நைதரசன், காகனீரொட்சைட், கந்தகவீரொட்சைட் என்பன வெளியிடப்படுகின்றன. எரிமலை வெடிப்பின்போது வெளியிடப்படும் பச்சைவீட்டு வாயுக்கள் வளிமண்டல வாயுக்களின் கூட்டில் பாதிப்பினை ஏற்படுத்துகின்றன. இது காலநிலை மாற்றத்தினை தூண்டுகின்றது. எரிமலை வெடிப்பின் போது உடனடியாகவே எரிமலை வெடித்த பிரதேசத்தின் வானிலை நிலைமைகள் மாற்றமடைகின்றன. உதாரணமாக1912ம் ஆண்டு நொவருப்டா எரிமலை வெடித்தபோதும் 1991ல் மௌன்ற் பினரூபா எரிமலை வெடிப்பின்போதும் அப்பிரதேச வானிலை நிலமைகள் மாற்றமடைந்தன. எரிமலை வெடிப்பு ஏற்பட்டு 6 மணித்தியாலங்கள் வரை வெப்பநிலை மிக உயர்வாக காணப்பட்டதுடன் பின்னர் 13 நாட்கள் தொடர்ச்சியான கனமழை கிடைத்தது.இதன் பின்னர் இப்பிரதேசங்களின் சராசரி வெப்பநிலையில் 1.4°C அதிகரிப்பு அறியப்பட்டது.

3. மேற்பரப்பு வெப்பநிலை அதிகரிப்பு

காலநிலை மாற்றத்திற்கான இன்னொரு பிரதான காரணியாக சமுத்திர மேற்பரப்பு வெப்பநிலை அதிகரிப்பினைக் குறிப்பிடலாம். 1925ம் ஆண்டுடன் ஒப்பிடும்போது உலகின் பல சமுத்திரங்களின் மேற்பரப்பு வெப்பநிலை மாற்றமடைந்து வருகின்றது. அத்திலாந்திக் சமுத்திரத்தின் மேற்பரப்பு வெப்பநிலை 1.4ºC இனாலும் இந்து சமுத்திரத்தின் மேற்பரப்பு வெப்பநிலை1.3ºC இனாலும பசுபிக்சமுத்திரத்தின் மேற்பரப்பு வெப்பநிலை 1.25ºC இனாலும் அதிகரித்துள்ளதாக அறியப்பட்டுள்ளது.

இத்தகைய சமுத்திர மேற்பரப்பு வெப்பநிலை மாற்றம் காரணமாக

1. சமுத்திர நீரோட்டங்களில் மாற்றம் ஏற்படலாம். குறிப்பாக இவற்றின் நகர்ச்சி திசை, வெப்ப, குளிர் நீரோட்ட மாற்றம் ஏற்படலாம்.

2. சமுத்திர வெப்பநிலை அதிகரிப்பினால் அவற்றின் அடர்த்தி அதிகரிக்கும்.

3. அதிகரிக்கும் வெப்பம் காரணமாக ஆவியாக்கம் அதிகளவில் ஏற்பட்டு சமுத்திரங்களின் உவர்ச் செறிவு அதிகரிக்கும்.

4. அதிகரித்துள்ள சமுத்திர மேற்பரப்பு வெப்பம் காரணமாக சமுத்திர உயிர்ச் சூழலில் மாற்றங்கள் ஏற்படலாம்.

5. ஓரிடக் காற்றுக்களில் மாற்றங்கள் ஏற்படலாம். குறிப்பாக ஓரிடக் காற்றுக்களில் முக்கியமானவையான கடல், தரைக் காற்றுக்களின் செயற்பாட்டிற்கும், நகர்ச்சிக்கும் அடிப்படைக்காரணியான வெப்பநிலை வேறுபாட்டில் மாற்றங்கள் ஏற்பட்டு கடற்தரைக் காற்றுக்களில் மாற்றம் ஏற்படும்.

4. சூரியக்கதிர் வீசலில் காணப்படுகின்ற வேறுபாடுகள்

காலநிலை மாற்றத்துக்கான இன்னொரு பிரதான காரணியாக காணப்படுவது சூரியக்கதிர் வீசலில் காணப்படுகின்ற வேறுபாடாகும். புவியின் ஒரேயொரு சக்தி மூலாதாரம் சூரியன் ஆகும். சூரியனில் இருந்து பூமிக்கு

1. அகச்சிவப்புக் கதிர்கள்
2. புறஊதாக்கதிர்கள்
3. கட்புலனாகும் கதிர்கள்

என 03வகையான கதிர் வீச்சுக்கள் இடம் பெறுகின்றது. இதில் அகச்சிவப்புகதிர்களையும், புற ஊதாக்கதிர்களையும் பூமி பெறும் அளவு மிகக்குறைவாகும்.இவை பூமிக்கு அதிகஅளவில் வந்தால் பூமியின் வெப்பம்

பல மடங்கு அதிகரிக்கும். இவற்றைத் தடுத்து வரவிடாது செய்வதில் ஓசோன் படை முக்கியமானது. ஓசோன்படையில் ஏற்பட்டுள்ள துளை காரணமாக இவை சிறியளவில் பூமிக்கு வருகின்றன. இதனால் பூமியில் பெற்ற வெயிலில் மாற்றங்கள் ஏற்படுகின்றன. பூமிக்கு சூரியன் கதிர்வீச வரும்போது

1. உறிஞ்சல்
2. சிதறல்
3. தெறித்தல்

என்ற மூன்று வகையான செயற்பாட்டிற்கு உள்ளாகின்றன. பூமி தனக்கு தேவையான அளவை எடுத்துக் கொண்டு மிகுதியை வெளிக்கு திருப்பி அனுப்புகின்றது. ஆனால் சூரியனில் இருந்து பூமிக்குள் வரும் குற்றலைக் கதிர்வீச்சின் ஒரு பகுதியும் அகச்சிவப்புக்கதிர்கள் புற ஊதாக்கதிர்களும் பூமியை விட்டு வெளியேறாமல் (புவியின் எல்லையை)இருந்து புவியை வெப்பமூட்டுகின்றன. இதனை விட புவியின் சில பொருட்கள் குறிப்பாக துருவப்பகுதியில் உள்ள பனிக்கட்டிகள் இப்புற ஊதாக்கதிர்களையும், அகச்சிவப்புக்கதிர்களையும் சிறிய அளவில்உறிஞ்சி வைத்துள்ளன. அகச்சிவப்புக் கதிர்களை உறிஞ்சி வைத்திருக்கும் சில பொருட்கள் தமது தேவைக்கு மேலதிகமானவகையில் அதிகஅளவான வெப்பநிலையைத் தம்முள் உறிஞ்சி வைத்து இருப்பதனால் புவியின் வெப்பநிலை அதிகரித்து காலநிலை மாற்றம் ஏற்படுகின்றது.

05

எல்நினோ லாநினோ

காலநிலை மாற்றத்தை ஏற்படுத்துகின்ற இன்னொரு காரணியாக எல்லநினோ லாநினோ செயற்பாடுகளையும் குறிப்பிடலாம். எல்லினோ என்பது சமுத்திர பகுதிகளிலும் கண்டப்பகுதிகளிலும் ஏற்படுகின்ற வழமைக்கு மாறான வெப்பநிலை அதிகரிப்பையும் லாநினோ என்பது சமுத்திர பகுதிகளிலும் கண்டப்பகுதிகளிலும் ஏற்படுகின்ற வழமைக்கு மாறான குளிரையும் குறிக்கும். இத்தகைய சடுதியான வெப்ப குளிர் மாற்றங்கள் காலநிலை மாற்றத்தினைத் தூண்டுகின்றன எனக்கூறப்படுகின்றது.

06 காடழிப்பு

காலநிலை மாற்றத்துக்கான இன்னொரு பிரதான காரணி காடழிப்பாகும். தாவரங்கள் புவியின் வெப்பநிலையைச் சமநிலையில் பேணுவதில் முதன்மை வகிக்கின்றன. இவை காபனீரொட்சைட்டினை உள்ளெடுத்து ஒட்சிசனை வெளியிட்டு வளிமண்டல வாயுக்களின் கூட்டுச்சராசரி நிலையைப் பேணுவதிலும், வெப்பநிலையை ஒரு கட்டுப்பாட்டில் வைத்திருப்பதிலும் முதன்மை வகிக்கின்றன. 1950ம் ஆண்டுடன் ஒப்பிடும்போது 2008 ஆம் ஆண்டு உலகக்காடுகளில் 39%

மானவையும் அயனமண்டலக்காடுகளில் 60% மானவையும் அழிந்துள்ளதாக UNEPதெரிவித்ததுள்ளது. 'உலகின் நுரையீரல்' என வர்ணிக்கப்படும் அமேசன் காடுகள் 2000ம் ஆண்டிலிருந்து 2008ம் ஆண்டுக்கிடைப்பட்ட 8 ஆண்டுகளில் 4%அழிக்கப்பட்டுள்ளன. இத்தகைய காடழிப்புச் செயற்பாடுகள் புவியின் பசுமைப் போர்வையினைக் குறைப்பதுடன் புவி வெப்பமடைதல் செயற்பாட்டிற்கும் அடிப்படையாக உள்ளன.

6.உயிர்ச் சுவட்டு எரிபொருட்களின் பாவனை

உயிர்ச்சுவட்டு எரிபொருட்பாவனையும் காலநிலை மாற்றத்தினைத் தூண்டுகின்றது. உயிர்ச்சுவட்டு எரிபொருட்களான பெற்றோலியம், நிலக்கரி, இயற்கைவாயு என்பனவற்றின் எரிதலின் போது காபனீரொட்சைட்டும் மெதனும் வெளிவிடப்படுகின்றது. இவ்வாயுக்கள் வளிமண்டல வெப்பநிலையை அதிகரித்து புவி வெப்பமடைதலை ஊக்குவிக்கின்றன. இவற்றை விட கால்நடைவளர்ப்பு , சீமெந்து தயாரிப்பு, தொழிற்சாலைக்கழிவுகளின் தன்னிச்சையான வெளியேற்றம், நைதரசன் அணுகுண்டுப்பரிசோதனைகள், விண்வெளிவிபத்துக்கள் போன்றனவும் காலநிலை மாற்றத்தினைத் தூண்டியுள்ளன. கால்நடைவளர்ப்பின் காரணமாக 18% மான பச்சை வீட்டு வாயுக்கள் (மெதேன், நைதரசன் ஒக்சைட்) வெளியிடப்படுவதாக ஐ.நா.சுற்றுச்சூழல் அமைப்புக்குறிப்பிடப்டுகின்றது. மேற்படிக் காரணிகள் காலநிலை மாற்றத்தினை நேரடியாகவோ மறைமுகமாகவோ ஊக்குவிக்கின்றன எனலாம்.

காலநிலை மாற்றப் பாதிப்புக்கள்

உலகில் ஏற்படுகின்ற காலநிலை மாற்றம் காரணமாகப் பல்வேறு பாதிப்புக்கள் ஏற்படுகின்றன. இப்பாதிப்புக்கள் சிலவற்றை தற்போது உலகம் உணர்ந்துள்ளது. சிலவற்றை உணரவுள்ளது. இப்பாதிப்புக்கள் அதிகரிக்கும் பட்டசத்தில் இப் பூமியில் மனிதனின் வாழ்கை கேள்விக்குரிய தாகிவிடும்.இக்காலநிலை மாற்றப் பாதிப்புக்களை மூன்று பிரதான வகைகளினூடகப் பார்க்கலாம்.

1. பௌதிக ரீதியான பாதிப்புக்கள்
2. பொருளாதாரப் பாதிப்புக்கள்
3. சமூகப் பாதிப்புக்கள் எனப் பிரிக்கலாம்

## பௌதிக ரீதியான பாதிப்புக்கள்

1. வெப்பநிலை உயர்வடைதல்

கால நிலை மாற்றத்தினால் ஏற்படுகின்ற மிகமுக்கியமான பாதிப்பாக வெப்பநிலை உயர்வினைக்கருதலாம்.1950 ம் ஆண்டுடன் ஒப்பிட்டால் 2008ம் ஆண்டு உலகின்வெப்பநிலை 2.1°C யினால் அதிகரித்துள்ளதாக ஐ.பி.சி.சி குறிப்பிடுகின்றது.

1975 உடன் ஒப்பிடும்போது 1.60C அதிகரிததுள்ளது. ஆசியாவின் வெப்பநிலை 2040 ஆண்டு 3.40 Cயினாலு் 2100ம் ஆண்டு 5.30C யினாலும் அதிகரிக்குமென எதிர்வுகூறப்பட்டுள்ளது. பூமியின்வெப்பநிலை 1950உடன் ஒப்பிடும் போது 2.10C யினால் அதிகரிததென்பது சாதாரணவிடயமல்ல. ஏனெனில் புவியின் வரலாற்றில் அதன் வெப்பநிலை 10Cயினால் அதிகரிக்க கிட்டத்தட்ட 1000 வருடங்கள் எடுத்துள்ளது. ஆனால் தற்போது 58ஆண்டுகளில் 2.10C யினால் அதிகரித்துள்ளது. இவ்வாறு வெப்பநிலை அதிகரித்துக்கொண்டு சென்றால் மனிதனின் வாழ்கையினைத் தீர்மானிக்கும் பொருத்தமான காலநிலை என்பது மாறிவிடும். மனிதனுக்கு இது பல அசௌகரியங்களை வழங்கும். மனிதன் வெளியில்நடமாடமுடியாத சூழ்நிலை ஏற்படும். விவசாயநடவடிக்கைகளும், கடற்றொழில், விலங்குவளர்ப்பு என்பனவும் பாதிக்கப்படும்.

2. கடல் நீர்மட்ட உயர்வு

காலநிலை மாற்றத்தினால் கடல்மட்ட உயர்வு ஏற்படும். அதிகரிக்கும் வெப்பநிலையாலும் துருவப்பனிக்கட்டி உருகுவதனாலும் பனிச்சிகரங்கள் உருகுவதனாலும் சில குளிர்ந்த சமுத்திரங்கள் வெபபமடைந்து நீர் விரிவடைவதனாலும் கடல்மட்ட உயர்வு ஏற்படும். உலகின் பலகோடி மக்கள் இதனால் பாதிக்கப்படுவார்கள். உலகின் 10 கோடி மமக்களுக்கு மேற்பட்டவர்கள் கடல்மட்டத்திலிருந்து மூன்று அடி உயரத்திற்குள்ளேயே வாழுகின்றனர்.

உலகின் கடல்மட்டம்:

1. கடல்மட்டம் 1 அடி உயர்ந்தால் உலகின் 3 கோடி மக்களும்
2. கடல்மட்டம் 2 அடி உயர்ந்தால் உலகின் 7 கோடி மக்களும்
3. கடல்மட்டம் 3 அடி உயர்ந்தால் உலகின் 10 கோடி மக்களும்

பாதிக்கப்படுவார்கள். இதனைவிட பல தீவுகள் நீரினில் மூழ்கிவிடும். ஏனெனில் உலகின் பல தீவுகள் கடல் மட்டத்திலிருந்து மிகக்குறைந் உயரத்திலேயே அமைந்துள்ளன. உதாரணமாக மாலைதீவு 8அடி உயரத்திலும் துவாளுதீவு 16அடி உயரத்திலும் அமைந்துளளன. எனவே கடல்நீர்மட்ட உயர்வு உலகின கடற்கரைப் பிரதேசங்கள் பலவற்றை விழுங்குவதுடன் பலதீவுகளையும் மூழ்கச்செய்துவிடும். பலகோடி மக்கள் இடம்பெயரவோ இறக்கவோ நேரிடும். 1900ஆம்ஆண்டுடன் ஒப்பிடும் போது 2009ம் ஆண்டு ஜனவரி மாதம் உலகின் கடல்நீர்மட்டம் 0.9அடியால் உயர்ந்துள்ளது.

3 பனிப்படிவுகளும் பனிச்சிகரங்களும் உருகுதல்

காலநிலை மாற்றம் காரணமாக வெப்பநிலை அதிகரிப்பதனால் பனிப்பகுதிகள் உருகும். சிலபகுதிகள் தற்போது உருகி வருகின்றன. உலகின் வெப்பநிலை அதிகரிப்பிற்கு மிகச்சிறந்த சான்றாக 2002ம் ஆண்டிலிருந்து லார்சன்

பனியடுக்கு உருகிவருவதனையும் 1978ஆம் ஆண்டுடன் ஒப்பிடும்போது ஆபிரிக்கா பனிப்படலங்களில் 9 வீதமானவை உருகிவிட்டதாகக் கூறப்படுகின்றது. இதனைவிட ஆபிரிக்காவில் உள்ள கிளிமஞ்சாரோ மலை இன்னும் 15 ஆண்டுகளில அழிந்துவிடுமெனவும் இன்னும் 25ஆண்டுகளில் இமயமலையின் எவரஸ்ட் சிகரம் 2.54அடி குறையுமெனவும் எதிர்வு கூறப்பட்டுள்ளது. இவ்வாறு பனிப்பகுதிகள் உருகினால் உலகின் கடல்மட்ட உயர்வு இன்னும் அதிகரிக்கும் எனவும் எதிர்வு கூறப்பட்டுள்ளது.

4 வரட்சி வெள்ளப்பெருக்கு ஏற்படும்

அதிகரித்து வருகின்ற வெப்பநிலை காரணமாக பல பகுதிகள் வரட்சியால் பாதிக்கப்படக்கூடும். உலகின் பல பகுதிகளில் வரட்சிகாரணமாக குடிநீர்பிரச்சினை ஏற்படும். ஐ.பி.சி.சி.யின் அறிக்கைப்படி 2050ஆம் ஆண்டு உலகின் பாலைவனங்கள் 7 வீதத்தினால் அதிகரிக்குமெனக் கூறப்படுகின்றது. ஆபிரிக்காவின் சாகேல் பிரதேசத்தில் பாலை பரவுவது இதற்கு மிகச்சிறந்த உதாரணமாகக் கொள்ளலாம். அதிகரித்து வரும் மண்வெப்பநிலையும் வளிவெப்பநிலையும் பல பகுதிகளின் தாவரப்போர்வையை நீக்கி பாலைபரவுதலை ஊக்குவிக்கும். இதனை விட அதிகரிக்கும் பனிப்பகுதிகளின் உருகுதல் செயற்பாட்டினால் ஆறுகள், குளங்கள், ஏரிகள் என்பவற்றினது நீர்மட்டம் அதிகரிப்பதுடன் கன மழைப்பொழிவுகாரணமாகவும் வெள்ளப்பெருக்குகள் ஏற்படலாம்.

5. பவளப்பாறைகள் அழிவடைதல்

சமுத்திரங்களின் வெப்பநிலை மாற்றத்தினாலும் வளிமண்டல வெப்பநிலை மாற்றத்தினாலும் பவளப்பாறைகள் பாதிக்கப்படும். வெளிறல் நோய் ஏற்பட்டு இவை அழிவடையலாம். கடல்நீரின் வெப்பநிலை 30C அதிகரித்தால் ஆசியாவின் 88 வீதமான பவளப்பாறைகள் அழிவடையும் என எதிர்வு கூறப்பட்டுள்ளது.

6. சீரற்ற வானிலை நிலைமைகள் ஏற்படல்

காலநிலை மாற்றம் காரணமாக வானிலை நிலைமைகள் மாற்றமடையலாம். வானிலை நிலைமைகள் அடிக்கடி மாற்றமடையும். பருவகாலங்களில் வேறுபாடுகள் தோன்றும். பருவகாலங்களின் கால அளவுகளிலும் மாற்றங்கள் ஏற்படும். மாரிப்பருவங்கள் வரட்சியானதாகவும் கோடைப்பருவங்களில் கனமழையும் இடம் பெறலாம். இதனால் பருவகாலங்களை வரையறை செய்வது கடினமாக மாறிவிடும். வானிலை மூலக்கூறுகளின் தன்மைகள் அடிக்கடி மாற்றமடைவதால் ஒரு தெளிவான வானிலைப் பிரிப்பு காணப்படாது.

இதனைவிட காட்டுத்தீ, புயல், சூறாவளி என்பனவும் ஏற்படும். இவ்வாறு காலநிலைமாற்றத்தினுடைய பௌதீகப் பாதிப்புக்கள் காணப்படுகின்றன.

## பொருளாதாரப்பாதிப்புக்கள்

காலநிலை மாற்றத்தின் விளைவாக பொருளாதார பாதிப்புக்கள் ஏற்படும் அந்த வகையில் பின்வரும் பொருளாதாரப் பாதிப்புக்களைக் குறிப்பிடலாம்

1. விவசாயநடவடிக்கைகள் பாதிக்கப்படல்

வானிநிலை நிலைமைகள் அடிக்கடி மாற்றமடைவதனாலும் எதிர்பாராத காலநிலை அனர்த்தங்களாலும் (வெள்ளம், புயல், வரட்சி, சூறாவளி)என்பவற்றாலும் விவசாய நடடிவடிக்கைகள் பாதிக்கப்படலாம். சில பயிர்கள் உத்தம வெப்பநிலை உத்தம் மழைவீழ்ச்சி என்பவற்றாலே வளரும் தன்மை கொண்டுள்ளன. இப்பயிர்கள் காலநிலை மாற்றத்தின் விளைவினால் பயிரிட முடியாது போகும். இதனால் விவசாய உணவுப்பொருட்களை குறிப்பாக உணவுத்தானியங்கள் , பழங்கள், மரக்கறிகள் என்பவற்றிற்கு தட்டுப்பாடு ஏற்படலாம்.

2. கடல்உணவுத்தட்டுப்பாடு

சமுத்திர நீரின் வெப்பநிலை அதிகரிப்பினால் பவளப்பாறைகள் அழிவதனாலும் சமுத்திரச்சூழல் மாற்றமடையலாம். இதனால் உணவு வலையிலும உணவுச்சங்கிலியிலும் மாற்றங்கள் ஏற்படும். இதனால் சில கடல்வாழ் உயிரினங்கள் பாதிக்கப்படும். எனவே கடல் உணவுகளை பெறமுடியாது போகும்.

3. கால்நடைவளர்ப்பு பாதிக்கப்படும்.

கால்நடைகளுக்குத் தேவையான உணவுப்பொருட்கள் (புல்போன்றன)அழிவடைவதால் கால்நடைவளர்ப்பு பாதிக்கப்படும். இதனால் விலங்குஉணவுப்பொட்களுக்கும் தட்டுப்பாடு ஏற்படக்கூடும்

4. சிலகைத்தொழில் நடவடிக்கைகள் பாதிக்கப்படும்

இயற்கையை அடிப்படையாகக் கொண்ட சில கைத்தொழில்கள் குறிப்பாக வெட்டுமரக்கைத்தொழில்கள் சுரங்கமறுத்தல் அகழ்வு போன்ற கைத்தொழில் நடவடிக்கைகள் பாதிக்கப்படலாம். இவ்வாறு காலநிலை மாற்றத்தினால் சில பொருளாதாரப் பாதிப்புக்களும் ஏற்படக்கூடிய சாத்தியக்கூறுகள் காணப்படுகின்றன.

## சமூக ரீதியான பாதிப்புக்கள்

பௌதிக பொருளாதாரப் பாதிப்புக்கள் மட்டுமன்றி சமூக ரீதியான பாதிப்புக்களும் ஏற்படக்கூடும்.அந்த வகையில் பின்வரும் பாதிப்புக்களை அவதானிக்கலாம்.

1. நோய்கள்:

காலநிலை மாற்றத்தினால் மனிதனுக்கு உடல், உளம்சார்ந்த நோய்கள் ஏற்பட வாய்ப்புள்ளது. உடல் நோய்கள் என்ற வகையில் தோல் சார்ந்த நோய்கள் தோல் புற்று நோய், சிரங்கு, தேமல், சொறி, சரும உலர்ச்சி, தலைமயிர்

சார்ந்த நோய்கள் (முடிகொட்டுதல், இளநரை) என்பனவும் ஏற்படக்கூடும் என விஞ்ஞானிகள் குறிப்பிட்டுள்ளனர். இதனைவிட அதீதகோபம் எரிச்சல் போன்ற உளநோய்களும் ஏற்படும் எனக்கூறப்படுகின்றது.

2. பஞ்சம்

விவசாய கடல் உணவு மற்றும் விலங்கு வளர்ப்பு நடவடிக்கைகள் பாதிக்கப்படுவதனால் பஞ்சம் ஏற்படும் வாய்ப்புள்ளது. உலகின் தானிய நெருக்கடி காரணமாக 2020ம் ஆண்டு 100 கோடிக்கு மேற்பட்ட மக்கள் பாதிக்கப்படுவர். என ஐ.நா.சபை தெரிவித்துள்ளது.

3. இடப்பெயர்வு

கடல் மட்ட உயர்வு மற்றும் பஞ்சம் காரணமாக பல கோடி மக்கள் இடம் பெயர நேரிடும் சூழல் அகதிகள் என்பது பெரும் பிரச்சினக்குரிய விடயமாக மாறிவிடும். இடப்பெயர்வு மற்றும் பஞ்சம் காரணமாக கலவரங்கள் யுத்தங்கள் என்பன ஏற்படலாம்

காலநிலை மாற்றப் பாதிப்புக்கள் காரணமாக உலகம் முழுவதும் மேற்படிப் பாதிப்புக்கள் ஏற்பட நமது நாட்டிலும் இதனால் பல பாதிப்புக்கள் ஏற்படக்கூடிய வாய்ப்புக்கள் காணப்படுகின்றன.

**இலங்கையில் காலநிலை மாற்றப் பாதிப்புக்கள்**

1. இலங்கை ஒரு தீவாக இருப்பதனால் கடல்மட்ட உயர்வு பாதிப்பை ஏற்படுத்தலாம்.
2. இலங்கையின் கடற்பரப்புக்குள் காணப்படுகின்ற பவளப்பாறைகள் அழிவடையலாம்.
3. காட்டு உயிர்சூழல் மாற்றமடைந்து வன உயிரினங்கள் குடியிருப்புகளுக்குள் உட்புகுந்து பாதிப்பை ஏற்படுத்தலாம்
4. இலங்கையின் மழைவீழ்ச்சி வெப்பநிலையின் அடிப்படையில் பிரிக்கப்பட்ட கோடைமாரிப்பருவங்கள் மாற்றமடையும் நிலை தோன்றலாம்.
5. ஆறுகள் மற்றும் நீர்த்தேங்கங்களில் நீரற்றுப் போய்விடும் இதனால் விவசாயம் நீர்மின்சாரம் போன்ற நடவடிக்கைகள் பாதிக்கப்படலாம்.

6 வரட்சி வெள்ளப்பெருக்குகளினால் பல ஆயிரக்கணக்கான மக்கள் இடம்பெயர நேரிடலாம்.

7. விவசாய உற்பத்திகள் பாதிக்கப்படுவதினால் தானி உற்பத்தி குறைவடைந்து பஞ்சம் ஏற்படும்.

8 மனிதர்களுக்கு புதிய வகை நோய்கள் தோன்றலாம்.

இவற்றின் பாதிப்புக்கள் எதிர்காலத்தில் தான் தோன்றலாம் என்றில்லை தற்போது கூட இதன் பாதிப்புக்கள் உணரப்படுகின்றன.

காலநிலை மாற்றத்திற்கெதிரான உலகளாவிய நடவடிக்கைகள்

1978ம் ஆண்டு முதலாவதாக வானிலை மாநாடு நடைபெற்றது. அதன்பின்னர் 1988ஆம் ஆண்டு உலக வளிமண்டல அமைப்பும் ஐ.நா.சுற்றுச்சூழல் அமைப்பும இணைந்து காலநிலை மாற்றம் தொடாபான பன்னாட்டு அரச குழுவை உருவாக்கியது. 1990ஆம் ஆண்டு ஐ.பி.சி.சி தனது முதலாவது மதிப்பீட்டு அறிக்கையை வெயிட்டது. அது புதிய ஆராய்சிகள் எதனையும் மேற்கொள்வதில்லை. காலநிலை மாற்றம் தொடர்பான அறிவியல் - தொழில்நுட்பம் , சமூக பொருளாதாரகூறுகள் தொடாபாக சர்வதேச அளவில் முன்னணி ஆராய்ச்சிகளை மதிப்பிட்டு நடவடிக்கை எடுக்கத்தக்க வகையில் அறிக்கையாகத் தொகுப்பதே இந்த அமைப்பின் பணியாகும். ஐ.பி.சி.சி. யின் முதலாவது மதிப்பீட்டு அறிக்கையின் பிரகாரம் 1992ஆம் ஆண்டு ஐ.நா.வின் காலநிலை மாற்ற பணித்திட்டம் உருவாக்கப்பட்டது. இவ்வாண்டிலே யூன் மாதத்தில் இடம்பெற்ற ரியோ புவியுச்சி மாநாட்டில் யு.என்.எப்.சி.சி.சி இல் உலக நாடுகள் கையெழுத்திட்டன. 1994 மார்ச் 21ம் திகதி யு.என்.எப்.சி.சி.சி நடைமுறைக்கு வந்தது. 2002 யூலைமாதம் உலகின் 186 நாடுகள் இதனை ஏற்றுக்கொண்டன.

யு.என்.எப்.சி.சி.சி இன் காலநிலை தொடர்பாக முதலாவது மாநாடு 1995 ஏப்ரலில் ஜேர்மன் தலைநகரம் பேர்லினில் நடைபெற்றது. பின்னர் 1996 யூலை மாதம் ஜெனிவா நகரில் இரண்டாவது மாநாடு நடைபெற்றது. இதில் காலநிலை மாற்றத்தினால் ஏற்படும் பாதிப்புக்கள்பற்றி விரிவாக ஆராயப்பட்டதுடன் பச்சை வீட்டு வாயுக்களைக் குறைப்பதற்கான நடவடிக்கைகளை உலகம் விரைந்து மேற்கொள்ளவேண்டும் எனவும் கூறப்பட்டது. அதன் பின்னர் இதனுடைமூன்றாவதும் முக்கியத்துவம் வாய்ந்ததுமான மாநாடு 1997 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் ஜப்பானின் நரகமான கியோட்டாவில் நடைபெற்றது. இதில் கியோட்டா உடன்படிக்கை உருவாக்கப்பட்டது. இவ்வுடன்படிக்கை ஐ.நாவின் தலைமையகமமான நியூயோர்க்கில் வைக்கப்பட்டு ஓராண்டிற்குள் 84 நாடுகள் இதில் கையெழுத்திட்டன. ஐ.பி.சி.சி.யின் நான்காவது மாநாடு புவன்ஸ் அயர்சில் கூடியது. இதில் கியோட்டோஉடன்படிக்கையைச் செய்ற்படுத்துவதற்கான விபரங்கள் தீர்மானங்கள் நடைமுறைப்படுத்தும் முறைகளும் உருவாக்கப்பட்டன. இதன் முடிவுகள் 6வது மாநாட்டுக்கு முன்னர் முடிவுக்குக் கொண்டுவருதல் வேண்டும் எனவும் கூறப்பட்டது. இதன் பின்னர் பொன்நகரத்தில் நடைபெற்ற ஐந்தாவது மாநாடு எவ்வித முன்னேற்றத்தையும் ஏற்படுத்தவில்லை. இதன்பின்னர் 6வது மாநாடு நெதர்லாந்தின் ஹேக்நகரில் கூடியது. இம்மாநாடும் முன்னைய மாநாட்டினைப் போல எவ்வித முக்கியத்துவமும் கொண்டிருக்கவில்லை. அதன் பின்னர் 7வது மாநாடு மாக்கேஷில் நடைபெற்றது. பின்னர் 8வது மாநாடு

புதுடில்லியில் நடைபெற்றது.

இவ்வாறு IPPCCஇன் மாநாடுகள் நடைபெற்று வந்தாலும் முதன்மையான தும் முக்கியத்துவம்வாய்ந்ததுமான 13வது மாநாடாக 2007ம் ஆண்டு டிசம்பர் மாதம் இந்தோனேசியாவின் பாலித்தீவில் நடைபெற்ற மாநாட்டினை குறிப்பிட்டுக் கொள்ளலாம் உலகின் 190 நாடுகளைச் சேர்ந்த 10000க்கு மேற்பட்ட பிரதிநிதிகள் பங்குபற்றினர். இம்மாநாட்டில் காலநிலை மாற்றத்தை எதிர்கொள்வதற்கான திட்ட வரைபடம் ஒன்று உருவானது. இத்திட்ட வரைபடம் உருவாவதற்கு அனைத்து நாடுகளும் ஒருமித்த கருத்தினை கொண்டிருந்த வேளை அமெரிக்கா மட்டும் இதிலிருந்து விலகி இருந்தது. இம்மாநாட்டில் பச்சை வீட்டு வாயுக்களைக் குறைப்பது காலநிலை மாற்றத்தின் சவால்களை எதிர்கொள்வதற்கு வளரும் நாடுகளுக்கு உதவுவது காலநிலைத் தன்மைகளுக்கு அமைவாக தொழிநுட்பங்களை வடிவமைத்து கொள்வது போன்ற பல தீர்மானங்கள் மேற்கொள்ளப்பட்டன. எவ்வாறாயினும் கடந்த பல ஆண்டுகளில் காலநிலை மாற்றம் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட சிறந்த ஒரு நடவடிக்கையாக பாலித்தீவு மாநாட்டினைக் கருதலாம்.

கொபன் கேகன் மாநாடு

காலநிலை மாற்றத்துக்கு எதிரான உலகளாவிய நடவடிக்கைகளில் UNFCCC இன் ஏற்பாட்டில் உலகின் 15வது காலநிலை மாநாடு டிசம்பர் 7ம்திகதி தொடக்கம் 18ம் திகதிவரை நடைபெறுகின்றது. டென்மார்கின் தலைநகர் கொபன் கேகன் ல் BellaCenter ல் இம்மாநாடு நடைபெறுகின்றது. ஜப்பானின் கியோட்டா நகரில் நடைபெற்ற கியோட்டோ மாநாட்டின் தீர்மானத்திற்கு அமையவே இது நடைபெறுகின்றது. இம் மாநாட்டில் தொழில்நுட்ப செயற்பாட்டு நிகழ்ச்சித் திட்டமும் தேசிய தடுப்புச் செயன்முறையும் உம் UNFCCC முக்கிய விடயங்களாக வலியுறுத்தவுள்ளது. இம்மாநாட்டில் அமெரிக்கா உள்ளிட்ட முக்கியமான நாடுகளின் அரசுத்தலைவர்கள் கலந்துகொள்ளவுள்ளமை குறிப்பிடத்தக்கது. எனினும் அமெரிக்கஜனாதிபதி பராக் ஒபாமா காலநிலை மாற்றம் பற்றி அதிக அக்கறை கொண்டிருப்பதனால் அவரின் உரைக்கு மிகுந்த எதிர்பார்ப்பு ஏற்பட்டுள்ளது.

எனினும் வழமையான காலநிலை மாற்ற மாநாடுகள் போல இம்மாநாடும் வெறும் தீர்மானங்கள் உடன்படிக்கைகளுடன் மட்டுமே முடிவடையும் என சில காலநிலையாளர்கள் தெரிவிக்கின்றனர்

ஏனெனில் விருத்தியடைந்த நாடுகளுக்கும் விருத்தியடைந்துவரும நாடுகளுக்கும் இடையிலான போட்டியே இதற்கான பிரதான காரணமாகும். இன்றைய காலநிலை மாற்றம் புவிவெப்பமடைதல் செயற்பாட்டிற்கு இன்று காணப்படும் அபிவிருத்தி அடைந்த நாடுகளே பிரதானமான காரணமானவர்கள்

என்ற கருத்து வலியுறுத்தப்படுகின்றது. இந்நாடுகள் தமது பொருளாதார விருத்திக்கு கட்டுப்பாடின்றிய செயற்பாடுகளை மேற்கொண்டனர். சூழல் தொடர்பான எவ்வித அக்கறைக்ளும் இல்லாமல் தமது விருத்தி ஒன்றையே கருத்தில் கொண்டு செயற்பட்டன. காலநிலை மாற்றத்துக்கான பிரதான காரணியாக இருக்கின்ற பச்சை வீட்டு வாயுக்களை அபிவிருத்தி அடைந்த அமெரிக்கா ஐரோப்பா நாடுகளே அதிகம் வெளியிட்டன. ஆனால் இவற்றின் பாதிப்பு பச்சை வீட்டுவாயுக்களை குறைந்த அளவில் வெளியிட்ட இன்னமும் வறுமை நிலையில் உள்ள பல நாடுகளுக்கும் ஏற்பட்டுள்ளது.எனவே உலகம் முழுவதும் காலநிலை மாற்றத்தினை தடுக்க வேண்டுமாயின் ஒவ்வொரு நாடுகளும் வெளியிடுகின்ற பச்சைவீட்டு வாயுக்களின் அளவைக் குறைக்க வேண்டும். என்ற பாலித்தீவு மாநாட்டுத் தீர்மானத்தையும் கியோட்டோ மாநாட்டுத் தீர்மானத்தையும் நடைமுறைப்படுத்தல் மிகவும் கடினமானதாகும். ஏனெனில் விருத்தியடைந்து வரும் நாடுகள் இதற்கு கடுமையான எதிர்ப்பை தெரிவித்து வருகின்றன. உலகின் சூழல் பாதிப்புக்கள் எல்லாவற்றிற்கும் காரணமான எதிர்ப்பை தெரிவித்து வருகின்றன. உலகின் சூழல் பாதிப்புக்கள் எல்லாவற்றிற்கும் காரணமான அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளுக்கும் தமக்கும் ஒரே மாதிரியான தடையை UNFCCC IPCC உம் விதித்து இருப்பதாக அவை குற்றம் சாட்டி வருகின்றன. அண்மையில் பொதுநலவாய மாநாட்டில் இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங் தெரிவித்துளள விருத்தி அடைந்த நாடுகள் தமது நாடான இந்தியாவின் சுமைகளைக் குறைக்க முன்வந்தால் இந்தியா தான் வெளியிடும் பச்சைவீட்டுவாயுக்களின் அளவைக் குறைக்கும் என்ற சாரப்பட தெரிவித்திருந்த கருத்து கவனிக்கத்தக்கது. எனினும் இன்றைய உலகில் விருத்தியடைந்து வரும் நாடுகளான இந்தியாவும் சீனாவுமே அதிகளவான பச்சை வீட்டு வாயுக்களை வெளியேற்றி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

எவ்வாறாயினும் இந்நாடுகளுக்கிடையிலான போட்டியும் முரண்பாடுகளும் கொபன்கேகன் மாநாட்டையும் பயனற்ற வெறும் தீர்மானம் நிறைவேற்றும் மாநாடாகவே மாற்றும் என காலநிலையாளர்கள் எதிர்வு கூறியுள்ளனர்.

நாடுகள் ரீதியாக

இதேவேளை காலநிலை மாற்றத்திற்கெதிரான நடவடிக்கைகளை இதனால் பாதிக்கப்படுவதற்கான வாய்ப்புக்களை அதிகம் கொண்டுள்ள சில நாடுகளும் மேற்கொண்டுவருகின்றன. இவர்கள் பல்வேறு வகையான விழிப்புணர்வுச் செயற்பாட்டினை மேற்கொண்டுவருகின்றன. உதாரணமாக கடல்மட்ட உயர்வினால் பாதிக்கூடிய மாலைதீவு தன்னுடைய அமைச்சரவை கூட்டத்தில் கடலுக்கடியில நடத்தியமையும் பனிச்சிகரங்கள் உருவாகுவதனால் பாதிக்கப்படக்கூடிய

வாய்ப்புக்களை கொண்டுள்ள நேபாளம் தன்னுடைய அமைச்சரவைக் கூட்டத்தில் எவெரஸ்ட் சிகரத்தில் நடத்தியமையும் குறிப்பிடத்தக்கதாகும்.

காலநிலை மாற்றம் உலகை அச்சுறுத்தும் ஒரு பிரச்சினை என்று கருதி அதற்காக பல நடவடிக்கைகளை எடுத்த ஐ.பி.சி.சி. அமைப்புக்கும் தனிமனிதனாக காலநிலை மாற்றத்துக்கெதிராக தன்னால் இயன்றவரை முயற்சி எடுத்து ஒரு தர்மசங்கடமான உண்மை என்ற விவரணப்படத்தினூடாகவும் காலநிலை மாற்றத்திற்கெதிராக பிரச்சாரம் செய்த முன்னாள் அமெரிக்க துணை ஜனாதிபதி டேவிட் அலகோரும் 2007 ஆம் ஆண்டின் அமைதிக்காக நோபல் பரிசை வென்றுள்ளமை காலநிலை மாற்றம் தொடர்பான நடவடிக்கைகளில் உலகளாவிய பரிணாமத்தினை விளக்கி நிற்கின்றது.

ஒப்பீட்டு ரீதியில் உலக நாடுகளில் குறிப்பாக ஐரோப்பிய நாடுகள் காலநிலை மாற்றத்திற்கெதிரான நடவடிக்கைகைகளை விரைந்து முன்னெடுத்து வருகின்றன. காலநிலை மாற்றத்திற்கான பிரதான காரணிகளாகவும் இந்நாடுகளே திகழ்ந்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது. எனினும் ஏனைய நாடுகளைவிட இவையே இதற்காகப் பாடுபடுகின்றன. தென்னாசிய நாடுகள் ஒப்பீட்டளவில் காலநிலை மாற்றம் தொடர்பான எவ்வித அக்கறையும் அற்று உள்ளனர். ஆனால் காலநிலை மாற்றத்தினால் அதிகம் பாதிக்கப்படும் பிராந்தியமாக தென்னாசியப்பிராந்திய திகழ்கின்றமை குறிப்பிடத்தக்கது. ஏனெனில் அண்மைக்காலத்தில் ஏற்பட்ட தானிய நெருக்கடியைச் சமாளிக்க முடியாமல் இந்நாடுகள் திண்டாடியமை குறிப்பிடததக்கது.

**இலங்கையின் செயற்பாடுகள்**

காலநிலை மாற்றத்திற்கெதிராக உலகநாடுகள் பல நடவடிக்கைகளை எடுத்துவரும் நிலையில் இலங்கை தனிப்பட்ட ரீதியில் மிகவும் குறைந்தளவான அக்கறையையே காட்டிவருகின்றது. இலங்கை ஒரு தீவாக மட்டுமன்றி இலங்கையின் காலநிலை அம்சங்கள் மாறிவரும் நிலையில் இலங்கை இது தொடர்பான பூரண விழிப்புணர்வை அடையாதிருப்பது வியப்பான ஒன்றாகும். இலங்கை வளிமண்டலவியற் திணைக்களம் காலநிலை மாற்றம் தொடர்பாக ஓரளவுக்கு அக்கறை காட்டி வருகின்றது. இது காலநிலை மாற்றத்துக்கான நிலையம் ஒன்றினை நிறுவி அதன் மூலம் பல்வேறு பணிகளை மேற்கொண்டுவருகின்றது இவற்றின் பணிகளாக காலநிலை மாற்றம் தொடர்பாக ஆராட்சிகளை மேற்கொள்ளல் காலநிலை மாற்றத்தினை அவதானித்தல் மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்துதல் காலநிலை மாற்றம் தொடர்பான தரவுகளைச் சேகரித்தல், காலநிலை மாற்ற மாதிரிகளை அவதானித்தல் காலநிலை மாற்றம் தொடர்பான விடயங்களை ஆவணப்படுத்துதல் காலநிலை மாற்றத்திளை தடுக்கும்

நடவடிக்கைகளுக்கு உதவிபுரிதல் எனப்பல நடவடிக்கைகளை இந்நிலையம் மேற்கொண்டு வருகின்றது. இலங்கையில் காலநிலை மாற்றம் தொடர்பாக இந்நிலையம் ஓரளவுக்கு குறிப்பிடத்தக்க நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது. ஏனெனில் இந்நிலையத்தின் நடவடிக்கைகள் மக்கள் மத்தியில் ஓரளவு விழிப்புணர்வை ஏற்படுத்தியுள்ளது.

இதனைவிட பினனெற் அக்சன் எனும் அமைப்பு காலநிலை மாற்றத்துகு எதிரான செயற்திட்டம் ஒன்றினை இலங்கை வளிமண்டல வியற்றிணைக்களத்துடன் இணைத்து செயற்படுத்தி வருகின்றது. இவ்வமைப்பு இலங்கை வனவாழ் உயிரினங்களின் பாதுகாப்புச் சங்கம் உடன் இணைத்தும் இச்செயற்பாட்டினை முன்னெடுத்து வருகின்றதெனலாம்

இதனைவிட ஐ.நாவின் UNDP யும் இலங்கை இயற்கை வளங்கள சுற்றாடல் அமைச்சும் இணைந்து காலநிலை மாற்றத்திற்கு எதிரான செயல்திட்டம் ஒன்றினை செயற்படுத்தி வருகின்றன. 4050000 அமெரிக்க டொலர் செலவில் மேற்கொள்ளப்படும் இச் செயற்திட்டம் காலநிலை மாற்றத்திற்கெதிரான நடவடிக்கைகளில் இலங்கையின் பங்கினை ஓரளவுக்கு சிறப்பாக வெளிக்கொணர்ந்துள்ளது எனலாம். இதனை விட இலங்கை மத்திய சுற்றாடல் அதிகாரசபை பல செயற்திட்டங்களை மேற்கொண்டு வருகின்றது எனலாம்.

உசாத்துணைநூல்

owsok. K 1999 climate change pokers publication newyork U.S.A
Christoborsan .H.2003 climatology kendars publication U.K
5th report IPCC 2007 intergovemental panel 0n climate change U.S.A
சா.பிரதீபராஜா 2009 காலநிலைமாற்றம் தினக்குரல் யாழ்ப்பாணம்
சா.பிரதீபராஜா 2009 காலநிலைமாற்றம் யாழ்ப்பாணப்புவியலாளன் புவியற்துறை யாழ்பல்கலைக்கழகம்
www.ippcc.org.com
www.unffccc.org.com

# உலகளாவிய ரீதியில் திண்மக் கழிவகற்றலும் அவற்றின் முகாமைத்துவமும்

கே.மாலிகா
திட்டமிடல் 2ம் வருடம்
யாழ். பல்கலைக் கழகம்

திண்மக் கழிவகற்றல் இன்று உலகளாவிய ரீதியில் ஒரு பிரச்சினையாக உள்ளது. அபிவிருத்தி யடைந்துவரும் நாடுகள், அபிவிருத்திய டையாத நாடுகள் என்ற வேறுபாடின்றி பிரச்சினை பொதுமையடைந்துள்ளது. இதற்காக நாடுகள் பெருமளவு மனித வலுவையும் பணத்தையும் செலவிட்டுக் கொண்டிருக்கின்றன. இலங்கையிலும் திண்மக் கழிவகற்றலில் முறையான முகாமைத்துவ நடவடிக்கைகள் இல்லாமையால் திண்மக்கழிவு வளர்ந்து வருகின்ற ஒரு பிரச்சினையாக உருவாகியுள்ளது. இன்றைய இறுதிக் கழிவகற்றல் செயற்பாடுகளுடன் சம்பந்தப்பட்ட சுற்றாடல், சமூக பொருளாதாரப் பிரச்சினைகளைக் குறைக்கும் பொருட்டு திண்மக் கழிவு முகாமைத் துவத்துக்கான உபாயத்தை அபிவிருத்தி செய்வதும் அமுல்படுத் துவதும் அவசியமாகவுள்ளது.

கடந்த காலங்களில் திண்மக் கழிவு முகாமைத்துவத்தில் மிகக்குறைந்த கவனம் செலுத்தப்பட்ட தனாலே இறுதிக்கழிவகற்றல் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வந்துள்ளது. பொருத்தமான கழிவு சேகரிப்புமுறைகள் இல்லாமையும் சுற்றாடல் ரீதியாக இலகுவில் பாதிக்கப் படக்கூடியவையான நீர்நிலைகளை அண்டிய பிரதேசம் சதுப்புநிலங்கள் போன்ற இடங்களில் திட்டமிடப்படாத இறுதிக் கழிவகற்றல் நிகழ்வதும் மற்றும் இன்றைய சமூக பொருளாதார நடவடிக்கைகளும் திண்மக்கழிவகற்றல் பிரச்சினையை முனைப்படையச் செய்கின்றன. பொருத்தமான மீள் பாவனை, மீள் சுழற்சி நடைமுறை களைக் கைக்கொள்ளாமையால் இப் பிரச்சினை மேலும் நெருக்கடி நிலையை அடைந்துள்ளது. கழிவகற்றல் நடைமுறைகளுடன் தொடர்புபட்ட சுற்றாடல் சமூகம் மற்றும் பொருளாதார பிரச்சினைகளைக் குறைக்க திண்மக் கழிவு முகாமைத்துவத்துக்கான பொருத்தமான உபாயத்தை வகுப்பது இன்றைய அத்தியாவசிய தேவையாகும்.

அந்த வகையில் உலகளாவிய ரீதியில் திண்மக்கழிவகற்றல் முகா மைத்துவத்தில் அதிக கவனம் செலுத்தப்படுகின்றது. Hanson (1998) என்பவர் உலகளாவிய ரீதியில் நாடுகளின் திண்மக்கழிவகற்றல் தொடர்பாக பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார். உலகளாவிய பிரச்சினையாக இன்று உருவெடுத்துள்ள

திண்மக் கழிவகற்றல் பற்றிய பிரச்சினை அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகள் அபிவிருத்தி அடையாத நாடுகள் என்ற வேறுபாடின்றி பொதுமையடைந்துள்ளது. இதற்காக நாடுகள் பல்வேறு தொழில் நுட்ப முறைகளைக் கையாள்வதுடன் பெருமளவு பணத்தையும் செலவிட்டு கொண்டிருக்கின்றன. உலகின் பல நாடுகளில் திண்மக்கழிவுப் பொருட்கள் உண்டாக்கப்படும் இடத்திலிருந்து அகற்றப்படுவதற்காக வேறு இடங்களுக்கு கொண்டு செல்லப் படுகின்றது. இதனால் ஒரே நாட்டைச் சேர்ந்த சமூகங்களிடையே கூட முரண் பாடுகள் ஏற்படுவதற்கு திண்மக் கழிவுகள் இடமளிக்கின்றன. எனக் குறிபிட்டுள்ளார்.

உலகளாவிய ரீதியில் திண்மக் கழிவானது அபிவிருத்தியடைந்த நாடுகளிலும் வறிய நாடுகளின் அபிவிருத்தியடைந்த பகுதிகளிலும் ஏற்பட்ட வாழ்க்கைப் போக்கின் பயனாகவும் வீட்டுத்திண்மக்கழிவின் அளவில் ஏற்பட்ட வியத்தகு அதிகரிப்பும் திண்மக்கழிவு தொடர்பான பிரச்சினையை மேலும் சிக்கலாக்கியுள்ளது.

**அபிவிருத்திஅடைந்த நாடுகளின் திண்மக் கழிவகற்றல் முகாமைத்துவம்**

அபிவிருத்தி அடைந்த சமூகங்களிலே திண்மக்கழிவுப் பொருளை அழிப்பதற்கு பல்வேறு முறைகள் கையாளப்படுகின்றன. அந்த வகையில் கனடாவில் தினமும் சேகரிக்கப்படும் கழிவுப்பொருட்களின் அளவு மதிப்பீட்டின்படி சேகரிக்கப்படும் மொத்தக் கழிவுகளில் சுமார் 28.6 மில்லியன் தொன் திண்மக் கழிவுகள் மாநகர சபையினால் நில நிரப்புகைக்கு விடப்படுகிறது. மேலும் உருவாகும் திண்மக் கழிவுகளில் 50.000 தொன் கழிவுகள் எரியூட்டிகளின் உதவியுடன் எரியூட்டப்படுகின்றன. 15.7 மில்லியன் தொன் கடதாசி பிளாஸ்டிக் கொள்கலன்கள் மீள் சுழற்சிக்கு உட்படுத்தப்பட்டுகின்றன. மேலும் 9000 வரையான வியாபார மற்றும் வர்த்தகதொழிற்சாலைகளில் இருந்து 63மில்லியன் தொன் தீங்கு விளைவிக்கும் கழிவுப்பொருட்கள் உருவாகின்றன. இவற்றையும் திட்டமிட்ட ரீதியில் முகாமை செய்து திண்மக்கழிவுப்பிரச்சினையை முடிந்தளவு குறைப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்கின்றன.

மேலும் அமெரிக்காவின் திண்மக்கழிவுகளின் கையாளுகையை நோக்கும் போது (Loues Blumbery) (1991) என்பவர் அமெரிக்காவின் திண்மக்கழிவுகளின் கையாளுகை தொடர்பாக பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார். அமெரிக்காவில் திண்மக்கழிவுகள் தொடர்பான சுற்றாடல் விழிப்புக்காரணமாக கழிவுப் பொருட்கள் இயன்றளவு நவீனமுறையில் மீள் சுற்றோட்டங்கள செய்வதற்கான நிகழ்ச்சித் திட்டங்கள் உருவாக்கப் பட்டுள்ளன. மேலும் 30சதவீதமான கழிவுகள் ஆண்டுக்கு மீள்சுழற்சிக்கு

உட்படுத்தப்படுகின்றது. வைத்திய சாலையில் இருந்து பெறப்படும் கழிவுகள் மின்சாரத்தின் உதவியுடன் எரியூட்டப்படுகின்றன. கடதாசி மற்றும் வீட்டுக்கழிவுகள் மாநகரகழிவுகளில் பெரும் பங்குவகிக்கின்றன. அதில் பெரும்பங்கானவை நேரடியாக மீள்சுழற்சிக்கு அல்லது கூட்டெரு வாக்கலுக்கு உட்படுகின்றது. மாநகரக் கழிவுகளால் ஒரு பகுதி நேரடியாக மின்சாரஉற்பத்திக்கு பயன்படுத்தப்படுகின்றது. இதற்கென திண்மக்கழிவுகளைப் பயன்படுத்தி மின் உற்பத்தி செய்ய 89 நிலையங்கள் ஸ்தாபிக்கப்பட்டுள்ளன. இவற்றின் ஊடாக 2500 மெகாவைற் அதாவது தேசிய சக்தி உற்பத்தியில் 0.3சத வீதமான மின்சாரம் உற்பத்தி செய்யப் படுகின்றது. எனக்குறிப்பிட்டுள்ளார்.

அமெரிக்க குடியிருப்பாளர்கள் மற்றும் வர்த்தக நிறுவன சமூகத்தினரால் 229 மில்லியன் தொன்னுக்கு அதிகமான கழிவுகள் மாநகரத் திண்மக்கழிவுகளாக வெளியேற்றப்படுகின்றன. சராசரி தனிநபருக்கான நாளாந்தக் கழிவு 4.4பவுண்ஸ் ஆகக் காணப்படுகின்றது. சேகரிக்கப்படும் கழிவுகளில் 33.6 மில்லியன் தொன் (14.7)மாநகர கழிவுகள் எரியூட்டப்படுவதும் வளப்பயன்பாடும் கழிவு உருவாக்கமும் இயற்கை சமநிலையிலும் உயர்வாகக் காணப்படுவதும் சுற்றாடலுக்குப் பாரிய பிரச்சினையாக அமைகின்றது. இவ்வாறாக அமெரிக்காவின் திண்மக்கழிவகற்றல் முகாமைத்துவம் காணப்படுகின்றது.

மேலும் டென்மார்க்கின் திண்மக்கழிவகற்றல் பற்றி நோக்கும் போது டென்மார்க்கின் கொபென்ஜகன் நகரத்தில் திண்மக்கழிவகற்றல் 1980களில் சிக்கலான நிலையில் காணப்பட்டது. ஆரம்பகாலத்தில் பிரதான கழிவு உருவாக்குவோரிடம் கழிவகற்றலுக்கான வரி அறவிடப்பட்டு சேகரிக்கப்படும் கழிவுகள் தரம் பிரிக்கும் மையத்துக்கு அனுப்பப்பட்டு தரம் பிரிக்கப்பட்டபோதும் காவுகையின் போது கழிவுகள் கலப்பதனால் தரம்பிரித்தல் மேலும் சிக்கலடைந்தது. புதிய வகையான திட்டத்தை 1991 இல் இருந்து நடைமுறைப்படுத்தியதன் பிரகாரம் கழிவு உருவாக்கம் அனைவரும் கழிவுருவாக்கும் இடத்திலேயே எரியூட்டுதலுக்குரிய நச்சுக்கழிவுகள், மீள் சுழற்சிக்குரிய கழிவுகள், நிலநிரப்புகைக்குரிய கழிவுகள் என வகைப்படுத்தி கையளிக்கவேண்டும் என்பதுடன் கழிவு உருவாக்குபவர்கள் புதிய தொழில் நுட்பத்தை புகுத்துவதன் ஊடாக கனவளவைக் குறைத்து அனுப்பவேண்டும் என்ற நடைமுறைமேற்கொள்ளப் படுகின்றது.

திண்மக்கழிவுகளால் சிக்கல் தன்மை வாய்ந்த பிளாஸ்ரிக் அல்லது பொலித்தீன் உறைகளின் பாவனையைக் குறைக்கும் பொருட்டு அயர்லாந்து போன்ற நாடுகள் அத்தகைய உறைகளை பாவிப்பவர்களிடமிருந்து

கட்டணமொன்றை அறவிட நடவடிக்கை எடுத்துள்ளதன் மூலம் பிளாஸ்ரிக் அல்லது பொலித்தீன் உறைகளின் பாவனை கணிசமான அளவில் குறைந்துள்ளதாக ஆய்வுகளில் குறிப்பிடப்பட்டுள்ளன.

திண்மக்கழிவுகள் பற்றிய பிரச்சினை இன்று உலகளாவிய பிரச்சினையாக பொதுமையடைந்துள் ளதுடன் அபிவிருத்தியடைந்த நாடுகளில் கூட இது பெரும் பிரச்சினையாக விளங்குகின்றது. கிழக்கு ஜேர்மனியும் மேற்கு ஜேர்மனியும் ஒன்றிணைய முன்னர் பல வருடகாலமாக மேற்கு ஜேர்மனி, கிழக்கு ஜேர்மனியில் உள்ள கழிவுகள் இடப்படும் நிலையங்கள் ஒழுங்காகப் பயன்பயன்படுத்தியது.

இவ்வாறாக அபிவிருத்தி அடைந்த நாடுகளின் திண்மக் கழிவகற்றல் மற்றும் அவற்றுக்கான முகாமைத்துவம் சிறப்பாக இடம் பெறுவதனையும் அவதானிக்க முடிகின்றது.

**அபிவிருத்தி அடைந்துவருகின்ற நாடுகளின் திண்மக்கழிவகற்றல்**

அபிவிருத்தி அடைந்த நாடுகளில் திண்மக்கழிவுகள் அகற்றப் படுவதும் முகாமை செய்யப்படுவதும் பாரிய பிரச்சினையாகவுள்ளது. காரணம் இங்கு தொழில்நுட்பப் பற்றாக்குறையே ஆகும். அபிவிருத்தி அடைந்து வருகின்ற நாடுகளின் திண்மக் கழிவகற்றல் செயற்பாட்டினை நோக்குகின்றபோது இவை பாரியளவில் நவீன உத்திகளை கையாளா தபோதிலும் ஓரளவான முறைகளை பின்பற்றி வருகின்றமை அவதானிக்க கூடியதாக உள்ளது. பொருளாதாரப் பின்னணியும் இதற்கு ஒரு காரணமென சுட்டிக்காட்டப்படுகிறது. இந்தியாவில் 1950களில் இருந்து நகரக்கழிவுகளின் உருவாக்கம் 6 மில்லியன் தொன்னாக உயர்ந்துள்ளது. 25%ற்கும் அதிகமமான திண்மக்கழிவுகள் நாளாந்தம் அகற்றப் படாமலும் 70%ஆன நகரங்களில்- போதிய திண்மக்கழிவகற்றலுக்கான வசதிகள் காணப்படாததுடன் கை யாளப்படும் இறுதிக் கழிவகற்றலால் போதிய சுகாதார முறைப்படி மேற் கொள்ளப்படாமல் இருப்பது பாரிய குறை பாடாகவுள்ளது.

மேலும் இந்தோனேசியாவில் திண்மக்கழிவகற்றல் முகாமைத்துவம் தற்போது சிறப்பாகக் காணப்படுகின்றது. இலங்கையில் பொருத்தமான முகாமைத்துவ முறைகள் இல்லாத காரணத்தினால் திண்மக்கழிவு ஒரு வளர்ந்து வரும் பிரச்சினையாக உள்ளன. இலங்கையில் மொத்த மாநாகர சபைப்பிரதேசங்களில் வெளியேற்றப்படும் கழிவுகளில் நாளாந்தம் சேகரிக்கப்படும் கழிவுகளின் அளவு 6400தொன் ஆக மதிப்பிடப்பட்டுள்ளது.

இவ்வாறாக அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளின் திண்மக்கழிவு அகற்றலுக்கான முறையான முகாமைத்துவம் இன்மை யினால் அது சமூக பொருளாதார சூழல் ரீதியில் பாரிய தாக்கத்தினை ஏற்படுத்துவதனை அவதானிக்க

முடிகின்றது.

மேற்காட்டிய வகையில் அபிவிருத்தி அடைந்த மற்றும் அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளின் திண்மக்கழிவகற்றல் செயற்பாடுகளை ஒப்பிட்டு நோக்குகின்றபோது தனி நபருக்கான கழிவுருவாக்கம் அபிவிருத்தி அடைந்த நாடுகளில் அதிகமாகக் காணப்பட்டாலும் அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளின் கழிவுகளின் அடர்த்தியே உயர்வாகக் காணப்படுகின்றமையை அவதானிக்க முடிகின்றது.

இத்தகைய வகையில் உலகளாவிய ரீதியில் திண்மக் கழிவுகள் சேகரிப்பதோடு கழிவுகள் வெளியேறும் அளவுகளைக் குறைக்க பல செயற்திட்டங்கள் விருத்தி செய்து நடைமுறைப் படுத்தப்படுகின்றது. மேலும் திண்மக்கழிவு முகாமைத்து வமானது ஒருங்கிணைந்த முறையி னூடாக கழிவு குறைத்தல், மீள்சுழற்சி, மீள்பயன்பாடு என்பவற்றுக்கு உட்ப டுத்தப் படுவதுடன் கழிவுகளான எரித்தல், நிலநிரப்புகை, வீட்டு கட்டுமானப் பொருட்களாக சக்திகளாக உருவாக்கப்பட்டு பயன் படுத்தப்படுகின்றன.

உசாத்துணை நூல்கள்:

1

அபயசேகர கே.ஏ.(2003) திண்மக்கழிவு முகாமைத்துவத்திற்கான தேசிய உபாயம் மத்திய சுற்றாடல் அதிகாரசபை சுற்றாடல் இயற்கை வளங்கள்அமைச்சு

2

Alvis E (1998) How to solve solide Naste problem
Newbury park ca :soge publications Inc

3

Debra (1997) recyeling in America A Reference hand book strong ABC-CLIO

4

WWW.Googly.com solide waste management in Canada

# தர்க்கப் படலைகள்
# Logic gates

**கு.தேனுஜா**
தரம் – 13 உ/த (2011)
யா/ஸ்ரீ சோமஸ்கந்தாக் கல்லூரி
புத்தூர்.

தர்க்கபடலைகளை இணைத்துக் கொள்வதற்கும் இலகுவாகக் கற்பதற்குமான அடிப்படை விதிமுறைகளை உள்ளடக்கியதே பூலியன் அட்சரகணிதம் எனப்படுகிறது. இம்முறையானது ஜோர்ஜ் பூலியனினால் முன்வைக்கப்பட்டதொன்றாகும். இக்கணித முறை இலத்திரனியல் உபகரணங்களை இணைக்கும் போதும் கணனியில் தர்க்க அமைப்பினை பயன்படுத்துவதற்கும் பயன்படுகிறது.

இங்கு உள்ளீடு, வெளியீடு என்ற அடிப்படையில் பூலியன் அட்சரகணிதத்தினால் இலத்திரனியல் சுற்றுக்களை இணைத்துக்கொள்ள முடியும்.


இதனடிப்படையில் பல்வேறு விதமான படலைகளை நோக்குவோம்.

(1) AND gate (பூலியன் பெருக்கல் படலை)
(2) OR gate (பூலியன் கூட்டல் படலை)
(3) NOT gate (பூலியன் நிரப்புகைப் படலை)
(4) NAND gate
(5) NOT OR gate
(6) X OR gate
(7) X NOT OR gate

இவற்றுள் முக்கியமானவை முதல் மூன்று "gates" உம் ஆகும்.


## தர்க்கப் படலைகளும் அதன் குறியீடுகளும் அதன் பெறுமானங்களும்

(1) **AND gate** ( P ^ Q )




| உள்ளீடு | | வெளியீடு |
|---|---|---|
| P | Q | $(P \wedge Q)$ |
| 0 | 0 | 0 |
| 0 | 1 | 0 |
| 1 | 0 | 0 |
| 1 | 1 | 1 |

(2) **OR** gate - $(P \vee Q)$





| உள்ளீடு | | வெளியீடு |
|---|---|---|
| P | Q | $(P \vee Q)$ |
| 0 | 0 | 0 |
| 0 | 1 | 1 |
| 1 | 0 | 1 |
| 1 | 1 | 1 |

(3) **NOT** gate - NP





| உள்ளீடு | வெளியீடு |
|---|---|
| P | NP |
| 0 | 1 |
| 1 | 0 |

(4) **NAND** gate - N ( P ^ Q )





| உள்ளீடு | | வெளியீடு |
|---|---|---|
| P | Q | N( P ^ Q ) |
| 0 | 0 | 1 |
| 0 | 1 | 1 |
| 1 | 0 | 1 |
| 1 | 1 | 0 |

(5) **NOT OR** gate - N ( P∨Q )





| உள்ளீடு | | வெளியீடு |
|---|---|---|
| P | Q | N( P∨Q ) |
| 0 | 0 | 1 |
| 0 | 1 | 0 |
| 1 | 0 | 0 |
| 1 | 1 | 0 |

(6) **X OR** gate - ( $P \overline{\vee} Q$) / X ( P ∨Q)



| உள்ளீடு | | வெளியீடு |
|---|---|---|
| P | Q | X( P∨Q ) |
| 0 | 0 | 0 |
| 0 | 1 | 1 |
| 1 | 0 | 1 |
| 1 | 1 | 0 |

(7) X NOT OR gate - NX ( P∨Q )





| உள்ளீடு | | வெளியீடு |
|---|---|---|
| P | Q | NX( P∨Q ) |
| 0 | 0 | 1 |
| 0 | 1 | 0 |
| 1 | 0 | 0 |
| 1 | 1 | 1 |


Note : NX ( P∨ Q ) = இருபால் நிபந்தனை வாக்கியம்

பின்வரும் குறியீட்டு வாக்கியங்களுக்கு தர்க்கப் படலைகளை அமைத்துக் காட்டுதல்.


(1) [ (P ^ Q ) ^R]




(2) [P^ (Q ^ R ) ]





(3) ( P∨NQ)





(4) ( NP∨NQ )





(5) (NP ∧ NQ )





(6) ( NP∧Q )





(7) ( P∧ NQ )




(8) $[(P \wedge NQ) \wedge NR]$




(9) $N(P \wedge NQ)$




(10) $N(P \vee NQ)$





### உட்கிடை வாக்கியங்களுக்குத் தர்க்கப் படலை அமைத்தல்

உட்கிடை வாக்கியங்களுக்கு நேரடியாக தர்க்கப்படலை அமைக்க முடியாது. இணைப்பு மாறிலி, உறழ்வு மாறிலி, மறுப்பு மாறிலி என்பனவற்றைப் பயன்படுத்தி தரப்பட்ட உட்கிடை வாக்கியத்திற்கு சமனான வாக்கியத்தை அமைத்த பின்னரே தர்க்கப் படலையை அமைக்க முடியும்.


(1) $(P \rightarrow Q)$ என்பதற்குச் சமனாக பின்வரும் குறியீடுகள் அமையும்

$$(P \rightarrow Q) = (NP \vee Q) = N(P \wedge NQ)$$

$(NP \vee Q)$





$N(P \wedge NQ)$





(2) $(NP \rightarrow NQ)$ என்பதற்குச் சமனாக பின்வரும் குறியீடுகள் அமையும்

$(NP \rightarrow NQ) = (P \vee NQ) = N(NP \wedge Q)$

$(P \vee NQ)$





$N(NP \wedge Q)$





(3) $N(P \rightarrow Q)$ என்பதற்குச் சமனாக பின்வரும் குறியீடுகள் அமையும்.
$N(P \rightarrow Q) = N(NP \vee Q) = (P \wedge NQ)$

$N(NP \vee Q)$




$(P \wedge NQ)$





(4) $N(NP \rightarrow Q)$ என்பதற்குச் சமனாக பின்வரும் குறியீடுகள் அமையும்

$N(NP \rightarrow Q) = N(P \vee Q) = (NP \wedge NQ)$

$N(P \vee Q)$





$(NP \wedge NQ)$





(5) $N(P \rightarrow NQ)$ என்பதற்குச் சமனாக பின்வரும் குறியீடுகள் அமையும்

$N(P \rightarrow NQ) = N(NP \vee NQ) = (P \wedge Q)$

$N(NP \vee NQ)$





$(P \wedge Q)$




பின்வரும் குறியீடுகளுக்குத் தர்க்கப் படலை அமைத்துக் காட்டுக.


(1) [ (P∧Q)∧(P∨Q) ]




(2) [ ( P∨NQ )∨( Q∧P ) ]





(3) [ (P∨P )∧ ( NP∧ P ) ]



**(4) [ ( P ⟶ Q ) ∧ ( NQ ⟶ NP ) ]**


முறை I

[ (NP∨Q ) ∧ (Q∨NP ) ] இரண்டும் உறழ்வு வாக்கியம்





முறை II

[N ( P∧NQ ) ∧ N ( NQ∧P ) ]





முறை III

[ ( NP ∨ Q ) ∧ N (NQ∧ P ) ] உறழ்வும் இணைப்பும் சேர்ந்தது.



(1) [ N (P ⟶ Q ) ∨ ( P ⟷ Q ) ]

[N ( NP ∨ Q ) ∨ NX (P ∨ Q ) ]




இவ்வாறு உண்மை அட்டவணை மூலம் தர்க்கப் படலையைப் பயன்படுத்தி வாய்ப்புப்பார்த்தல் முறையும் உள்ளமையைக் காணலாம்.

(உ + ம்):

[ ( P ∧ Q ) ∧ R ]

| | | | | |
|---|---|---|---|---|
| 0 | 0 | 0 | 0 | 0 |
| 0 | 0 | 0 | 0 | 1 |
| 0 | 0 | 1 | 0 | 0 |
| 0 | 0 | 1 | 0 | 1 |
| 1 | 0 | 0 | 0 | 0 |
| 1 | 0 | 0 | 0 | 1 |
| 1 | 1 | 1 | 0 | 0 |
| 1 | 1 | 1 | 1 | 1 |

↑ வாய்ப்பற்றது

உசாத்துணை நூல்கள்


1.BIT Division

ESOFT COMPUTER studies (pvt)Ltd. 2000-20009

Bachelor of Information Technology

2கலாநிதி பி.எம்.ஜமாஹிர் மெய்யியல் உளவியல் தர்கப்படலை

பேராதனைப்பல்கலைக்கழகம்

3இலங்கைக் கல்விவெளியீட்டு நிலையம்

Logic gate ICT

# கிறிஸ்தத்வைதம்

இ.மேரி தர்மினி

புனித பவுலியார் உரோமருக்கு எழுதிய கடிதத்தை அடிப்படையாகக் வைத்து ஓர் இறையியல் விளக்க உரையாக இக்கிறிஸ்தத்வைதம் அமைந் துள்ளது. மிகப் பரந்த கருத்துக்கள் பொதிந்துள்ள கிறிஸ்தவ வாசகமாக உள்ளது.இது பவுலின் திவ்விய வாசகத்தை அடிப்படையாக் கொண்டு எழுதப்பட்ட ஓர் ஒழுங்கமைப்பு இறையியலாகும். இது பவுலின் மையச் செய்தியான கிறிஸ்துவுடன் ஒன்றிப்பு என்ற பொருளையும் தூய ஆவியாரின் வல்லமையினால் ஒரு கிறிஸ்தவன் இறைவனின் மாபெரும் பணியாகிய படைப்பிலும் புதிய படைப்பிலும் ஈடுபடச்செய்கின்றதென்பதையும் விளக்குகிறது.

இது பின்வரும் வகையில் நோக்கப்படுகின்றது. இறையியல் ஆணையுரிமையின் மூலாய்கள் தம்மை வெளிப்படுத்தும் கடவுள், படைப்பு, மனிதன், பாவம், கிறிஸ்தியல், கிறிஸ் துவின் திருப்பணி, பரிசுத்தஆவியானவர் முத்தியாக்கம், கிறீஸ்தத்வைதம், கிறீஸ் தவதிருவருட்சாதனம், திருப்பணிவிடை, நம்பிக்கையில் வாழுதல், திரித்துவம்.

இறையியல் என்பது இறைவனைப் பற்றிய ஆய்வறிவு அல்லது படிப்பு .Thelogy என்ற பதத்தில் Theos என்பது இவ்வுல கத்தைக் குறிக்கும் கிரேக்க பதம். Logia என்பது ஆய்ந்தறிவை துருவி யாய்ந்ததைச் சொற்களினால் விளக்கிக்காட்டுதல் என்பதே. கிறிஸ்தவ இறையியல் இறைவனையும் அவர் செயல்க ளையும் பற்றியும் குறிப்பாக அவர் உலகத்தோடும் மனிதனோடும் தொடர்புகொண்ட செயல்களைப்பற்றியும் மனித சொற்களால் விளக்கிக் கூற முயல்கிறது. மேலும் கிறிஸ்தவ இறையியல் ஆதலால் யேசுக் கிறிஸ்து வின் வழியாக இறைவன் தம்மை முழுவதுமாக மனிதருக்கு வெளிப்படுத்தினார். இறைவன் பற்றிய நல்ல செய்தி ரோமருக்கு எழுதப்பட்ட கடிதத்தில் விரிவான பொருளாய்வும் விளக்கமான இறையியல் கருத்தும் பொதிந்துள்ளது. இறையியல் கிறிஸ்துவைப் பற்றியது. வேதத்தை அடிப்படையாகக்கொண்டது. அறிவிக் கப்பட வேண்டியது என்கிறது. ஒரு மனிதன் கிறிஸ்துவைத் தன் வாழ்வின் மையமாக ஆக்கத் தீர்மானித்த போது கிறிஸ்தவ விசுவாசத்தைப் பற்றி அவன் போதியளவு அறிந்திராது இருக்கலாம். இருந்தும் அவன் திருமறையைப் படிப்பதன் வழியாகவும், மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்வதினாலும் தன் கிறிஸ்தவ நண்பர்களின் சாட்சியான வாழ்கையினூடாகவும் கடவுள் எப்படிப் பட்டவர் அவர் என்ன செய்கிறார் என்பதைத் தெளிவாகப் புரிந்து கொள்ளவும் ஆழமாக அதனை அனுபவிக்கவும் செய்கிறான்.

திருச்சபையின் ஆதிகாலம் தொட்டு தாயிகள் விசுவாசத்தை வரையறுப்பது முக்கியம் என கிறிஸ்த

வர்கள் உணர்ந்தனர். ஒரு மனிதன் திருமுழுக்குப் பெற முன் யேசுக்கிறிஸ்து என் ஆண்டவன் என அறிக்கை செய்யும்போது அதுவே கிறிஸ்தவ இறையியலின் தெளிவானதும் சுருக்கமானதுமான வாசகமாகின்றது.. இவ் இறையியல் வெளிப்போட்டு இறையியல். இயற்கை சார்ந்து இறையியல் எனலாம். எனவே கிறிஸ்தவர்களுக்கு கிறிஸ்துவைத் தவிர்த்த இறையியல் இல்லை.

தமது இறையியல் அறிவிற்கு மூலாதாரமாய் இருப்பது எது? ரோமருக்கு எழுதப்பட்ட கடிதத்தின் தொடக்கத்திலேயே நற்செய்தி நமக்கு வேதாகமத்தின் வழியே அறிவிக்கப்பட்டதென பவுல் கூறுகின்றார். எங்கள் இறையியல் இயல்பானதும் மெய்மையுடையதுமாய் இருக்கவேண்டும் எனில் அது அதிகாரமுடையதாய் இருக்க வேண்டும். இவ் அதிகாரத்தின் ஒரே நம்பகமான மூலாதாரம் கடவுள். ஆகவே உண்மையான இறையியலின் இறுதியான அதிகாரம் கடவுள். அவரே தம்மைக் கீறிஸ்துவில் வெளிப்படுத்திவரும் பரிசுத்தாவியின் வல்லமையின் வழியாகத் திருச்சபையில் எங்களுடன் பிரசன்னமாயிருப்பவரானார்.

திருமறையை வழிபடுவதற்குரிய ஓர் உருவப் பொருளாக ஆக்காமலிருக்க வேண்டுபவர். நமது திருமுறை ஒரு சாதாரண புத்தகமென்றும் உலக சமய இலக்கியநூல்களில் ஒன்றாகும் எனவும் சிலர் கூறுவர். வரலாறு, கவிதை, சட்டாதலீகள், சமுதாயப் போதனை ஆகியனவும் எல்லாவ ற்றிற்கும் மேலாக யேசுக்கிறிஸ்துவின் வாழ்க்கையும் போதனையும் பற்றிய வரலாறும் திருமுறை நூலில் அடங்கி யுள்ளன என்று ஒப்புக்கொள்கின்றனர். இருப்பினும் வேதாகமக் கடவுளின் உயிருள்ள வாக்கு எழுதப்பட்ட இறைவாக்கு, அறிவிக்கப் படும்வாக்கு, தெய்வீக ஏவுதலின் பொருள், விசுவாசத்தின் செயற்பாடு ஆகியவற்றின் தலைசிறந்த அளவுகோல் என்றும் கூறலாம். எப்போதும் இறையிய லாளரின் கடமை தன்காலத்தில் வாழும் மக்களுக்கு வார்த்" தையின் செய்தியை பொருத்தமானதாக ஆக்குவது. அவர்களின் சொந்த பண்பாட்டு சூழமைவில் அவர்கள் விளங்கத்தக்க மொழியில் எடுத்து அறிவிப்பது.

கடவுளைப் பற்றி அறியக் கூடியவை அனைத்தும் மக்களுக்கு வெளிப்படையாயிருக்கிறது. கடவுளே அதை அவர்கள் முன் வெளிப்படையாகக் காட்டியிருக்கிறார். கண்ணுக்குத் தெரியாத அவருடைய பண்புகளும் அதாவது அவருடைய வரம்பில்லா வல்லமை தெய்வீகத்தன்மை ஆகியவை உலகம் படைக்கப்பட்டது முதல் அவருடைய படைப்புக்கள் மூலம் தெளிவாகக் கண்டுணரப்பட்டு வருகின்றன. (உரோ 19-20)

பல்வேறு சமயங்களைச் சேந்தவர்கள் கடவுள் இருக்கிறார் என்பதை ஏற்றுக்கொள்கின்றனர். ஆனால் இவர்கள் யாவரும் கடவுள் என்ற பதத்தை ஒரே கருத்துடன் பாவிக்கின்றனரா? கடவுள் தம்மை முழுமையாக வெளிப்படுத்தும் போது அவர் தன் மகன் யேசுக் கிறிஸ்து வழியாகவும் பரிசுத்த ஆவியானவரின் வல்லமை வழியாகவும் தம்மை வெளிப்

படுத்தினார் என்கிறார் பவுல். கிறிஸ் தவர்களில் விசுவாச அறிக்கையில் முதல் வாசகம் கிறிஸ்துவின் தந்தையாம் கடவுளை நாங்கள் விசுவாசிக்கின்றோம் என்பது கடவுள் தம்மை பல்வேறு வழிகளில் வெளிப்படுத்துவதை வேதாகமம் விளக்குகிறது. கடவுள் தம்மை இயற்கையில் வெளிப்படுத்தினார் (உரை:1:20) வரலாற்றின் நிகழ்வுகளில் ஆவிகளின் வழியாக காட்சியிலும் வாக்கிலும், எழுதப்பட்ட வார்த்தையிலும், பரிசுத்த ஆவியானவர் மூலமாகவும் வெளிப்படுத்தினார்.

அத்வைத வேதாந்தி கடவுளை பரம்பொருளாகிய பிரமனை நாம் விவரிக்க முடியாது என்றும் எதிர் மறையாகவே அவரை விசுவாசிக்கலாம் என்றும் கூறுகின்றார். யாராவது கடவுளை விபரிக்க முயன்றால் நாம் கூற வேண்டியது "நேதிதே, அதுவல்ல இதுவல்ல' என்பதே. ஆனால் கிறிஸ்தவ இறையியல் கடவுளுக்குச் சில பண்பு களைச் சேர்த்துள்ளது. இவற்றுள் கடவுள் ஆவியாயிருக்கிறார், முடிவில்லா தவர், நிலைபேறுடையவர், ஞான முள்ளவர், வல்லமையுடையவர், பரிசுத்தர், நேர்மையுடையவர், நற்பண் புள்ளவர் இவ்வாறே கூறிக்கொண்டு செல்லலாம்.

பவலடியார் உரோ 1:25 இல் கடவுளை குறிப்பதற்கு படைத்தவர் என்ற சொல்லைப்பாவித்தனர். வேதாகமம் இப்பிரபஞ்சம் கடவுளால் படைக்கப்பட்டது என உறுதியாக் கூறுகிறது. ஆதியாகமத்தின் வரலாற்றில் ஆதியில் கடவுள்தான் இருந்தார். வேறொன்றும் இருக்கவில்லை. அவருடைய வாக்கின் வழியாகவே அனைத்தும் படைக்கப்பட்டன என்று கூறப்பட்டுள்ளது. தொடக்கநூலின்படி கடவுள் தாம் உண்டாக்கிய அனைத்தையும் பார்த்தார். அது மிக்க நன்றாக இருந்தது.(தொ.நூ 1:31)

இவ்வுலகம் 4004 ஆம் ஆண்டில் படைக்கப்பட்டது என பேராயர் அஷ்ஹெர் கூறுகிறார். கடவுள் இவ்வுலகைப் படைத்தார். கடவுள் வெறுமையில் இருந்து இவ்வுலகத்தைப் படைத்தார். கடவுள் தமது சித்தப்படி உண்டாவதாக என்று சொன்னார். அதன் வழி உலகத்தை உண்டாக்கினார். அது நல்லாயிருந்தது. படைப்பின் மகுடமாக மனிதனை ஆதியில் படைத்தார் என J என்னும் ஆசிரியர் கூறுகிறார். படைக்கப்பட்ட இவ் உலகில் கிறிஸ்து மனிதனாக ஊனுடன் வருகை தந்ததினால் ஆவியின் முழு வாழ்வில் மனிதன் பங்கெடுக்க கடவுள் ஓர் உறுதியான செயல் எடுத்தார் என்பதையும் காண்கிறோம்.

உரோமருக்கு எழுதப்பட்ட கடிதத்தில் முதல் 3 அதிகாரங்களும் மனிதனின் இயல்பை பற்றி ஒரு பயங்கரமான காட்சியைக் காட்டுகின்றன. கடவுள் மனிதன் எவ்விதம் வாழவேண்டும் என எண்ணினாரோ அதற்கு எதிர்மாறாகவே வாழ்ந்து வந்தான்.

கடவுள் மனிதனைத் தம்மை அறியக்கூடிய இயல்புடன் படைத்தார்.

இருந்தும் அவருக்கு எதிராக மனிதன் போர்தொடுத்தான். கடவுளால் படைக் கப்பட்ட இம்மனிதன் கடவுளுடன் இணைந்திருந்தான். இதனால் அவன் பெற்ற இன்பத்தையும் கூட்டுறவைப் பேணிக்காக்கும் வாய்ப்பும் அவர்களுக் களிக்கப்பட்டது. ஆனால் மனிதன் கடவுளுடன் இறுமாப்போடு போராடிய மையால் அவருடன் தனக்கிருந்த உறவை முறித்துவிட்டான்.

மனிதன் சுயநலத்துடன் தன் சுதந்திரத்தைத் தவறாக பாவிப்பதனால் கடவுளின் ஐக்கியத்திலிருந்து பிரிக்கப் பட்டான். ஆனால் மனிதனில் கடவுள் வைத்த அன்பு இந்த ஐக்கிய முறிவை அதே நிலையில் இருக்கவிடவில்லை. மனிதனை மீண்டும் தன் கூட்டுறவில் சேர்க்க கடவுள் தாமே முதல் முயற்சி எடுத்தார். அதனால் தம் குமரனை இவ்வுலகிற்கு அனுப்பினார். யேசுவை உண்மையான ஆதாம் என நாம் காணும்போது அவர்தான் மனிதன் எப்படி இருக்கவேண்டும் என்பதை காட்டும் ஓரமைப்பு என நாம் சிந்திக்கவேண்டும்.

எல்லா மனிதரும் ஒருவரும் தவிர்க்கப்படாமல் பாவிகள் கடவுளிட மிருந்து விலகி அவர் இருக்கவேண்டிய இடத்தில் வேறொன்றை வைப்பதுதான் பாவம். மனிதனின் பெருமை பண்பான பாவத்தன்மை ஆதாமோடு அவனின் வீழ்ச்சியோடும் தொடர்புபடுத்தப் பட்டிருக்கின்றனர். எனத் தொடக்க நூலில் விளக்கப்பட்டிருப்பதைக் காண்கிறோம். பாவம் என்பது மனிதன் கடவுளுக்கு கீழ்படியாமல் அவருக்கு எதிராகப் புரட்சி செய்து தனது வாழ்க்கையின் தலைவனாகத் தன்னை ஆக்க முயல்வதே பாவம். இது தொ.நூ 3:5 இல் நடைபெற்றுள்ளது.

மனிதனின் எண்ணத்திலும் அவன் சித்தத்தில் இருந்தே பாவம் வருகிறது. அதாவது மனிதன் தனக்குப்பின் தான் விரும்பியவர்களுக்கு முதன்மை அளிக்கும் போது பாவம் தோன்றுகிறது. பெரும்பாலான இந்து மக்கள் எதிலிருந்து விடுதலை பெறவேண்டும் என நினைக்கிறீர்கள்? பாவம் என்ற நிலையிலிருந்து அல்ல. கர்மாவிலிருந்தே விடுதலை பெற நாடுகின்றனர். கிறிஸ்தவர்களாக அநியாயம், அக்கிரமம், அடக்கிஒதுக்கும் தன்மை இன்றைய உலகைக் கெடுத்து வருவதால் இவற்றிற்கெதிராக போராட நாம் அழைக்கப்படுகின்றோம். அதே நேரத்தில் இத்தீமையின் ஆழமான காரணங்களை தாம் கண்டு இவற்றை அகற்றுவதற்கு கடவுள் தந்த வழியை நாம் ஏற்க வேண்டும்.

கடவுள் மனிதனைப் படைத்ததின் நோக்கம் அன்பு. நம் சொந்த இயல்பாகிய இவ் அன்பில் பங்கு கொள்வதற்கு ஒருமுழு உலகம் இருக்கவேண்டும் என்பதே அவர் விருப்பம். கடவுள் மனிதனை தம் சொந்த சாயலில் படைத்தார். கடவுள் கிறிஸ்துவை அனுப்பியதன் நோக்கம் மக்களைப் பாவத்திலிருந்து மீட்டு மீண்டும் தன்னுடன் ஒன்றித்து வாழ வழிவகுக்க வேண்டும் என்பதற்கே. யேசு மெசியாவாக வந்த போது இறைவாக்கு, குருத்துவம், அரசபணி ஆகிய பணிகளையும் தமக்குள் ஒன்றாக்கினார். கிறிஸ்துவின் மரணம் மன்னிப்பைக்

கொண்டு வந்ததென்று. உண்மைக்குப் புதிய ஏற்பாடு மீண்டும் மீண்டும் சான்றளிக்கிறது.

யேசு பெருமான் தான் பணிவிடை பெறுவதற்கென்று பணிவிடைபுரியவும் பலருடைய மீட்பிற்கு விலையாகத் தம் உயிரை அளிக்கவும் வந்ததாகக் கூறினார். (மாற் 10:45)எனவே விசுவாசத்தினால் இறைவனுக்கு ஏற்புடையவர்களான நாம் ஆண்டவரான யேசுக்கிறிஸ்துவின் வழியாக கடவுளுடன் சமாதானம் கொண்டு இருக்கிறோம். கிறிஸ்து ஓர் உயிர் மீட்டவர். பாவக்கடலில் இருந்து நம்மை மீட்டவர். எங்களை மீட்கவே தமது உயிரை ஈர்ந்தார்.(கொ.லோ.2:13)

முதல் கிறிஸ்தவர்கள் நடத்திய வாழ்க்கையில் 4 சிறப்பான பண்புகள் காணப்பட்டதென்பதை நாம் அப்2:42ல் காணலாம். அப்போஸ்தவரின் பரப்புரையைக் கேட்பதிலும் நட்புறவுடன் உரையாடுவதிலும் அப்பம் பிட்குவதிலும் செபத்திலும் நிலையாய் இருந்தனர் என்பதே. இந் நான்குபண்புகளும் ஒரு கிறிஸ்தவனின் அன்றாட வாழ்க்கை யிலும்காணப்பட வேண்டும். தஞ்சியாய் பக்கிரியாய் என்பவர் கிறிஸ்தவ வாழ்க்கையை கிறிஸ்தத்வைதம் எனக் குறிப்பிட்டார். இப்பதத்தின் மூலம் ஒருவன் கிறிஸ்துவுடன் விசுவாச ஒன்றிப்பினால் வாழும் வாழ்க்கையையே கருதுகிறார். இது உலகத்தின் நடுவே வாழ்ந்து பல இடங்களால் உலகோடு இணைந்து அதனை அமைக்கும் வாழ்வே என்பதாகும். அன்பின் வழியாக கடவுள் இப்பிரபஞ்சத்தை படைத்து அதனுள் மனிதனைப் படைத்தார். அன்பினால் எங்களை மீட்கிறார். தன் இயல்பின் அன்பையும் ஆனந்தத்தையும் பகிர்ந்து கொள்ளும்படி கிறிஸ்துவிற்குள் எங்களை அழைக்கிறார்.

கிறிஸ்த்வைதத்தில் தேவ ஆவியரின் வல்லமையினால் கிறிஸ்துவோடு ஒன்றிணைந்திருப்பின் அனுபவத்தினை அறிந்ததும், அந்த அன்பு பரவி, பிரபஞ்சத்தையும் தனக்குள் அடக்கும் வரை நாம் திருப்தியோடு இருக்கமாட்டோம். நாம் கிறிஸ்துவிற்குள் அழைக்கப்படுகின்றோம். இவ்வுலகிலிருந்து ஒதுங்கிய வாழ்விற்கல்ல. தேவ ஆவியின்வல்லமையால் நிரப்பப்பட்டு எங்கள் வழியாக உலகம் அனைத்தும் மாற்றியமைக்கப்பட்டு படைத்தவரின் நோக்கை நிறைவேற்றத்தக்க வாழ்கை வாழும்படி அழைக்கப்பட்டோம்.

கிறிஸ்துவில் நாம் கொண்டுள்ள விசுவாசத்தின் அடிப்படையில் தோன்றியதே எங்கள் நம்பிக்கை. இந்த நம்பிக்கை எங்களுக்கு திடமனதை அருளுகிறது. ஏனெனில் கடவுளின் அன்பு எங்கள் உள்ளங்களில் பரிசுத்த ஆவியால் ஊற்றப்பட்டது. ஆகவே கிறிஸ்தத்வைதம் என்பது எங்கள் வாழ்வின் ஒவ்வொரு பகுதியிலும் தனிப்பட்ட வாழ்வு, சமூகவாழ்வு, நாட்டில் உலகில் வாழும் வாழ்க்கையில் கிறிஸ்துவிடமிருந்து எங்களை ஒன்றுமே பிரிக்கமுடியாது என்பதேயாகும்.

உசாத்துணை நூல்கள்

1.அம்பலவாணர் டி.ஆர் கிறிஸ்த்வைதம் தமிழ் இறையியல் நூற்பதிப்புக் கழகம் கிறிஸ்தவ இறையியல் மன்றம். சுன்னாகம் 1977

# சீக்கியமும் குருகிரந்த சாகிப்தும்

**எஸ்.கஜநாத்**
2 ஆம் வருடம்
யாழ் . பல்கலைக் கழகம்

**சீ**க்கியர் என்பவர்கள் சீக்கிய மதத்தினை பின்பற்றுபவர்கள் ஆவார். இது பஞ்சாபி மொழியில் ‘சீக்கி ‘என்று அழைக்கப்படுகின்றது. இச் சீக்கிய மதமானது $15^{ம்}$ $16^{ம்}$ நூற்றாண்டுகளில் இந்தியாவில் உள்ள பஞ்சாபி எனும் இடத்தில் தோன்றிய சமயம் ஆகும். இன்றைய நிலையில் நான்கு முக்கிய மதங்களில் ஒன்றாகவும், ஏராளமான பின்பற்றுபவர்களைக் கொண்டும் சிறப்பாக விளங்கும் மதமாக இச்சீக்கிய மதம் விளங்குகின்றது. இச்சீக்கிய மதத்தவர் தமக்கே உரித்தானசில இயல்புகளையும், பண்புகளையும் கொண்டிருப்பதுடன் மற்றவர்களுக்கு முன்னுதாரணமாக விளங்கும் தன்மை யினையும் கண்டு கொள்ளலாம். சீக்கிய மதத்தின் முதல்வராக “குரு நாணக்தேவ்’ விளங்குவதுடன் சீக்கியரின் புனித நூலாக குருகிரந்த சாகிப் அல்லது ஆதி கிரந்த விளங்கு வதுடன் இந் நூலானது பல்வேறுபட்ட உய்மைகளையும், பிறமத கருத்துக் களையும் உள்ளடக்கிய புனித நூலாக விளங்குகின்றது.

இச் சீக்கியம் என்ற சொல் லானது தன்னுடைய முதல் பொருளினை சமஸ்கிருத சொல்லான “SISYA” எனும்சொல்லில் இருந்து பெற்றது. இதன் பொருள சீடர், கற்பவர் அல்லது அறிவுரை என்றவாறாக கொள்ளப்படுகின்றது. சீக்கியலாளர் களால் பின்பற்றப்படுகின்ற புனித நூலான குருகிரந்த சாகிப் புனிதநூலாக மட்டும் அல்லாது சீக்கியர்களின் கடைசி வார்த்தைகளும் ஆகும். இந் நூலானது 1469-1708 ஆம் ஆண்டு வரையான காலத்தை சேர்ந்த சீக்கிய குருமார்களால் எழுதி தொகுக்கப் பட்டதாகும். இது இறைப்பாடல்களின் தொகுப்பாக விளங்குவதுடன் கடவுளின் பண்புகளையும், கடவுளின் பெயர்களையும் ஏன் தியானிக்க வேண்டும் என்பவற்றை விபரிப்பதாகவும் விளங்குகின்றது. எந்த ஒரு ஜாதி, குழு அல்லது மனித இனத்தை எந்த ஒரு காரணத்தினாலும் பாகுபடுத்தல் என்பதை முற்றிலும் நம்பக்கூடா, உலக வாழ்க்கையினை துறத்தல் போன்ற வற்றை விடுத்து பொதுவான நடை முறையை பின்பற்றும் சமயமாகவும் இது விளங்குகின்றது.

சீக்கியர்கள் பொதுவாக கடுமையான உழைப்பாளர்கள், நேர்மையானவர்கள் என்ற கருத்துக் களும் பிரசித்தி பெற்று விளங்குகின்றது. ஆனாலும் சீக்கியர்களது நம்பிக்கையின் அடையாளமாக விளங்குகின்ற ஐந்து பொருட்களும் முக்கியம் பெறுவதுடன் இவற்றைப் பொதுவாக எல்லா

நேரங்களிலும் ஒருவர் அணிந்திருக்க வேண்டும் என்று 10வது சீக்கிய குரு 1699ல் பைசக்தி நாளில் அமிரித் சன்ஸகரில் கூறினார். இவை சீக்கியத் தின் நோக்கங்களை அடையாளப்படுத் தவும், வெளிப்படுத்தவும் இந்த சின்னங்கள் அணியபடுகின்றனவாம் என்ற கருத்தினை இவ் ஐந்து பொருட்களும் கொண்டிருக்கின்றன. அவையாவன:

1. கேஷ் (வெட்டப்படாத தலைமுடி, பொதுவாக கட்டப்பட்டு சுருட்டிய சீக்கிய தலைப்பாகை, டாஸ்டர் என்பதன் கீழ் வைக்கப்படும்)

2. கங்கா (மரத்திலாலான சீப்பு, இது பொதுவாக டாஸ்ரரின் கீழ் வைக்கப்படும்.

3. கச்சா ஹெரா (பொதுவாக இடுப்பிலிருந்து முட்டி வரை இருக்கும் ஆடை, இது வெள்ளை நிறத்தில் காணப்படும்)

4. கடா (இரும்பிலாலான கையணி இது வெண்கல கைவாளாக போரில் பயன்படக்கூடியது. பெரியவை டாஸ்டரில் அணியப்பட்டு தூக்கி எறியக்கூடிய ஆயுதமாக பயன்படுத்தப்படும்.

5. கிர்ப்பான் (வளைந்த கத்தி. இதுபல வகையில் காணப்படும். சிறிய கூர்மையான கத்தியையும் பஞ்சாப்பைச் சேர்ந்த சீக்கியர்கள் பாரம்பரிய வளைந்த கத்தியையும் அணிவார்கள்

இச் சீக்கிய மதமமானது உருவ வழிபாட்டை ஆதரிக்கவில்லை. சீக்கியர்கள் சூரியன், நதி, மரத்தினை வழிபடுவதனை விடுத்து ஆதிதிரந் தத்தை வழிபட்டார்கள். இதனை போல இந்து சமயத்தில் காணப்படும் அந்தணர்களைப்போல் சீக்கிய மதத்தில் உயர்ந்தசாதி என்று ஒன்று இல்லை. குருவின் உதவி சிறார்களுக்கு தேவை என சீக்கியம் கூறுகின்றது. இதனால் தான் சீக்கிய சமயத்தை 'நாமார்க்கம்'' என அழைப்பதுண்டு. இங்கு நாமம் என்பது ஆன்மாவின் அழுக்கு, ஆணவம், கோபம், ஆசை, பற்று, தற்பெருமை முதலியவற்றை அகற்ற இது பயன்படுகின்றது என கூறப்படுகின்றது.

சீக்கியர்களின் வழிபாட்டுத் தலங்கள் ''குருத்துவாராக்கள்'' என்று அழைக்கப்பட்டது. இதற்கு குரு தங்குமிடம் எனும் பொருள். இவ்வாறு புனிததன்மை பெற்ற இடத்துக்கு சீக்கியர்கள் குழந்தைகளை அழைத்துச் செல்ல அனுமதி அளிக்கப்பட்டது என்பதில் இருந்து பொதுவாக மக்களோடு ஒன்றிணைந்த சமயமாக இது விளங்குவதைக் காணலாம். கூட்டிச் செல்லும் குழந்தைகளை ஆதி கிரந்தத்தை படிக்க சொல்லுவார்கள். பாரம்பரிய முறைப்படி திருமணச்சடங்கில் ஆதி கிரந்தத்தை சுற்றி நான்கு முறை வரவேண்டுமாம். அதனைப்போல் மரணமடைந்தால் அதில் உள்ள வாக்கியங்களை படிப்பார்கள். இறந்த வருடைய சாம்பலை கங்கையிலோ / புனித நதியிலோ கரைக்கும் பண்பு காணப்பட்டது.

இப்புனித நூலான ஆதிகிரந்தநூல் இந்துக்கள் மற்றும் இஸ்லாமியர்கள் , செம்மாமர்கள் மற்றும் தீண்டாதவர்கள் உள்ளிட்ட வெவ்வேறு மத, சமூக பின்புலத்தை கொண்டவர் களையும் அவர்களது கருத்துக்களும் வணங்கப்பட்ட உயரிய தன்மையினை சீக்கிய மதத்தில் காணலாம். இவற்றை போல இறைவனை வழிபடுவதற்கும் தொழுவதற்கும் ஏற்ற நேரமாக காலை வேளையை தெரிவு செய்ததுடன் சீக்கியர்களால் "அமுதசரசு, அனந்தபூர், பாட்னா, நன்தெது எனும் நான்கு அரசிருக்கைகள் சிறப்பாக கூறப் படுகின்றன. எல்லா உயிர்களுக்குமாக சீக்கிய கோவில் கதவுகள் பாகுபா டின்றித் திறந்துள்ளது. அனைவரையும் சமமாக கருதி அனைவருக்கும் சுவர்க்க ஒளி உண்டு என கூறி அனைவரையும் பிரார்த்தனைகளில் ஈடுபட சீக்கியக் கோவில்கள் அனுமதியளிக் கின்றன.சீக்கியம் மனித சமூகத்தை ஓர் உன்னத எண்ணக்கருவாக ஏற்றுப் போற்றுவதுடன் ஒருமித்து இருந்து உணவு உண்ணும் பழக்கத்தை "லங்கார்" என அவர்களது மொழியில் போற்றி பேணி வருகின்றார்கள்.

இவ்வாறு சீக்கியர்கள் புனிதத்தன்மையை பின்பற்றுபவர்களாக காணப்படுகின்றனர். ஏனெனில் குருகிரந்த சாகிப் எப்போதும் குருந்துவராவின் மையத்தில் டாக்த் (ஆசனம்)எனும் உயர்ந்த பீடத்தில் வைக்கப்பட்டிருக்கும். அத்துடன் சீக்கியர்கள் குருகிரந்தத்தின் முன்னிலையில் அவர்கள் தலைமுடி காலணிகளை அகற்றிவிட்டே இருப்பார்கள். அதன் முன்பு வரமுன் அவர்கள் குளித்துவிட்டு வருவதுடன் குரு கிரந்தத்துக்கு வணக்கமும் செலுத்துவார்கள். குருகிரந்தத்தை கழுவாத கைகளால் தொடுவதோ அல்லது தரையில் வைப்பதோ குற்றமாகும். இதனால் இது தலைமீது வைத்து கொண்டு செல்லப்படும். தூசி, வெப்பம், மாசுக்கள், போன்றவற்றை தடுப்பதற்காக 'ரம்பாலா" எனும் பட்டு துணியால் மூடி கவனமாக பாதுகாக்கப்படுகின்றது. இவ்வாறு பயன்படுத்த முடியாத அளவுக்கு சேதமடைந்த நூலின் பிரதிகள் அச்சிடப்பட முடியாத நிலையில் இறந்தவருக்கு நடைபெறும் மரியாதையுடன் தகனம் செய்யப்படும். அவ்வாறு எரிப்பதை 'அகன்பேத்' என்று அழைப்பார்கள்.

சீக்கியர்கள் பிறப்பு, இறப்பு, மீண்டும் பிறப்பு போன்றவை மனிதனின் செயலால் ஏற்படுகின்றதென்ற சமரசக் கொள்கையை கொண்ட இவர்கள் இங்கு இறைவனை அழைக்கும் 'குரு' என்ற சொல்லுக்கும் வேறுபட்ட பொருளைக் கொண்டு விளங்கினர். சாதாரணமாக குரு என்பது பிராமணர்களை, யோகம் கற்பிக்கும் ஆசிரியரை, வழிகாட்டியைக் குறிக்கும். ஆனால் சீக்கியத்தில் இரு பொருள்பட விளங்குகின்றது. Gu என்றால் இருட்டு என்றும் Ruஎன்றால் வெளிச்சம் எனினும் பொருள் படுகின்றது. இங்கு குரு என்பது எல்லா விதமான இருளினையும் போக்கி வெளிச்சத்தை வழங்குபவர் என்ற

பொருளுடன் குருநாத என்பவர் கடவுளிடம் இருந்து வந்த இறைதூதராக இறை வெளிச்சத்தை தாங்கிய உருவமாவும் விளங்குகின்றார். அத்துடன் குருநாத் என்கின்ற மேடையிலிருந்து இறைவன் பேசுகின்றான் என்பதே சீக்கியர்களது நிலைப்பாடாக காணப்படுகின்றது.

விரதங்கள், உடலை வருத்தும் தபசுகள்யாகங்கள், சடங்குகள், யோகங்கள் என்பனவற்றை சீக்கியம் மறுக்கின்றது. ஏனெனில் இவை ஒரு பொழுதும் விடுதலையான மார்க்கமாக அமையாது என்பதுடன் கடவுளை அல்லது கடவுள்மார்க்கங்களினை கல்லிலோ, சிலையிலோ, பிறமாதிரி களிலோ, படங்களிலோ, புனித மொழிகளிலோ வணங்குகின்ற நிலைப்பாட்டை சீக்கியம் எதிர்க்கின்றது. ஆனாலும் சீக்கியக் கடவுள் 'ஒருவரே என்றும் அவர் வடிவற்றவர், புகழுக்குரியவர், மேலானவர், சுயஇருப்பு உடையவர், அழிவற்றவர், பலமற்றவா, வெறுப்பற்றவர், உண்மையாய் நிற்பவர், பார்க்க முடியாதவர், வலுவற்றவர், வாகிக்கமுடியாதவா., இறப்புக்கும் முடிவுக்கும் அப்பாற்பட்டவர், வடிவமற்றவர், வர்ணமற்றவர், தாய், தந்தை, மகன் என்ற எவரும் இல்லை' போன்றவற்றுடன் உடன்படுவதோடு ஒரு சீக்கியன் மட்டுமல்ல எந்த மனித உயிரும் ஏழையாக இருந்தாலென்ன, பணக்காரணாக இருந்தாலென்ன எந்த சாதியை உடையவனாய் இருந்தா லென்ன, எந்த மொழியை, எந்தப் பாலினை உடையவனாய் இருந்தாலும் எல்லோரிடமும் சுவர்க்க ஒளி உண்டு என வலியுறுத்திக் கூறுகின்றது.

இறைவனை சொல் வடிவமாகவே கண்டனர். இதனை குரு தோவிந்தர் உருக்கிய இரும்பே இறைவன், இருபுறமும் கூர்மைகொண்ட வாளே இறைவன் பாடுவதில் இருந்து கண்டுகொள்ளலாம். உலகம் இறைவனின் தொடர்ச்சி என்றும், இறைவனும், உலகுக்குமான தொடர்பும் நெருங்கிய தொடர்பு என அடிக்கடி சீக்கியத்தில் வலியுறுத்தப்பட்டதுடன் இறைவன் உலகின் வேர், வித்து, எனப் பல இடங்களில் சுட்டிக்காட்டப்படுவதைக் காணலாம். இதனைக் குருகிரந்த பாடல்கள் இறைவனுக்கும் உலகுக் குமான இடையற்ற பரஸ்பர தன்மையினை சுட்டிக்காட்டுவதுடன் இறைவன் நீண்ட நெடிதுயர்ந்த மரம் என்றும் அம்மரத்தின் இலை, தளிர், மரங்கள் மனிதன் எனவும் இறைவனை கடல் நீர் என்றும், மனிதர்களை அந்நீரில் வாழும் மீன்கள் என்றும் சுட்டிகாட்டி உறவு முறையினை மேலும் இறுக்கமாக்கும் தன்மையை காணலாம்.

இறைவனை அடையும் பாதை மிகவும் கடினமானது என்றும் சில நுட்பங்களை நாம் கடைப்பிடிக்க வேண்டும் என்றும் கூறினாலும் பல பிறவிகள் கடந்து விடுதலை அடைவதற்காக வந்த மனிதபிறவி, மனித மனம் தூய்மை அற்று காணப்படுகிறது. எனவே இத் தூய்மையற்ற மனம் பூரணத்துவத்தை அடைய முடியாது என்பதனை

வலியுறுத்திக் கூறுகின்றார். எமது மனம் தூய்மையாகும் போது தான் இணைவு சாத்தியம் என்றும் இதற்கு குவளை முழுவதுமாக அசுத்த நீர் நிரப்பப்பட்டுள்ளது. தொடர்ந்து அதற்குள் தூய்மையான நீரை வாத்துக்கொண்டு இருக்கவேண்டும். தொடந்தும் ஊற்றும் போது தூய்மையான தண்ணீர் தூய்மையற்ற தண்ணீரை வெளியேற்றும். இவ்வாறு செய்தால் தூய்மையான நீரால் குவளை நிறையும் என்ற உதாரணம் மூலம் மனத்துக்கு எடுத்துக்காட்டி நல்வழியை ஏற்படுத்தி கொடுக்கின்றது.

இவ்வாறு மனிதன் மாயை என்கின்ற சம்சாரத்தோடு வாழ வேண்டும் அதனையே ஆனந்தமாகக் கருத கூடாது. கடவுளை மறக்கக் கூடாது என்று வலியுறுத்தி கூறுகின்றது. பிரார்த்திப்பதாலும், துதிப்பதாலும் மாத்திரமே விடுதலை அடைவது சாத்தியம் என முடித்து கூறுகின்றது.

உசாத்துணை நூல்கள்:

1

கி.எஸ்.டி. நானன்.செ.(1999)தத்துவ தரிசனங்கள் மணிவாசக பதிப்பகம் சென்னை

2

கரிக்கான் குஞ்சு.அ(தமிழில்) (1976) இந்திய தத்துவ இயலில் நிலைத்திருப் பனவும் அழிந்தனவும்.சென்னை புக்ஸ், சென்னை.

3

பாலுசாமி.நா.வாழ்வியற் களஞ்சியம். தொகுதி 09 தமிழ் பல்கலைக்கழகம். தஞ்சாவூர்

4

http//ta.wikipedia .org/wiki/......

# THE IMPORTANCE OF MASTERING ENGLISH

B.Sasikumar

Teacher of English

J/Analaitivu

Vadaloor G.T.M. Vidyalaya

A language is a systematic means of communication by the use of sounds or conventional symbols. It is the code we all use to express ourselves and communicate to others.

Language plays an important role in human life. One tries to acquire, learn, and use language as a means of communication and simultaneously as a social symbol of humanity. By using language someone could make statements, convey facts and knowledge explain or report something and keep social relations among the language users. These indicate that by means of language, people can express their ideas, feeling, information etc. through communication. It is the basic capacity that distinguishes humans from all other living beings. Language therefore remains potentially a communicative medium capable of expressing ideas and concepts as well as moods, feelings and attitudes.

As one of the languages in the world, English is considered and applied as an international language. Since then, it is very popular and spoken and learnt by most people in the world. There are some reasons why English is important and many people attempt to learn it. Some of them are: for finding jobs, travelling, interacting one each other, doing business, taking

examinations, doing researches, speaking with foreigners, etc

In such developing countries like India and Srilanka, English has a vital role in all aspects of life, particularly in science and technology. Furthermore, it can be used for developing relationships in the international forum , for reading English books especially for students from primary schools upto colleges and universities to build up the relationships among nations in the world, etc, As students, we learn English with the intension to obtain various knowledge, to comprehend and understand the text books learned in English, to gain knowledge and skills and to be ready to enter the university as one of the test requirements for students. Looking at the above important roles of English, that is why English is very important to be understood and to be mastered by everyone throughout the world.

In conclusion, I quote a wise expression: "English will make everybody survive and go anywhere." Shakespeare says English is a window to the world. The expressions remind us how far English is very important to human life. As global or universal language, English not only enables us to communicate and interact with everyone throughout the world, but also it could alter our life for the better. Furthermore, we also must be aware that the western countries play extra ordinary role in developing and keeping Science and technology. English is a key to open and master Science and technology because most of the scientists write their articles and about inventions in English. Thus, if we want to be skilful scientists, linguists and to be able to compete with the other countries in the world, we must understand, master and learn the language they use, namely English.

English is a compulsory subject for G.C.E. (O/L), G.C.E. (A/L), and for courses in Universities in Srilanka too. We will not be able to live in the world without English in future. Goethe, a Greek philosopher has said: "Knowing is not enough, we must apply. Willing is not enough, we must do." Remember: Language indicates nation. And don't forget "English is a bridge for the future." English is the most useful language in the world. English determines future.

# Let's learn about Internet

Miss.M.Mayoora
**English Course**
**2nd year**
**Jaffna National College of Edu.**

Hello readers , have you heard about the Internet? Dont worry.Just read . The Internet is the millions of computers connected via the network connection , to share the information at anytime and anywhere.

What are the things you want to connect the Internet service ? If you want Internet connection you should have phone line , IPS Internet software and a modem with connected with the computer. When you have all the things you feel free to connect.

Ok, let's move into types of Internet connections. You can find four types of connections when you connect it.

i. TCP/IP Dial – up connection.

ii. ISDN Dial – up connection.

iii. LEASED line connection.

iv. DSL connection.

After getting the internet service you have to consider about search engines , because of there are lost of information in the internet ,but actually we do not know how we can get needful information from that encyclopedia. So these search engines facilities the persons to find out the information via the internet. When you intend to do crucial things it takes place very important part in helping you.

Finally let's concern about what are the benefits we are getting from the internet by using it .

- Getting wanted information very easily.
- Obtain e – mail facilities.
- Having conversation facilities all over the world.
- Making facilities in commerce (e – commerce).

- Getting news faster than other services.
- Having facilities to get to know the examination results easily.
- Making file transfer.

Not only these kinds of benefits , but also a lot of we are getting from the internet.

Next we are going to have small description about electronic mail or e – mail. This is the process of sending messenger directly from one computer to another. These messages can be sent back and forth at any time. The cost of sending e – mail is quite minimal. It is lesser than a normal phone call but if faster than "snail mail" mail that travel through postal services ,depending on the modem's speed. Two parties can exchange e – mail from one country to another within a minute. That is why most of the people are using e – mail up to now for their message service.

There are two main methods to get e – mail facilities.

- Payable e – mail facilities.
- Free e – mail facilities(Hot mail , yahoo ,Gmail

A payable e – mail should be accessed with these software packages. Examples for such software

- Outlook express.
- Eudor
- Netscape

Although , we can access free e – mail through website , examples for such websites

,

- Excite mail
- Hotmail
- Gmail
- Mail.com
- Yahoo mail
- Mail city
- Lycos mail

# நன்றிகள்

ஒப்பாரும் மிக்காருமில்லா எம் ஆசான் திருவாளர் சபா.குகதாசன் அவர்களின் மணிவிழாவின் போது ஒரு நூலும் வெளிவர வேண்டும் என்று மணிவிழாக்குழுவினர் அவாக் கொண்டனர். இவ் எண்ணம் செயலுறுப் பெறுகிறது. இவ்வேளை.........

எண்ணம் செயல்வடிவம் பெறுவதன் பின்னணியில் ஒரு செயல்வீரர், அதிபர், ஆசிரியர், எனப் பல்பரிமாணங்களையும் கொண்டவர். இக்கடமைகளின் இடையே நூலுருப்பெற தன்நேரத்தை ஒதுக்கியவர். அவரின் நேரமுகாமைத்துவமும் நேர்த்தியான செயற்பாடும் இந்நூல் வெளிவரத்துணை நின்றது. இத்தகைய செயல்வீரர் அதிபர் திரு.சி.திரிகரன் அவர்களுக்கு எமது நன்றிகள்.

மணிவிழா நாயகனின் புகழ்சேர்க்கும் பகுதிக்கு ஆசியுரையும், வாழ்த்துக்களும் வழங்கிய கல்விப்பெரியார்களுக்கு மனமுவந்த நன்றிகள் பலகோடி.

அகவைப் படிகளில்...........எழுதுவதற்காய் மணிவிழா நாயகரோடு உரையாற்றும் போது சுவாரஸ்யமாக தன்னைப் பற்றிய வாழ்க்கைப் பதிவுகளை அளவளாவிய குகன் ஆசிரியருக்கு நன்றிகள் பலகோடி.

மணிவிழா இதழுக்கு ஆக்கங்கள் கேட்டவுடன் அவசர அவசரமாய் ஆக்கங்கள் வடித்து அனுப்பிவைத்தவர்களுக்கு என்றென்றும் நன்றிகள்.

தட்டச்சில் ஏற்பட்ட தவறுகளைத் திருத்தி ஒப்புநோக்கி உதவிபுரிந்த ஆசிரியை திருமதி.த.சுதாகரன் அவர்களுக்கு நன்றிகள்.

இறுதியாக...குறுகிய காலத்தில் இந்நூல் வெளிவர இறுக்கமான வேலைப்பளுக்களின் மத்தியிலும் எமக்கு உதவிபுரிந்து இந்நூலை பதிப்பித்துத் தந்த சாம்பிவி பதிப்பகத்தாருக்கும் எமது நன்றிகளை நவில்கின்றோம்.

யாருக்கேனும் நன்றி கூறாவிட்டால் அவர்களுக்கும் நன்றிகள்.

நன்றி

மலர்க்குழுவினர்














ஷாம்பவி பதிப்பகம், நீர்வேலி, & யாழ்ப்பாணம்.021 2224143